# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு சஎ | திருவள்ளுவர் ஆண்டு உ௦௦௪, ஆடி ஆகஃஃச்டு 1973 | பரல் கஉ


## 'தமிழில் எழுதுவோம்!'

இப்பரல் (செந்தமிழ்ச் செல்வி சிலம்பு சஎ பரல் கஉ) கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை யவர் களின் பவள விழா மலராக வெளியிடப் பெறுகின்றது. சிலம்பு 48 ஆவணித் திங்களிறுதியில் வெளியிடப் பெறும். அதன்கண் மொழிப் பேரறிஞர் தேவநேயப் பாவாணர் 'வேர்ச்சொற் கட்டுரை களும்', சட்டப் பேரறிஞர் மா. சண்முக சுப்பிரமணியம் 'இறைமையில் இசைந்த வாழ்வும்', கழக ஆட்சியாளர் எழுதும் பதிப்புத்துறையிற் கண்ட கருத்துரைகளும், மற்றும் அறிஞர்கள் எழுதும் ஆய்வுக் கட்டுரைகளும் குறிப்புகளும் செய்திகளும் முறையே வெளியிடப்பெறும்.

தமிழக அரசின் ஆட்சிமொழியாகத் 'தமிழ்' பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே அலுவலகங்களில் பயன்படத் தொடங்கி விட்டது. எனினும் இன்னமும் அலுவலகங்களில் பலர் இம் மாற்றத்தின் சிறப்பை நன்கு உணரவில்லை. பொது மக்களில் பலருக்குத் தாம் அலுவலகங்களுக்கு எழுதுங் கடிதங்கள் பல வற்றையும் தமிழிலேயே வரையும் உரிமை யுண்டு என்பது புலனாகாமலே இருக்கிறது. இக் குறையினை நீக்கும்பொருட்டு **ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார், எம். ஏ. 'தமிழில் எழுது வோம்'** என்ற தலைப்பில் பன்னிரு கட்டுரைகள் சஅ ஆம் சிலம்புக்கு எழுதுவதாக ஒப்புக்கொண்டிருப்பதை மிக்க மகிழ்ச்சி யோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

---

# பன்னருஞ் சீர்த்திப் பவளவிழா

[புலவர் இரா. இளங்குமரன்]

*பவள வண்ணப் பண்ணவனின்*
*பண்பார் உருவை நிலைபெறுத்தும்*
*தவளப் புகழின் பவளவிழாத்*
*தகைமை யறிந்து மகிழ்வோமால்.*

வளமார் வயிரமுத்துப் பிள்ளை அவர்கள் வழங்கிய வள்ளற் செல்வர், திருத்தகு திருவரங்கனார் இளவல். தாமரைச் செல்வர், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் **திருமிகு சுப்பையா பிள்ளை அவர்களின் பவளவிழா,** சென்னை மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில் 1973 ஆகஃச்டு 4. 5 (சனி, ஞாயிறு) ஆகிய இரண்டு நாள்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

பவள விழா என்பது புதிது படைத்துக் கொண்ட புகழ் விழா. வெள்ளி விழாவும், பொன் விழாவும், மணி விழாவும், முத்து விழாவும், நூற்றாண்டு விழாவும் நாடறிந்தவை. அவை முறையே 25, 50, 60, 80, 100 ஆண்டுகளின் நிறைவுக் குறியாகக் கொண்டாடப் பெறுபவை. பவள விழாவோ 75 ஆண்டு நிறைவுக்கெனப் படைத்துக் கொள்ளப் பெற்றது. ஆகலின் திரு. வ. சு. அவர்களுக்கு எடுக்கப் பெற்ற விழாவே பவள விழா வரலாற்றில் முதலும், முதன்மையும் அமைந்ததாகும்.

பவள விழாவுக்கு முதல் நாளே கழக ஆட்சிக்குழு உறுப்பினர்களும், பைந்தமிழ்ப் புலவர்களும், பயின்று கெழீஇய அன்பர்களும், உள்ளார்ந்த உவப்புடைய உறவினர்களும் அணி அணியாக 'வரம்பறியாமை வந்தீண்டத்' தொடங்கினர். 6, பவளக்காரத் தெருத் திருவரங்க நிலையமும், 105 இலிங்கிச் செட்டித் தெரு மறைமலையடிகள் நூல் நிலையமும் தங்கல் மாளிகைகள் ஆயின. நூல்நிலையத்தின் மேல் அமைந்த வள்ளலார் திருவருள் மண்டபம் விருப்பரு விருந்தினர் மாளிகை ஆயிற்று. 'வேண்டுவார்க்கு வேண்டுவன ஈவான் கண்டாய்' என்னும் இறைமைத் தன்மை நிறைவுற்றுத் திகழ்ந்தாற்போலக் கனிவோடு வரவேற்றுத் தனித்தனி பேணும் தகைமைத் தொண்டர்கள் தணியா ஆர்வத்துடன் கடனாற்றினர். ஆட்சியாளர், பொது மேலாளர், நூலகர், அலுவலர், அன்பர்

ஆகியோரின் இன்ப அன்பு மழையில் நனைந்து உள்ளந் தளிர்த்தனர்.

சுவைமிக்க உணவு வகைகள்; சிற்றுண்டிகள்; கண்ணமுது; தேநீர்; ஆவின்பால்; இன்னன, இன்னன! ஆம்! வள்ளல் பெருமகனார் திருவுருவப் படத்தின் முன்னே இருமருங்கும் இடப்பெற்ற இருக்கைகளில் அமர்ந்து அவிச்சுவையும், செவிச்சுவையும் மல்க அளவளாவி மகிழ்ந்துண்ட அரிய காட்சி நினைதோறும் நினைதோறும் இன்பம் பயப்பதாம். வள்ளலார் திருவுள்ளத்திற்கும் விள்ளரும் நிறைவு நல்குவதாகும்.

ஆகஃச்டு நான்காம் நாள் மாலை 4 மணி முதலே கழகத்தின் மகிழ்வுந்தும், வழங்கியங்கியும், வாடகை உந்தும் பவளவிழா மன்றத்திற்கு இடையீடின்றி விருந்தினர்களை ஏற்றிச் சென்ற வண்ணம் இருந்தன. ஆங்காங்கிருந்த அன்பர்களும், நண்பர்களும், ஆர்வலர்களும் பழமரம் நாடும் பறவைகள் என்னத் தத்தமக்கு வாய்த்த ஊர்திகளில் அணிபெற வந்து அவையில் அமர்ந்தனர்.

விருந்து மாளிகையில் இருந்து விழா மாளிகைக்குக் கடற்கரைச் சாலைவழியே இன்னுந்து சென்றகாலையில், ''தென்னன் தமிழின் உடன்பிறந்த'' இன்னிளந் தென்றற் காற்று தவழ்ந்து விளையாடியது. மாலைப் போழ்தின் மஞ்சள் வெயில் மகிழ்வூட்டியது; அலைமோதி ஆர்க்கும் ஆழ்கடலின் அழகுக் காட்சி ஒருபாலும், மலையோ, மைம் முகிலோ, மணி நிலா முன்றிலோ என்ன நிவந்தோங்கி எழுந்த நெடுமாளிகைகள் ஒருபாலும் அமைய, அம்பென விரைந்து சென்ற ஊர்தியில் அமர்ந்து சென்ற மாண்பு நெஞ்சில் நிலைபெறுத்தும் தன்மையதாம்.

''மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை'' என்றும், ''ஊர் திரை வேலை உலாவும் உயர்மயிலை'' என்றும், ''மடலார்ந்த தெங்கின் மயிலை'' என்றும் ஆளுடைய பிள்ளையாரால் அகமுவந்து பாராட்டப் பெற்ற திருமயிலையில் திரையுலகச் செல்வர், வள்ளல் திரு ஏ. வி. மெய்யப்ப செட்டியார் அவர்கள் கவினுற அமைத்துள்ள இராசேசுவரி திருமண மண்டபம் விழாக்கோலம் கொண்டு திகழ்ந்தது. 75 யாண்டு நிரம்பிய இளைஞரையும், அவர்க்கு விழாவெடுக்க விழைந்து வருகைதந்த பெருமக்களையும் ''வருக! வருக!'' என வாயார வாழ்த்தி வரவேற்பதுபோல வண்ணத் திருமாளிகையின் வளமார்ந்த வாயில் எழிலுடன் இலங்கியது.

''தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை பவளவிழா'' என்று பவள வண்ண எழுத்துக்களால் பொறிக்கப் பெற்ற

ஓவியத் திரை உட்புகு வாயிலில் திகழ்ந்தது. வாழையும் கமுகும், வகைபெறு தழைகளும், வண்ணத் தாள்களும், வனப்புற வாயில் தொட்டு விழாவரங்கம் காறும் இலங்கின. வேலைப்பாடமைந்த தென்னையோலைத் தொங்கல்கள் பக்கமெல் லாம் பளிச்சிட்டன. 'இவ்வண்ணம் எம் கைவண்ணம்' என்று காட்டு மாப்போல வண்ணக்கோலங்கள் வழியெல்லாம் வயங்கின.

பூங்கொடி நடையைக் கற்றுப் போந்ததோ, வீங்கொளி நிலவும் விழைவொடும் வந்ததோ என்னுமாறு பவளவிழாச் செல்வரின் பேரன் பேர்த்தியர் முல்லைச் சிரிப்போடு முத்துப் பனிநீர் இறைத்தனர்; முந்துற வந்து சந்தனந் தந்து இன்புற் றனர்; கற்கண்டும் 'உரோசா' மலரும் கனிவுடன் வழங்கிக் களித் தனர்; விழா வரங்கின் முகப்பு வாயிலில் பவள வண்ணப் பூக்களால் 'பவள விழா' என்று அமைத்திருந்த பாங்கும், மேடை அமைப்பும், இருக்கை அமைப்பின் எழிலும் விழாப் பொறுப்பேற்ற பெருமக்களின் செயல் மாண்பை விளக்கின.

விழா வரங்கை எய்து முன்னரே இசை வெள்ளத்தில் மிதந்து கொண்டே உள்ளே புகுந்து அவையோர் உவப்புற் றனர். அணியணியாக அமைந்திருந்த இருக்கையில் அமர்ந்து ஆரா இன்பத்தில் ஆழ்ந்தனர். அரங்கின் மேல்பால் அமைந்த திருமண மேடையில் இருந்து குழலிசைக் கலைஞர் சைதை நடராசனின் நாதசுர இசைமாரி பொழிந்தது; கீழ்பால் அமைந் திருந்த விழா மேடையில் அம்பலக் கூத்தன் அருட்காட்சி வழங்கிக் கொண்டிருந்த அழகுக் காட்சி மன்றத்திற்குத் தனிச் சிறப்பாக அமைந்தது.

அரங்கில் அமர்ந்த அவையோர் திருநோக்கம் தென்பால் அமைந்த விருந்துப் பேரறையில் படர்ந்தது. அறுசுவை விருந்துகளே கண்ட அத்திருமண விருந்துக் கூடம், அமிழ்தினும் இனிய அருந்தமிழ் விருந்து மாளிகையாய் இலங்கியது! அரும்பாடுபட்டுத் தொகுத்து வைத்த கருவூலமாகிய காட்சிக் கூடம், "அருந்து அமிழ்து" என்று ஏவிக் கொண்டிருந்தது.

"தமிழில் என்ன இருக்கிறது? என்று வினவுபவர் ஒரு முறை கழகத்திற்குப் போய் வந்தால் என்ன இருக்கிறது என்பது புரியும்" என்று கூறிய **பேரறிஞர் அண்ணா** அவர்களின் திருவுருவப் படமும், அவர்தம் படைப்புகளும் காட்சியின் முகப் பிடத்தில் இருந்தன. அதனை அடுத்துக் கழகத் தந்தையார் **திருவரங்கனார்**, தவத்திரு **மறைமலை யடிகளார்** திருவுருவப் படங் களும், அடிகளார் படைப்புகளும், பதிப்பு நூல்களும், இன்ப எழிற்காட்சி வழங்கியது. அவற்றை யடுத்துக்

கையெழுத்துப் படிகளும், கடிதங்களும், நாட்குறிப்புகளும் காட்சி வழங்கிக் கண்டோரைக் கழிபேரின்பத்தில் ஆழ்த்தின. அவ்வாறே நாட்டியற் புலவர் **பாரதியார்**, விழுத் தொண்டர் **வீரமாமுனிவர்** முதலாய பெருமக்கள் படங்களும், படைப்புகளும் வரிசை வரிசையாய் வைக்கப் பெற்றிருந்தன. சுவர்ப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான புலவர் பெருமக்களின் ஏற்றமிகு திருவுருவப் படங்கள் எழிலுற விளங்கின. அவர்கள் கைச் சாத்துகளும், கடிதங்களும் ஆங்காங்கு அமைந்தன. கழகத்தின் வெளியீடுகளும், எங்கும் காண்டற்கரிய தொன்மையவாம் பதிப்பு நூல்களும் காட்சி மேடையைப் பொலிவுறுத்தின. தமிழுணர்ச்சி யூட்டும் செய்திகளும், தமிழ் நலங்காக்கும் அறிக்கைகளும், வெளியீடுகளும், விளம்பரங்களும் மின்னின. அறிஞர் **பா. வே. மாணிக்க நாயகர்** செய்த மொழியியல் கணக்கியல் ஆய்வு அட்டைகள் அழகுற மிளிர்ந்தன.

அரிதின் முயன்று அடைதற்குரிய அறிவுக் குவையினை, "கனிதந்தால் கனி உண்ணவும் வல்லிரோ" என்று கனிவோடும் அழைத்து வழங்கியது போலக் காட்சி நிலையம் விளங்கியது. தம்மை மறந்து நின்றவர் பலர்; தனியே ஓர் இடத்தே நின்று தணியா ஆர்வத்தால் நோக்கியவர் பலர்; கால்கடுக்க நின்றும், மண்டியிட்டு நின்றும், கால் மடக்கி அமர்ந்தும் குறிப்புகள் எடுத்துக்கொண்டவர் பலர்; அவருள்ளும் நம்பியரினும் நங்கையர் மிகப் பலர். "கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி"கட்குக் கூட்டுண்ணும் தேட்டு எளிதில் வாய்ப்பின் ஆர்வத்திற்கு 'அடைக்குந் தாழ்' உண்டோ ?

சரியாக மாலை 6-30 மணிக்கு விழாத் தொடங்கியது. **இசைப் பேரரசி சேலம் செயலக்குமி** அவர்கள் "நீராரும் கடலுடுத்த" என்னும் தமிழ் வாழ்த்துப் பாடலை இனிதுறப் பாடினர். மாண்பமை ஆளுநர் **கே. கே. ஷா** அவர்கள் நடு நாயகமாய் அமர இருபாலும் செட்டிநாட்டரசர் இராசா சர். முத்தையா செட்டியாரவர்களும், அமைச்சர்களும், நடுவரவர்களும் பவள விழாச் செல்வர் அவர்களும் அமர்ந்திருந்த திருவோலக்கக் காட்சி மேடை எழிலுக்கு மேலும் எழிலூட்டியது.

பவளவிழாக் குழுவின் தலைவரான மாண்புமிகு நலத்துறை அமைச்சர் **பேராசிரியர் க. அன்பழகன்** அவர்கள் தேனினும் இனிய தீஞ் சொல்லால் வரவேற்புரை வழங்கினர். ஆளுநர் அவர்கள் எளிதிற் காண்டற்கரிய தனிப் பெருவிழா இஃதெனப் பீடு நடையில் பிறங்கும் வண்ணம் உரைத்து, நெல்லையின் எல்லையிலாப் பெருமையையும், வண்டமிழ் மொழியின் வளப்

யையும், தாமரைச் செல்வரின் தகுதி மேம்பாட்டினையும் இனிது மொழிந்து விழாவைத் தொடங்கி வைத்தனர்.

'தேடும் பொருளெல்லாம் திருத் தொண்டுக்கே' என வழிவழி வாழும் வளர்குடியில் வந்த வள்ளல் பெருமகனார் **செட்டிநாட்டரசர் இராசா சர் எம். ஏ. முத்தையா செட்டியார்** அவர்கள் உள்ளார்ந்த அன்பு ஊற்றுப் பெருக்கெடுக்கப் பவள விழாச் செம்மலின் பண்பு நலங்களைப் பாராட்டித் தலைமையுரை நிகழ்த்தி அவருக்குப் பொன்னாடையும் போர்த்தினர்.

தமிழக முதல்வர் மாண்புமிகு **கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி** அவர்கள், தாமரைச் செல்வரின் தளராத தமிழ்த் தொண்டினைப் பாராட்டிப்பேசி, பேராசிரியர் சுந்தரம் பிள்ளை நாடகப் போட்டியில் பரிசுபெற்ற **புலவர் ஆ. பழநி** அவர்களின் **'அனிச்ச அடி'** என்னும் நூலின் திறங்களை நயந்து பாராட்டி நல்லுரை கூறி வெளியிட்டு நூலாசிரியர்க்குக் கழகச் சார்பில் பொன்னாடை போர்த்தி 1,000 வெண் பொன் பரிசு வழங்கினர்.

கல்வியமைச்சர் **மாண்புமிகு நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** அவர்கள், கலைக்களஞ்சியமாய், கவின்மணிப் பேழையாய், தீந்தமிழ்ப் பூங்காவாய்த் திகழும் **பவள விழா மலரை** வெளியிட்டுப் பாராட்டுரைத்தனர்.

உயர்நீதி மன்ற நடுவர் **மாண்பமை எஸ் மகராஜன்** அவர்கள் கவின்மிகு காட்சியினைத் திறந்து வைத்து ஆட்சியாளர் திரு. வ. சு. அவர்கள் காட்சிப் பொருள்களைத் தொகுப்பித்த உலைவிலா முயற்சிகளை உளங்கொளப் பாராட்டி உவகை கூர்ந்தனர்.

பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் **திருமிகு எஸ். வி. சிட்டிபாபு** அவர்கள் பவளவிழாச் செல்வரின் எடுத்துக்காட்டாம் வாழ்வினைக் கேட்டவர் உள்ளம் கிளர்ச்சிகொள எடுத்துரைத்தனர்.

தாமரைச் செல்வரின் தனித்தமிழ் உள்ளத்தினின்று சுரந்த தணியா உணர்வுப் பெருக்காம் நன்றியுரையுடனும், நாட்டுப் பண்ணுடனும் முதற்பொழுது நிகழ்ச்சி நிறைவுற்றது.

மேடையில் மின்னி முழங்கிச் சொன்மழை பொழிந்ததைக் கண்டு நாணினாற் போல நள்ளிரவில் வானம் மின்னி முழங்கிப் பேரிடி யிடித்துப் பெருமழை பொழிந்தது. காலைப் பொழுது, "கூதன்மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம்" சென்னைக்குக் குடிவந்து விட்டதோ என்று எண்ணுமாறு இருந்தது. மெல்லிய தண்ணிய சாரல்! மைம் முகிலின் மலர்த் தூவல்! விழாச் செல்வருக்கும் விழைவாளர்க்கும் வெயிற் கொடுமை நேராமல்

வியத்தகு பருவ இன்பம் பாலிக்க இயற்கையன்னை வழங்கிய இணையற்ற கொடை என்று வியக்கும் வண்ணம் நாள்முழுமையும் நன்கனம் பருவநிலை அமைந்தது.

5—8—73 காலை 9-30 மணியளவில் உயர்நீதிமன்ற நடுவர் **மாண்பமை பு. ரா. கோகுலகிருட்டிணன்** அவர்கள் புகழார்ந்த தலைமையில் விழாவின் இரண்டாம் பகுதி தொடங்கிற்று. **டாக்டர் மெ. சுந்தரம்**அவர்கள் விழாவில் பங்கு கொள்வோர் பெயரும் பீடும் பெரிதுரைத்துப் பாராட்டி வரவேற்றனர். முன்னாள் முதல்வர் திரு. மீ. **பக்தவத்சலம்** அவர்கள் தாமரைச் செல்வரின் அயரா முயற்சியினை அன்புமீதூர எடுத்துரைத்துப் பாராட்டினர். சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தாமரைத் திரு. **நெ. து. சுந்தரவடிவேலு** அவர்கள் அள்ளிப்பொழியும் அருமழை என்னப் பொழிந்து வாழ்த்துரை வழங்கினர். **டாக்டர் சி. பால சுப்பிரமணியம்** அவர்கள் டாக்டர் ஜி. யு. போப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பெற்ற புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூற்றுப் பாடல்களால் ஆகிய 'Tamil Heroic Poems' என்னும் நூலின் வனப்பமை திறங்களையும், ஆசிரியர் வாழ்க்கைச் சிறப்புகளையும் விரித்துக் கூறிப் பவள விழா நினைவாக வெளியிட்டனர். சட்டப் பேரறிஞர் திரு. **மா. சண்முக சுப்பிரமணியம்** அவர்கள், மொழிப் பேரறிஞர் திரு. **தேவநேயப் பாவாணர்** அவர்கள், நூலக இயக்குநர் திரு. **வே. தில்லை நாயகம்** அவர்கள், திரு. **ஔவை நடராசன்** அவர்கள், குழந்தைக் கவிஞர் திரு. **அழ. வள்ளியப்பா** அவர்கள் ஆகிய பெருமக்கள் பவள விழாச் செம்மலின் அணிமிகு பணிகளில் தோய்ந்து நெஞ்சார்ந்த உவகையால் நேயமுறப் பாராட்டினர். பவள விழாவின் நினைவாக வருகை தந்த அனைவருக்கும் ஊற்றெழுதுகோலுடன் கூடிய 'கையேடு' அன்பளிப்பாக வழங்கப்பெற்றது. விழாப் பெருமகனாரின் நன்றியுடன் நண்பகல் ஒரு மணியளவில் விழா நிறைவுற்றது.

விழாவின் மூன்றும் பொழுது நிகழ்ச்சி மாலை 4 மணிக்குத் தொடங்கியது. ஆடற்கோலத் தமைந்த அம்பலவாணர் திருவுருவச் சிற்பத்திற்கு முன்னே இசைப் பேரரசி **சேலம் செயலக்குமி அம்மையார்** 'பண்ணினேர் மொழி'யால் திருமுறை இன்னிசை பொழிந்தனர். பருந்தும் நிழலும் என்னப் பண்ணும் பாடலும் பொருந்தித் திகழ்ந்த பான்மை யுணர்ந்து 'தாண்டவம் புரிய வல்ல தம்பிரா'னைக் காட்சியளிக்கிறார் என்று எண்ணுமாறிருந்தது. வரலாற்றுச் சுருக்கக் குறிப்பும், பாடப்பெறும் பாடல் முதற் குறிப்பு, அதன் பண், தாளம் அதனை இயற்றியவர் பெயர் ஆகியவற்றையும் அச்சிட்டு அனைவருக்கும் முதற்கண்ணே

வழங்கிய செயல் அவையோர் பெரும்பாராட்டுக்கு உரிமை யாயிற்று.

பொருளியற் பேரறிஞர் **டாக்டர் பா. நடராசன்** அவர்கள் பண்பார் தலைமையில் மாலை 5-30 மணிக்குப் பவள விழாவின் மூன்றும் பகுதி நிகழ்ந்தது. **டாக்டர் ந. சஞ்சீவி** அவர்கள் பதிப்பாளர் பண்பு நலங்கள் இன்னவெனப் பல்வேறு அறிஞர் களின் ஆராய்ச்சி முடிவுகளுடன் ஒப்பிட்டுரைத்து அனைத்திலக் கணங்களும் ஒருங்கே அமைந்த பதிப்பாளர் இவர் என விழாச் செல்வரைப் பாராட்டிச் செந்தமிழ் அன்பால் செவ்விதின் வர வேற்றனர். பன்மொழிப் புலவர் டாக்டர் **தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்** அவர்கள் கழகப் பணிகளின் கவின் சிறப்புக்களை எடுத் துரைத்துத் தொடக்கவுரை யாற்றினர். சிலம்புச் செல்வர் தாமரைத் திரு **ம. பொ. சிவஞானம்** அவர்கள், பொறியியற் கல்லூரிப் பட்டமேற்படிப்பு முதல்வர் (டீன்) டாக்டர் **வ. செ. குழந்தைசாமி** அவர்கள், கவிதைச் செல்வி திருவாட்டி **சௌந்தரம் கைலாசம்** அவர்கள், திரு. **க. ப. அறவாணன்** அவர்கள், தவத்திரு **சுத்தானந்த பாரதியார்** அவர்கள் பவள விழாப் பெருமகனாரின் பல்வேறு பணித் திறங்களையும் பைந்தமிழால் பாராட்டினர். அம் மாலைநேர நிகழ்ச்சி முழுவதிலும் திரு. பிள்ளையவர்கள் தம் அருமைத் துணைவியாரான திருவாட்டி மங்கையர்க்கரசியம்மையா ரோடு மேடைமீது அமர்ந்திருந்தனர். கழக ஆட்சிக் குழுவினர் சார்பிலும், பல்வேறு அமைப்புகள், சான்றோர்கள் சார்பிலும் தாமரைச் செல்வர்க்கு வாழ்த்துகள் வழங்கப் பெற்றன. மாலைகள் சூட்டப் பெற்றன.

தமிழையும் சைவ சமயத்தையும் தமிழ் மக்கள் நன்குணரா திருந்த காலத்திலே துணிவோடு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைக் கூட்டுப்பங்கு நிறுவனமாகத் தோற்றுவித்து 53 ஆண்டுகளில் பல துறைகளில் 1500 நூல்களை வெளியிட் டுள்ளனர் திருவரங்கனாரும் அவர்தம் இளவல் திரு சுப்பையா பிள்ளையும். பன்னிரு திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள், சிவஞான பாடியம், சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம், தாயு மானவர் பாடல், பட்டினத்துப் பிள்ளையார் பாடல், சிவஞான முனிவர் இலக்கியக் கோவை, குமர குருபரர் இலக்கியக் கோவை, சிவநெறிச் செய்யுட்டிரட்டு, கல்லாடம் உரை, சைவசித்தாந் தத்தை விளக்கும் சிறு சிறு நூல்கள், மலர் வழிபாட்டு நூல்கள் முதலிய பலவகைச் சமய நூல்களை யெல்லாம் அயராது தனிப் பெரு முயற்சிகொண்டு வெளியிட்டிருப்பதோடு நெல்லையில் சிவஞானமுனிவர் நூல் நிலையத்தையும், குமரகுருபரர் குழந்தைப் பள்ளியையும், திருவள்ளுவர் புலவர் கல்லூரியையும், சென்னையில் மறைமலை யடிகள் நூல் நிலையத்தையும் சிறப்புற

தாமரைச் செல்வர், வ. சுப்பையா பிள்ளை

# பவள விழா

இடம்: மயிலை ஏ. வி. எம்.
இராசேசுவரி திருமண மண்டபம்

4-8-'73 சனிக்கிழமை மாலை நிகழ்ச்சிகள்



விழாவினைத் துவக்கிவைக்கத் தமிழக ஆளுநர்
மேதகு கே. கே. ஷா வருகை புரிதல்

செட்டிநாட்டரசர் சர் முத்தையா செட்டியார் அவர்கள்
தலைமையில் நடைபெற்ற பவள விழாவில்
தமிழக முதல்வர்
மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி
'அனிச்ச அடி' நாடக நூலை வெளியிட்டார்.



விழாக்குழுத் தலைவர், தமிழக நலத்துறை அமைச்சர்
மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்
வரவேற்புரை யாற்றுதல்



தமிழக ஆளுநர் மேதகு கே. கே. ஷா அவர்கள்
தொடக்கவுரை நிகழ்த்துதல்



தமிழகக் கல்வி அமைச்சர்,
மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்
'பவளவிழா மலர்' வெளியீட்டுரை நிகழ்த்துதல்



பன்னருஞ்சீர் பவளவிழா மலரைத்
தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களிடம்
மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் வழங்குதல்



உயர்நீதிமன்ற நடுவர்
மாண்பமை எஸ். மகராஜன் அவர்கள்
பவளவிழாக் காட்சித் திறப்புரை யாற்றுதல்



இராசா சர். மு. அ. முத்தையா செட்டியார் அவர்கள்
தலைமையுரை நிகழ்த்திப் பவளவிழாச் செல்வருக்குப்
பொன்னாடை போர்த்துதல்



தமிழக முதல்வர்,
டாக்டர் கலைஞர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள்
விழாச் செல்வரைப் பாராட்டுதல்



மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை நாடகப் போட்டியில்
பரிசு பெற்ற 'அனிச்ச அடி' நூலாசிரியர் புலவர். ஆ. பழநிக்கு
டாக்டர் கலைஞர் அவர்கள் ரூ. **1,000** பரிசளித்தல்



தமிழகப் பள்ளிக் கல்வி இயக்குநர்
உயர்திரு எஸ். வி. சிட்டிபாபு அவர்கள்
பாராட்டுரை பகர்தல்



பவளவிழாச் செல்வர்
தாமரைத்திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள்
ஏற்புரை நிகழ்த்துதல்

நடத்திவரும் தாமரைத் செல்வர் வ. சுப்பையா பிள்ளை யவர் கட்குச் சிறப்பாக நடத்தப் பெற்ற பவள விழாவிலே சைவத்திரு மடங்களொன்றுங் கலந்து கொள்ளவில்லை. ஆனால், தவத்திரு குன்றக்குடி யடிகளார்மட்டும் தாம் கலந்துகொள்ள முடியாமை யினைக் கம்பிவழித் தெரிவித்துப் பாராட்டுரை வழங்கியருளி யுள்ளனர்.

கழக நூலாசிரியர் முதுபெரும் புலவர் இராவ்சாகேப் கு. கோதண்டபாணி பிள்ளை யவர்கள், புலவர் இரா. இளங்குமரன் அவர்கள் ஆகிய இருவரையும் பாராட்டியுரைத்துத் தொழிற் செல்வர் வள்ளல் நா. மகாலிங்கம் அவர்கள் சார்பில் அவர்தம் மருகர் திரு வாணவராயரால் மாலை அணிவிக்கப் பெற்றது. கழகச் சார்பில் திரு. க. ப. அறவாணன் அவர்கள் பாராட்டுரைத் தனர். சிலம்புச் செல்வர் அவர்கள் கழகச் சார்பில் இருபெரும் புலவர்கட்கும் பொன்னுடை போர்த்தி அம்பலவாணர் திருவுரு வமைந்த கவின்மிகுதட்டம் வழங்கி வாழ்த்தினர்.

செந்தமிழும் சிவநெறியும் தம்மிரு கண்களெனக் கொண்டு, கழகத் தொண்டு புரியும் 'தமிழ்நூற் காவலர்', 'சித்தாந்தக் காவலர்' திருமிகு வ. சு. அவர்கள் கழகத் தொடக்கம், வளர்ச்சி, தொண்டு ஆகியவற்றை விரித்துக் கூறித் தம் தமையனார் திருவரங்கனார் முதலாய பெருமக்கட்கும், விழாவில் பங்கு கொண்ட திருவாளர்களுக்கும், கழக அலுவலர், அச்சகப் பணி யாளர், அவையோர், அன்பர் ஆகிய அனைவருக்கும் அகங் கனிந்த நன்றி யுரைத்தனர். நாட்டுப் பண்ணுடன் விழா இனிது நிறைவுற்றது.

பவள விழா புதுப்படைப் பென்பதைக் குறிப்பிட்டோம். அவ் விழாவில் கலந்து கொண்ட பெருமக்களுக்குச் சூட்டப் பெற்றவைஎன்றும்விடாத்தண்ணறுஞ்சந்தனமாலைகள். அவற்றின் தொங்கல் பவள வண்ணப் பட்டுத்தோல் உறை அமைந்த உள்ளங்கைக்குள் அடங்கும் ஒள்ளிய பொதுமறையாம் திருக் குறள்! மாலையை எடுத்துச் செல்லுதற்கெனப் பவள வண்ணப் பை வழங்கப்பெற்றது.

பெருகி வழிந்தது கூட்டம்! மேடைப் பேச்சை அன்றி வேறு பேச்சறியாப் பேரவை! பருகுவார் அன்ன ஆர்வத்தராய்ப் பண்போடு அமைந்த சான்றோர்! பண்பாடே உருக்கொண்ட பயன்மிகு விழா! எடுத்துக் காட்டாக எண்ணி இறும்பூது எய்தத் தக்க இனிய விழா! அவ்விழா மேடையில் இருந்து மழையாய், அருவியாய், ஆறாய்ப் பெருகிவந்த பொழிவுப் பொருள் புகலரும் நலத்தின் உறையுள்! அதனை மேலே கண்டு அக மகிழ்க!

---

# சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர்

# வ. சுப்பையா பிள்ளை அவர்களின் பவளவிழா

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்களின் பவளவிழா 1973 ஆகஃச்டு 4, 5 (சனி, ஞாயிறு) ஆம் நாள்களில் சென்னை மயிலை இராசேசுவரி திருமண மண்டபத்தில் இன்னிசை நிகழ்ச்சிகளோடு தொடங்கிச் சிறப்புற நடைபெற்றது.

## வரவேற்புரை

விழாக்குழுவின் தலைவரும், தமிழக நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ., அவர்கள் அனைவரையும் வரவேற்று அரியதோர் உரையாற்றினர். உரைச்சுருக்கம் வருமாறு:

தமிழக ஆளுநர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களே, செட்டி நாட்டரசர் இராசா சர் முத்தைய செட்டியார் அவர்களே, கல்வி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களே, பாராட்டுதலுக்கும் பெருமதிப்பிற்குமுரிய தாமரைச் செல்வர் சுப்பையா பிள்ளை அவர்களே, விழாவில் உரை நிகழ்த்தவிருக்கின்ற பெரியோர்களே, தாய்மார்களே, நண்பர்களே,

தமிழகத்தினுடைய மொழி வளர்ச்சியிலும் இலக்கியப் பெருக்கத்திலும் மிகப்பெரிய அளவிற்குப் பணியாற்றி வெற்றியும் கண்ட நமது மதிப்பிற்குரிய தமிழ்க் காவலர் சைவ சித்தாந்தக் கழகத்தின் தலைவர், தாமரைச் செல்வர் சுப்பையா அவர்களின் பவளவிழாவினைச் சீரோடும் சிறப்போடும் நடத்தப் பலரும் விரும்பி அதற்கான அமைப்பினை உருவாக்கி அதற்கு நான் தலைவராக இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களுடைய துணிச்சலைப் பெரிதும் பாராட்ட வேண்டும். வேலை செய்யக் கூடியவர்களைத்தான் தலைவராக இருக்கச் செய்வது மரபு. ஆனால், எனக்கு ஓய்வில்லை. என்றாலும் எனக்கும் அதில் ஓர் இடம் தர வேண்டுமெனக் கருதி இந்தப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பொறுப்பை நிறைவேற்ற நான் இங்கு நிற்கின்றேன்.

உள்ளபடியே, சைவசித்தாந்தக் கழகத்தை இயக்கி, அதன் மூலம் மங்கிக் கிடந்த தமிழார்வத்தைத் தட்டியெழுப்பிச் செயல்படுத்தித் தமிழரது நெறியைத் தமிழ்நாட்டு மக்கள் உணர்வதற்கான வகையில் மறைந்திருந்த இலக்கியங்களைப் புலப்படுத்தி, அதன்மூலம் மறைந்திருந்த பொருளையெல்லாம் பிறருக்குப் புலப்படுத்தத் தக்க வகையிலே உரை நூல்களை உருவாக்கி வளம் உள்ளவர்களும் திறன் உள்ளவர்களும் தங்களுடைய இல்லங்களிலே ஒரு தமிழ் நூல் நிலையத்தை அழகாக வைத்துப் பார்த்துப் பெருமைப்படத்தக்க வகையில் தமிழ்நாட்டில் அந்தச் செல்வத்தைத் தேடித்தந்த பெருமை வ. சு. அவர்களைச் சாரும்.

75 ஆண்டுகட்கு முன்பு பிறந்தவர்கள் இன்னும் இளமை ஆர்வத்தோடு கழகத்தை வளர்த்து இதுவரை 1,500 நூல்களை வெளியிட்டிருக்கிறார்கள். தொல்காப்பியம் போன்ற அறிவுச் செல்வங்கள் தமிழருக்கு உரியனவாயினும் தமிழன் அதை அறியமாட்டான் என்ற நிலை நீண்ட காலம் இருந்தது. மறைமலையடிகள் காலத்திற்கு முன்பு தமிழின் தனிச்சிறப்பை உணர்த்துவாரில்லை. அவர் உணர்த்திய பின்பும் அது நீடிக்குமா என்ற நிலை இருந்தது.

முத்தமிழ்ச் சங்கங்கள் தமிழ்நாட்டில் இருந்தன என்ற போதிலும் இன்றுவரை ஒரு தமிழ்ச் சங்கம்கூட நிலை நிறுத்தப் படவில்லை. நிறுத்துவது தமிழருக்குக் கடினமான காரியமாக இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆனால், திருவரங்கம் பிள்ளை அவர்களும் அவர்தம் இளவல் சுப்பையா பிள்ளை யவர்களும் இணைந்து பணியாற்றியதன் விளைவாகச் சைவசித்தாந்தக் கழகம் இன்றைய தினம் ஒரு தமிழ்ச் சங்கமாக விளங்குகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

20 ஆம் நூற்றாண்டில் சங்கத்தை உருவாக்கிய வ. சு. அவர்கட்கு இன்று பவளவிழா—பிளாட்டினம் ஜுப்ளி—75 ஆம் ஆண்டு நிறைவு கொண்டாடப்படுகிறது என்றால் இன்னும் 25 ஆண்டுகள் குறைவு இருக்கிறது. அது 100 ஆண்டு விழாவாக வெற்றிபெற வேண்டுமென்று நான் விரும்புகிறேன். விடாமுயற்சி உடையவர்கள் 100 ஆண்டு வாழக்கூடும் என்பதற்குத் தந்தை பெரியார் இராமசாமி அவர்கள் எடுத்துக் காட்டாக நாட்டில் உறுதியோடு உலவி வருகின்றார்கள். அது போன்று வ. சு. அவர்கள் நூறாண்டுகள் வாழ்ந்து தமிழுக்கும் தமிழருக்கும் பணியாற்ற வேண்டும் என வாழ்த்தி உங்கள்

அனைவரையும் வரவேற்று, விழா வெற்றிபெற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**தொடக்கவுரை**

தமிழக ஆளுநர் மாண்பமை கே. கே. ஷா அவர்கள் ஆற்றிய தொடக்கவுரைச் சுருக்கம் :

ஒரு பதிப்பகத் தலைவரின் 75 ஆம் ஆண்டு நிறைவு விழா நடைபெறுவது மிகமிக அரிது. அதனினும் அரிது அதனை ஆர்வத்தோடு கொண்டாடும் நண்பர்களைக் காண்பது. எனவே, திரு பிள்ளை யவர்களைப் பாராட்டுவதை விட அவரைப் பாராட்டும் உங்களை மிகுதியாகப் பாராட்டுகிறேன். சை. சி. நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட திருக்குறள் தெளிவுரை 8 இலட்சத்திற்கு மேல் விற்பனையாயிற்று என்பதைக் கேட்டு நான் வியப்புற்றேன். திருக்குறளைப் பரப்புதற்கு ஒரு நிலையம் அந்த அளவிற்கு மேற்கொண்ட முயற்சி பாராட்டத் தக்கது. இங்ஙனம் தமிழுக்குப் புத்துயிர் அளித்த அவர்களைப் பாராட்டு கிறேன். தமிழ் பல அறிவியல் உண்மைகளை உள்ளடக்கியது என்பதை நாம் மறந்துவிட்டோம். உலக அறிவைப் பெற வேண்டுமானால் ஆங்கிலத்தின் துணை வேண்டும் என்ற மனோநிலை பிரித்தானியரால் பரப்பப்பட்டுவிட்டது.

இந்திய நாகரிகம் கி. மு. 4,000 ஆண்டுகட்கு முற்பட்டது என்று சொல்கிறார்கள். புதைபொருள் ஆராய்ச்சியிலிருந்து இது நூறாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டது என்று தெரியவரு கிறது. மொகஞ்சதாரோ, அரப்பா அகழ்வாராய்ச்சிகளிலிருந்து காணப்படும் தமிழ் எழுத்துக்களின் படிவம் எல்லாவற்றுக்கும் முற்பட்டது என்று அறியக் கிடக்கிறது. அத்தகைய சிறப் புடைய மொழிக்குரியவர்கள் தமிழர்கள். நாகரிகமே தெற்கி லிருந்துதான் உலகெங்கும் பரவியுள்ளது.

இத்தகைய மொழியைப் போற்றிப் பரப்ப ஆங்கிலத்தில் பல நூல்களை மொழிபெயர்த்தாக வேண்டும். நல்ல கலைச் சொற்களை உருவாக்க வேண்டும். திரு சுப்பையா பிள்ளை தனி மனிதராக இருந்து ஆங்கில ஆக்க நூல்கள் பலவற்றைப் பதிப்பித்திருப்பது கண்டு நான் வியப்புற்றேன்.

முயற்சியில் வெற்றிபெறுவதென்பது எளிதன்று. அதற்கு உண்மை வேண்டும். எடுத்த பணியில் பற்று வேண்டும். இந்தக் காலத்தில் பதிப்பாளராக இருப்பது ஓரளவு எளிதாக இருக்கலாம். அந்தக் காலத்தில் அது மிகமிகக் கடினமான

பணி. எனவே, நான் தாமரைச் செல்வர் சுப்பையா பிள்ளையவர்களைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் திருநெல்வேலிக்குத் தனிச் சிறப்பு இருப்பதாகக் கருதுகிறேன். இந்தப் பவளவிழாவினைத் தொடங்கிவைக்க அழைக்கப்பட்டது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். முயற்சி உடையவர்கள் நீண்டநாள் வாழ்வார்கள் என்று அன்பழகன் கூறினார். அது முற்றிலும் உண்மை. திரு சுப்பையா பிள்ளை அவர்கள் தமிழின் சிறப்பைப் பரவச் செய்ய அதனைச் சமற்கிருதத்திலும் வெளிக்கொணர வேண்டும். சமற்கிருதத்தில் அறிவியல் கருத்துகள் அடங்கியிருக்கின்றன என்று சொல்லப்படுமானால் அதன் பெருமை தமிழரையே சாரும். பண்டைத் தமிழர்கள் சமற்கிருதத்திலும் பல நூல்களை ஆக்கியுள்ளார்கள்.

திரு பிள்ளை அவர்களின் 75 ஆண்டு காலத்தில் 25 ஆண்டுகளைக் கழித்தாலும் எஞ்சிய 50 ஆண்டுகளில் இவரைவிடச் சிறந்த தொண்டாற்றியவர்கள் இருக்க முடியுமா? தமிழர் செய்ய வேண்டிய பணிகள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

தஞ்சை நூலகத்தையும் சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தையும் நான் பார்த்திருக்கிறேன். இவற்றில் அறிவுக் கருவூலங்களான தமிழ் நூல்கள் பலவாக இருக்கின்றன. இத்தகைய அறிவுக் கருவூலங்களை உலகுக்களிக்க வேண்டியது திரு சுப்பையா பிள்ளை போன்றவர்களின் கடமையாகும் என்று கூறுவதோடு அந்த மிகப்பெரிய மனிதருக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**தலைமையுரை**

செட்டி நாட்டரசர் **இராசா சர். முத்தையா செட்டியார்** அவர்கள் தாமரைச் செல்வரவர்கட்குப் பொன்னாடை போர்த்தி, ஆற்றிய தலைமையுரைச் சுருக்கம்:

திரு. பிள்ளையவர்கள் 1,500 நூல்களை வெளியிட்டிருக்கிறார்கள் என்றால் அது எளிதான காரியமன்று. இப்போது 15 ஆண்டுகளாகத்தான் அச்சகங்களெல்லாம் ஓரளவு இலாபமாக நடைபெறுகின்றன. அதற்கு முன்பு அச்சகம் நடத்தியவர்களெல்லாம் நட்டம்தான் அடைந்தார்கள். 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். பிள்ளையவர்கள் வெளிநாட்டார் புகழுமளவிற்கு நல்ல நூல்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் பற்றியும், தமிழின் சிறப்புகள்

பற்றியும் ஆளுநர் அவர்கள் கூறிய பிறகு நான் கூற வேண்டிய தில்லை. அந்தக் காலத்தில் ஆங்கிலேயர் தமிழுக்கு ஆதரவு காட்டவில்லை. அதனால்தான் தமிழில் பல நூல்கள் அச்சாகி வெளிவர முடியவில்லை. இப்போது சுப்பையா பிள்ளை யவர் களைப் பற்றிப் பேச வேண்டுமானால் மணிக் கணக்கில் பேசலாம். நாவலரவர்கள் பேசவிருக்கிறார்கள். அமெரிக்காவிலிருந்தும், தென்னாப்பிரிக்காவிலிருந்தும் மற்ற வெளிநாடுகளிலிருந்தும் என் வீட்டிற்குப் பலர் வருவார்கள். அவர்களுக்கெல்லாம், "நீங்கள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்குப்போய் பணமிருந்தால் நூல்களை வாங்கிக் கொண்டு போங்கள், இல்லா விட்டால் நூல் பட்டியல்களை வாங்கிக் கொண்டு போய்ப் பார்த்து நூல்களை அனுப்பச் செய்யுங்கள்" என்று நான் சொல்வேன். நான் செய்யக்கூடிய உதவி அதுதான்.

திரு சுப்பையா பிள்ளை யவர்கள் தம் சக்திக்கு மேற்பட்டு நூல்களை அச்சிட்டுள்ளார்கள். அவர்கட்கு அதிகச் சுமை கொடுக்கக்கூடாது. அவர்களால் செய்ய முடியாதனவற்றை யெல்லாம் முதலமைச்சரவர்கள்தாம் செய்ய வேண்டும். தமிழைக் காப்பாற்ற வேண்டியது அவர்களின் முக்கிய கடமை யாகும்.

திரு. பிள்ளை யவர்களுக்கு இரண்டு நல்ல மாப்பிள்ளைகள் கிடைத்திருக்கிறார்கள். அவர்கள் முழுநேரம் அவர்களோடு ஒத்துழைத்துக் கழகத்தை நடத்துகிறார்கள். அவர்கள்தாம் பிள்ளை யவர்களுக்குப் பெரிய சொத்து. பிள்ளை யவர்கள் நல்ல பேறு பெற்றவர்கள். ஆகவே, கழகம் நன்றாக நடக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

**காட்சித் திறப்பு**

விழாவினை யொட்டி விழா மண்டப விருந்துக் கூடத்தில் அமைக்கப் பெற்றிருந்த அரும்பொருட் காட்சியினைத் திறந்து வைத்து உயர்நீதிமன்ற நடுவர் மாண்பமை மகராஜன் அவர்கள் ஆற்றிய உரை:

தாமரைச் செல்வர் அவர்கள் நெடுங்காலமாகத் தேடித் தேடி அலைந்து பெற்ற பல பொருள்களை இங்குக் காட்சியில் அமைத்துள்ளார்கள். பள்ளிப் பருவத்திலிருந்து அவர்களோடு தொடர்புடையவனாகையால் அவர்கள் அமைத்துள்ள இக் காட்சியைத் திறந்து வைக்கும் பேறு பெற்றதில் எனக்குத் தனிப்பெருமை. 1779 ஆம் ஆண்டில் பெப்ரீஷியஸ் என்ற பாதிரியார் ஒரு தமிழ்—ஆங்கில அகராதியைத் தயாரித்து

வேப்பேரியில் பதிப்பித்தார். கிடைக்காமலிருந்த அந்த அரிய அகராதியை அரும்பாடுபட்டுத் தேடி 1936 இல் பெற்ருர். இப்படிப் பல அரிய பழைய நூல்களை அவர்கள் தேடித் தொகுத்து வைத்துள்ளார்கள். அவர்கள் தொகுத்து வைத்துள்ள நூல் ஒவ்வொன்றும் ஒரு கதை சொல்லும். திருக்குறளை உலகிற்கு அறிமுகப்படுத்திய டாக்டர் கிரால் என்ற ஜெர்மானியரின் படத்தைத் தேடியலைந்து 20 ஆண்டுகட்குப் பின் பெற்ருர்கள். அங்ஙனமே டாக்டர் வின்சுலோ என்பவரின் படத்தையும், அரும்பாடுபட்டுத் தேடினுர். வெளிநாடுகளுக்கெல்லாம் கடிதம் எழுதிக் கேட்டார். கடைசியாக நியூயார்க்கு 'மிஷினரி சொசைடி' அப்படத்தை அனுப்பி வைத்தது. அந்தப் படம் நன்றியுள்ள ஒவ்வொரு தமிழனும் பார்க்க வேண்டிய படம். இவையெல்லாம் தேனீ பூக்கள் தோறும் சென்று தேனைச் சேகரிப்பது போன்ற முயற்சிகளாகும். திரு சுப்பையா பிள்ளையவர்கள் பல இலக்கியங்களைத் தேடி அலையும் இலக்கியத் தேனீ. அந்த இலக்கியத் தேனீ அமைத்துள்ள தேன்கூடு தான் அவர் அமைத்துள்ள நூலகமும், காட்சிகளும் ஆகும். அந்தத் தேன்கூட்டை நீங்கள் எல்லாரும் சென்று கண்டு களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அந்தத் தேனீ 120 ஆண்டுகள் வாழவேண்டுமென வாழ்த்தி இந்தக் காட்சியைத் திறந்து வைக்கிறேன்.

## பள்ளிக்கல்வி இயக்குநர் உயர்திரு எஸ். வி. சிட்டிபாபு அவர்கள்

திரு. சிட்டிபாபு அவர்கள் பேசுகையில் தாமரைச் செல்வர் அவர்களின் திறமை பற்றிப் பாரதிதாசன் அவர்கள் கூறியதைச் சுட்டிக் காட்டினுர். திரு. பிள்ளையவர்கள் ஓய்வு ஒழிச்சல் இன்றி உழைக்கிருர்கள். தமிழிலே இருந்த கலப்படங்களை நீக்கித் தூய்மை செய்தார் மறைமலையடிகள் என்பது வரலாற்றுச் சிறப்புமிக்க செய்தி. அந்த வரலாற்றுச் சிறப்புக்குப் பெருமை தேடித்தந்தவர் நம்முடைய சுப்பையா பிள்ளையவர்களாவார். ஒரு பாஸ்வெல் இல்லையாஞல் எப்படி ஜான்சன் இல்லையோ அதுபோல் மறைமலையடிகளாருக்குப் பெரும் விளம்பரத்தைத் தேடித் தந்தவர் திரு. சுப்பையா பிள்ளையவர்களே. அவர்கள் என்னிடம் பேசும்போதெல்லாம் "தமிழுக்கு இவ்வளவு செய்திருக்கின்றேனே, இதை இன்னும் தமிழுலகம் உணரவில்லையே" என்பார். ஆஞல், அதை உணர்ந்திருக்கின்ற காரணத்தால்தான் நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கு வந்திருக்கிருர்கள். அவர்கள் வந்து வாழ்த்துகிருர்களென்ருல், அது பெருமதிப்புக்குரிய ஒரு

வாய்ப்பாகும். கல்வித்துறையின் சார்பிலே திரு. பிள்ளையவர்களுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகிறேன். கல்வித்துறை என்று சொல்லும்போது ஆயிரக்கணக்கான பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட 75 இலட்சம் மக்கள் வாழ்த்துகிறார்கள் என்று பொருள்.

**பவளவிழா மலர் வெளியீடு**

தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு **டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன்** அவர்கள் பவளவிழா மலரை வெளியிட்டு ஆற்றிய உரைச் சுருக்கம் :

சிலருக்கு வயது ஏறிக்கொண்டே இருக்கும்; ஆனால், உள்ளம் இளமையாகவே யிருக்கும். பலர் இளைஞர்களாகவே இருப்பார்கள் ஆனால், உள்ளம் முதுமை பெற்றிருக்கும். அதுபோல நம் சுப்பையா பிள்ளையவர்கள் முதுமை பெற்றிருந்தாலும் இளமை உள்ளத்தோடு பணியாற்றி வருகிறார்கள்.

பயன் கருதாமல் அவர்கள் 1487 நூல்களை வெளியிட்டிருப்பது பாராட்டத் தக்கது. விரைவில் அது 2,000 ஆகும். தமிழைக் காப்பாற்ற—தமிழகத்தைக் காப்பாற்ற—அதனுடைய புகழைக் காப்பாற்ற அவர்கள் ஆற்றியிருக்கும் பணி, இன்னும் பல நூற்றாண்டுகட்கு நிலைத்து நிற்கக்கூடிய பணி; வேறு யாரும் செய்ய முடியாத பணி.

தூயதமிழ் நடமாட முடியும்—நல்ல தமிழ் நடமாட முடியும்—சிறந்த தமிழ் நடமாட முடியும் என்ற எழுச்சியையும் முயற்சியையும் தந்தார்கள் மறைமலையடிகள். அந்த எழுச்சியையும் முயற்சியையும் பயன்படுத்தித் திரு. சுப்பையா பிள்ளையவர்கள் தமையனார் திருவரங்கம் பிள்ளையவர்களும் அவரைத் தொடர்ந்து திரு. சுப்பையா பிள்ளையவர்களும் கருமமே கண்ணாக இருந்து தளராமல் தமிழ்ப்பணி ஆற்றி வருவது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

தம்முடைய சிந்தனை ஊற்றிலிருந்து அரும்பெரும் நூல்களை உருவாக்கித் தரும் புலவர்களைப் பேரறிஞர்களை—அவர்கள் எங்கெங்கு இருக்கிறார்கள் என்று கண்டறிந்து அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்து அவர்களுடைய சிறந்த பணிகளை வாங்கிக் கொள்வதிலே திரு. சுப்பையா பிள்ளையவர்கள் திறம்படப் பணியாற்றி இருக்கிறார்கள். வருவாய் தரும் வழியினைத் தேட வேண்டும் என்று அவர்கள் எண்ணியிருந்தால் இந்த நூல் வெளியிடும் பணிக்கே போயிருக்க முடியாது.

'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்' என்று 60 ஆண்டுகட்கு முன்னர், பாரதியார் கண்ட கனவைத் திரு. சுப்பையா பிள்ளையவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். திருக்குறளைப் பல்வேறு வகைகளில் அச்சியற்றி அதற்குச் சிறப்பும் மதிப்பும் ஏற்படச் செய்த பெருமை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கு உண்டு என்பதை நாம் மறக்க முடியாது. உலகெலாம் தமிழ் பரவ ஆங்கிலத்தில் பல நூல்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இறவாத புது நூல்கள் செய்த பெருமை திரு. சுப்பையா பிள்ளையவர்களுக்கு உண்டு.

கலை இயலை வெளியிடத்தக்க ஆற்றல் வேறு எந்த மொழிக்கும் இல்லாத அளவு தமிழுக்குத்தான் உண்டு. ஆனால், அறிவியலறிவைத் தமிழில் தரமுடியுமா என்றால், அதில் நாம் பின்தங்கியே இருக்கிறோம். அறிவியலறிவு புறத்தோற்றத்தையும் கலையியல் அறிவு அகத்தோற்றத்தையும் வளர்க்கும். இரண்டும் வளர அறிஞர்கள் ஒத்துழைப்புத் தேவை. உலக நாடுகளின் மக்களின் அறிவோடு ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழரின் அறிவு எந்த வகையிலும் குறைந்தது அன்று. அதை அறிந்து பயன்படுத்தக் கழகம் பணியாற்றுகிறது. அதன் தலைவர் வாழ்க என்று கூறி விழாக்குழுவின் சார்பில் **இப் பவள விழா மலரை** வெளியிட்டுத் தமிழக முதல்வர் **மாண்புமிகு டாக்டர் கலைஞரவர்களிடம்** வழங்குகிறேன்.

**தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் பொன்னுரை :**

கழக ஆட்சியாளரைப் பாராட்டியும், 'அனிச்ச அடி' நாடக நூலை வெளியிட்டும் முதல்வர் ஆற்றியவுரை :

இன்று என் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய திரு. சுப்பையா அவர்களது பவளவிழாக் கொண்டாட்டத்தில் இரண்டு மந்திரிகளும் இரண்டு இராஜாக்களும் வந்திருக்கின்றனர். ஒருவர் இராஜா (செட்டிநாட்டரசர் இராசா சர். முத்தையா செட்டியார்) மற்றொருவர் (உயர்நீதிமன்ற நடுவர்) மகாராஜா. பழங்காலத்தில் தமிழுக்குப் பாடுபட்ட பெரும் புலவர்களை மன்னர் தங்கள் கொலு மண்டபத்தில் அமைச்சர்கள் புடைசூழ வரவேற்று வாழ்த்திப் பரிசளித்தார்கள் என்று வரலாறு கூறும். அதே உடைபோடு இல்லாவிட்டாலும் அதே பண்பாட்டோடு அந்த நிலை திரும்புகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான் திரு. சுப்பையர் அவர்கட்கு இவ்விழா எடுக்கப்படுகிறது.

**'சுப்பையர் !'**

தமிழ்க் கிழவர் சுப்பையா தமிழ் வளர்ச்சிக்குச் செய்துவரும் தொண்டு நாடெல்லாம் பெருமைப்படத் தக்கதாகும். அவரை நான் 'தமிழ்க் கிழவர்' என்று குறிப்பிடக் காரணம் என் வயதுக்கு அவரை நான் சுப்பையா என்று குறிப்பிட்டால் மரியாதைக் குறைவாகத் தெரியும். அதனால்தான் 'தமிழ்க் கிழவர்' என்று குறிப்பிடுகிறேன். டாக்டர் ஜி.யு. போப்பை, 'போப்பையர்' என்று குறிப்பிடுவதுபோல் இவரைச் 'சுப்பையர்' என்று குறிப்பிட்டேன். இவர் உண்மையிலேயே சுப்பையராக இருந்திருந்தால் இன்னும் கூட்டம் மிகுதியாக வந்திருக்கும்; எல்லாப் பத்திரிகைகளிலும் பெரிது பெரிதாகப் போடுவார்கள்; அகில இந்திய வானொலி யின் ஒலிபெருக்கிகளெல்லாம் இங்கே வைக்கப்பட்டிருக்கும். இருந்தாலும் நம்முடைய இந்தச் சாதாரண சுப்பையரை நாம் பாராட்டுகின்றோம்.

திரு. சுப்பையா அவர்கள் செய்துவரும் தமிழ்த்தொண்டு எதிர்காலத்தில் கல்வெட்டுகளில் பொறிக்கப்படுமளவிற்குப் பெருமை உடையதாகும். ஏனென்றால், மறைமலையடிகள் போன்றவர்களுடைய எழுத்தோவியங்களையும் கருத்துக் கருவூலங்களையும் எங்கும் பரவிடச் செய்த பெருமை திரு. சுப்பையா அவர்களுடையதே என்றால் அதை யாரும் மறுக்க இயலாது.

**கழக ஆட்சி அமைத்தவர் சுப்பையா !**

தமிழ்நாட்டில் கழக ஆட்சி வந்து ஐந்தாறு ஆண்டுகளே ஆகின்றன என்கிறார்கள். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே கழக ஆட்சி ஏற்பட்டுவிட்டது. ஆம்; சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழக நூல்களிலெல்லாம் கழக ஆட்சியாளர் வ. சுப்பையா பிள்ளை என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அண்ணா அவர்களும், நானும், நாவலரும் கழக ஆட்சி காணு முன்பே கழக ஆட்சி அமைத்தவர் திரு. சுப்பையா அவர்கள் ஆவார்.

இந்தக் கழக ஆட்சியாளர் செய்த தொண்டுதான்—அவ ரைப் போன்றவர்கள் உழைத்த உழைப்பின் மொத்த உருவம் தான் இன்றைய கழக அரசு. தந்தை பெரியார் அவர்களைப் பற்றிப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்,

"வயதில் அறிவில் முதியார்—நாட்டில்
வாய்மைப் போருக்கு என்றும் இளையார்"

என்று குறிப்பிட்டார்.

அந்த வகையிலே தமிழ்த் தொண்டாற்றி வரும் திரு. சுப்பையாவின் தமிழ்ப் பணிக்குக் கழக அரசு செய்துவரும் உதவி எத்தகையதென அவரே அறிவார்.

**மனந் திறந்து பாராட்டுக!**

இத்தனை வயதிலும் பம்பரம்போல் சுழன்று சுழன்று பாடுபடும் அவரை நூறுண்டு மட்டுமன்று. அதற்கு மேலும் வாழ வேண்டுமென வாழ்த்துகிறேன். சில நேரங்களில் பெரியவர்களை நாம் பாராட்டுகிறபோது அவரை உயர்த்துகிறோம் என்பதைவிட நம்மை நாமே உயர்த்திக் கொள்ளுகிறோம் என்பதுதான் உண்மை. பாராட்டுபவர்கள் மனந்திறந்து பாராட்டுவதால் அவர்களையும் அறியாமல் அவர் ஆயுள் வளர்கிறது. இந்த உண்மையைப் புரிந்து கொள்ளும்படி அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களே,



''திருநெல் வேலிச் சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம் போலும்
ஒருநல்ல தமிழ்வளர்க்கும் நிறுவனமும்
கண்டதில்லை உலகில் அந்த
உரைமல்கு நிறுவனமும் முப்போதும்
தமிழுக்கே உழைக்கத் தக்க
பெருநல்லான் தமிழ்ப்புலவன் சுப்பையன்
போற்பிறரைப் பெறுவதில்லை.''

''நூலெல்லாம் விளையுமங்கே, நூறுயி
ரக்கணக்கில்! நூல் ஒவ்வொன்றின்
மேலெல்லாம் அழகுசெயும் சுப்பையன்
மிகுதிறமை! அதுவு மன்றிக்
காலெல்லாம் சிலம்பொலிக்கத் தமிழரசி
உலகரங்கு காணும் வண்ணம்
தோலெல்லாம் சுளைப்பயன்கொள்
புதுப்புது நூல்
தோற்றுவிப்பான் அந்த மேலோன்.''

என்று இவரது தமிழ்ப்பணி பற்றி மிகச் சிறப்பாகப் பாடியிருக்கிறார்கள்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை எழுதிய மனோன்மணீயம் போல் வேறொரு நாடக நூல் தோன்றாத குறையினை நீக்கும் வண்ணம் நாடகப் போட்டி அமைத்து அதில் பரிசு பெற்ற புலவர் ஆ. பழநி அவர்களின் 'அனிச்ச அடி' என்னும் நாடக நூலைக் கழகம் பதிப்பித்துள்ளது. அதனை நான் மகிழ்ச்சியோடு வெளியிடுகிறேன்.

**இந்திக்கு இங்கு இடமில்லை!**

பேராசிரியர் சுந்தரம் பிள்ளைக்குக் கழகம் அளித்துள்ள பெருமையினை நீங்கள் அறிவீர்கள். அவர் எழுதிய 'நீராரும் கடலுடுத்த' என்ற வாழ்த்துப் பாடலை நிகழ்ச்சிகள்தோறும் வாழ்த்துப் பாடலாகப் பாடவேண்டும் என்று ஆக்கியது கழக அரசு ஆகும்.

எதிர்காலத்தில் கழக அரசு என்ன சாதித்தது என்று யாராவது கேட்கக் கூடுமானுல் மற்றவை எப்படியாயினும் இந்த ஒரு பெருமை நிலைத்து நிற்கும்.

பேரறிஞர் அண்ணு அவர்கள்கூட ஒரு சமயம்—"இந்த அரசை மாற்ற வேண்டும் என்கிறீர்களே அரசை மாற்றினுல் நாங்கள் செய்த எந்த நல்ல காரியத்தை மாற்ற உங்களால் முடியும்? 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்திருக்கிறோமே, அதை மாற்றிவிடுவீர்களா? 'இந்திக்கு இங்கே இடமில்லை' என்று செய்திருக்கிறோமே அதை மாற்றிவிடுவீர்களா?" என்று கேட்டார். அதேபோல்—நாங்கள் வாழ்த்துப் பாடலாக அறிவித்துள்ள பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் பாடலை மாற்ற யாராலும் முடியாது.

**பேரனு? பேர்த்தியா?**

இங்கே நான் வெளியிட்ட நூலின் பெயரான 'அனிச்ச அடி' என்பது ஒரு பெண்ணின் பெயர். அவளை நாயகியாக வைத்து நாடகம் உருவாக்கப்பட்டுள்ளது. பெண் கொலை புரிந்த நன்னன் என்று தமிழிலக்கியங்களில் வரும் மன்னனைப் பற்றிய வரலாற்றினை அடிப்படையாக வைத்துப் புனையப் பட்ட நாடகமே இந்த 'அனிச்ச அடி' யாகும்.



இந்நூலில் ஓரிடத்தில் 'வன்படர்' என்ற சொல் வருகிறது. அதற்குக் கொடிய துன்பம் எனப் பொருள் கூறப்பட்டிருக்கிறது. இதுபோன்ற புதிய சொற்கள் பல இந்நூலில் கையாளப்பட்டிருக்கின்றன. மனேன்மணீயத்தைப் பின்பற்றியே இந்த நூல் எழுதப்பட்டிருக்கிறது என்பதற்கு இந்த

நூலின் ஓரிடத்தில் ''எப்படை தோற்கினும் இப்படை தோற்குமோ?'' என்று வருகிற அடி ஓர் எடுத்துக்காட்டாகும். ''அன்னப் பாலுக்குத் தென்னஞ போட்டவன், ஆவின் பாலுக்குக் கற்கண்டு கேட்கிருன்'' என்பன போன்ற சுவை மிக்க இடங்களும் இந் நூலிலே பல உண்டு. 'அனிச்ச அடி'யைப் பற்றி இவ்வளவு புகழும் நான் அதிலுள்ள குறையினைச் சொல்லாவிட்டால் புலவனுகமாட்டேன்.

நாடகக் கதையின் நாயகி கருவுற்றிருப்பதாக ஓரிடத்தில் வருகிறது. அதுபற்றி எழுதப்படுகிற இடத்தில் ''கிழவி-கிழவன் எனப் பிறர் மொழியக் குழவிப் பேரன் குதிக்கு நாள் எந்நாள்?'' என வருகிறது. கருவில் இருப்பது ஆண்தான் என்பதை எப்படித் தெரிந்து நூலாசிரியர் 'பேரன்' என்று குறிப்பிட்டெழுதினர்? இதனை ஆசிரியர் திருத்திக்கொள்வது நலம். அல்லது நான் கூறுவது தவறு என்ருல் என்னைத் திருத்தட்டும். மற்றவகையில் இந்த நூல் சிறந்து விளங்குகிறது. ஆசிரியருக்கு என் வாழ்த்துக்கள்.

### தாமரைச் செல்வரின் ஏற்புரை

தலைமை தாங்கும் செட்டிநாட்டரசர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் கருணுநிதி அவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களே, நீதிபதி மகராசன் அவர்களே, பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. சிட்டிபாபு அவர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, உங்கள் எல்லாருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனது 75ஆவது ஆண்டு நிறைவினைப் பாராட்டு முகத்தான் இங்கே விழா நடைபெறுவது எனக்கு மிக்க ஊக்கத்தைத் தருகிறது. நான் எப்போதும் இளமையைத்தான் விரும்புவேன். முதல்வர் அவர்கள் பேசும்போது என்னைக் 'கிழவர் கிழவர்' என்று சொன்ஞர்கள். என்னை யாராவது முதியவர் என்று சொன்ஞல் அதை நான் சுவைப்பதில்லை. நான் எப்போதும் தோல்வியை விரும்புவதில்லை.

சிறு வயதிலேயே பெரும்புலவர்களோடு பழகும் பேறு பெற்றவன் நான். என்னை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்தவர்கள் என் தமையஞர்தாம். ஆஞல், அவர்களுக்கு வழிகாட்டி யாருமில்லை. இறைவனே வழிகாட்டி; தமிழ்நாட்டு வரலாற்றை எழுதவேண்டுமாஞல் — தமிழ்மொழியின் வரலாற்றை எழுதவேண்டுமாஞல் என் தமையஞர் வரலாற்றைத்தான் முதன்முதலில் எழுதவேண்டும். என் தமையஞர் இல்லா

விட்டால் மறைமலையடிகளாரின் பெருமை இவ்வளவு விளக்க முற்றிருக்காது என்பதை நான் அறிவேன். அடிகளாரை அவர்கள் இலங்கைக்கு அழைத்துப் பொருள் தண்டிக் கொடுத்துச் செல்வராக்கினர்.

கழகம் என்ற பெயரைக் கொண்டுவந்ததே சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்தான். அதன் பிறகுதான் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், தமிழரசுக் கழகம் என்ற கழகங்கள் தோன்றின. 25 ஆண்டுகள் அலைந்து திரிந்து இந்தக் கழகத்திற்குப் பங்குகள் சேர்க்க நானும் என் தமையனும் பட்ட பாடுகளை இங்குச் சொல்லமுடியாது. அவ்வளவு பாடுபட்டுள்ளோம். அந்தக் காலம் செல்வர்கள் கூட்டுப் பங்கு நிறுவனத்தில் சேரத் தயங்கிய காலம். தொல்காப்பியம் போன்ற நூல்கள் எளிதில் விற்பனையாவதில்லை. அவை விற்பனையாக 20 ஆண்டுகள் ஆயின. பாட நூல்களை வெளியிடத் துவங்கிய பின்னர்தான் கழகம் வளர்ச்சியடையத் துவங்கிற்று.

அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் எனக்கு எப்போதும் மதிப்புண்டு. காலஞ்சென்ற காஞ்சி மணிமொழியார் என் நண்பர். அவர் அரசியலில் ஈடுபட்டு மேனிலை அடைந்தார். நான் அரசியலில் ஈடுபட்டிருந்தால் இந்தக் கழகம் அழிந்திருக்கும். ஆனால், தனித்தமிழைப் பரப்புதல்—பயிற்றுமொழியாக்கல்—திருக்குறளைப் பரப்புதல்—எங்கும் எதிலும் தமிழ் என்ற கொள்கை ஆகியவற்றைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் என்றும் கடைப்பிடித்து வருவதில் உறுதியோடு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதனை முதல்வர் அவர்கள் நன்கு அறிவார்கள்.

மறைமலையடிகளார் நூல்களை எல்லாரும் படிக்க வேண்டும். மறைமலையடிகளாரின் கொள்கையினால்தான் இந்த ஆட்சி சீரிய நிலையில் இருக்கிறது என்பதையும் அறிவார்கள். எனவே, மறைமலையடிகளார்க்குச் சென்னையில் ஒரு சிலை அமைக்க வேண்டும். அதற்கு ஒரு குழு அமைக்கவேண்டும். நான் ஆயிரம் ரூபா கொடுத்து விடுகிறேன். மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையவர்கள்தாம் தமிழர் கொள்கைக்கு வித்திட்டவர்கள். அதனை மறைமலையடிகளும், கா. சு. பிள்ளை அவர்களும் வளர்த்தார்கள். எனவே, பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களுக்குத்தான் முதலில் சிலை அமைக்கவேண்டும் என்பது எனது பேரவா.

'அனிச்ச அடி' நூல் விற்பனையில் பத்து விழுக்காடு உரிமை யூதியம் ஆசிரியருக்கும் மற்றொரு பத்து விழுக்காடு ஊதியம் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை சிலை அமைப்பதற்காகவும் ஒதுக்கப் பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தக் கழக விழாவிற்கு முதல்வர் அவர்கள் வந்திருப்பது இது இரண்டாவது தடவையாகும். அவர்கட்கு எத்தனை யோ வேலைகள். விழாத் துவக்கத்தில் அனைவரையும் வரவேற்றுப் பேசி மகிழ்வித்த மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் அவர்கட்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விழா மலரின் வழியாகக் கழகத்தின் சிறப்புகளை அறிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு, இங்கு வந்து இந்த விழாவினைச் சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் என் உளமிகு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

---

# இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

5—8—'73 காலை நிகழ்ச்சியில் மாநிலக் கல்லூரித் தமிழ்த் தலைமைப் பேராசிரியரும் ஆராய்ச்சித் துறை இயக்குநருமாகிய டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் ஆற்றிய வரவேற்புரை :

திரு. சுப்பையா பிள்ளை அவர்களின் பவளவிழா அவர்க ளுடைய சிறந்த தமிழ்த் தொண்டுகளை நாட்டுக்கு அறிவிக்கும் சிறந்த விழாவாகும். தமிழ் உலகில் பவளவிழாக் கொண்டாடு வது இதுவே முதல் தடவையாகும். ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட இலக்கியங்களிலிருந்து இன்றைய மறுமலர்ச்சி இலக் கியங்கள் வரை ஏறத்தாழ ஆயிரத்து ஐந்நூறு ஏடுகளைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அளித்த சான்றோர் திரு. சுப்பையா அவர்களாவர். அவர்களின் தொண்டுக்குச் சங்க இலக்கிய உவமை கூறவேண்டுமானல் ஔவையார் அதியமானுக்கு நெல்லிக் கனி கொடுத்தது போல உள்ளது எனலாம்.

இந்த விழாவிலே எல்லாத் துறைகளையும் சேர்ந்த சான் ரோர்களும் பங்கு கொள்ளுகிருர்கள். இந்த விழா ஒரு மொழி விழா மட்டுமன்று; இன விழாவாகவும், கருத்து விழாவாகவும் காட்சி அளிக்கிறது.

தமிழகத்தின் தலை சிறந்த நடுவரும் தமிழன்பருமாகிய திரு. கோகுலகிருட்டிணன் அவர்கள் இங்கே தலைமை உரை யாற்றவிருக்கிருர்கள். முன்னுள் முதல்வர் திரு. மீ. பக்தவத்சலம் அவர்களும், பல்கலைக்கழகத் துணைவேந்தர், தாமரைத்திரு. சுந்தரவடிவேலு அவர்களும் இங்கே சிறப்புரை ஆற்ற இருக்கி ருர்கள். துணைவேந்தர் அவர்கள் கல்வித் துறையிலே பசுமைப் புரட்சியைப்போல அருமையான திட்டங்களை உருவாக்கி யவர்கள்.

மற்றும் அறிஞர்கள் பலர் பேச இருக்கிருர்கள். அவர்கள் அனைவரையும் வருக! வருக! என வரவேற்கிறேன்.

இவ்வேளையில் பவளவிழா நாயகராகிய திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களின் தொண்டினைப்பற்றிக் கூறவேண்டுமானுல் அவை பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்கவை என்றே கூறவேண்டும். ''இருந்தமிழே உன்னுல் இருந்தேன், வானோர் விருந்தமிழ்தம் என்ருலும் வேண்டேன்'' என்ற பொன் மொழிக்கு இலக்காக வாழ்கின்றவர்கள். அத்தகைய கொள் கையின் குன்றை—தமிழ்ச் சான்ரோரை—மொழிப் புலமையின் சிறந்த உருவத்தை—மொழித் தொண்டின் நாயகத்தை ''நீங்கள் இன்னும் ஒரு நூருண்டு வாழ்ந்து, பதிப்புலகிற்கும் பைந்தமிழ் உலகிற்கும் தொண்டு செய்யவேண்டும்'' என வாழ்த்தி அமைகிறேன்.

உயர்நீதிமன்ற நடுவர் மாண்பமை **திரு. பு. ரா. கோகுலகிருட் டிணன் அவர்கள் ஆற்றிய தலைமையுரை :**

திரு. பிள்ளையவர்களின் பவளவிழாவில் தலைமை தாங்கும் பேறு கிடைத்தமைபற்றி மகிழ்ச்சி அடைகிறேன். தமிழைப் பற்றிப் பேசவும், தமிழ் பேசுகின்றவர்களைப் பாராட்டவும், தகுதி பெற்றவன் என்ற முறையிலும், தமிழ் வாழ வேண்டுமென்ற எண்ணத்திலே திளைக்கின்றவன் என்ற முறையிலும் இந்தத் தலைமையினை ஏற்றுக்கொண்டிருக்கிறேன்.

தமிழை வியாபாரமாக்காமல் சென்ற நூற்ருண்டிலே இருந்து இந்த நூற்ருண்டு வரையில் தமிழுக்காக என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து கொண்டு வருகின்றவர்கள் நம் பிள்ளையவர்கள். அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைப் படித்துப் பார்த்ததிலிருந்து அவர்கள் பல தொல்லைகளுக்கிடையே இந்தக் கழகத்தை வளர்த்திருக்கிருர்கள் என்பது தெரியவருகிறது. இவர்க ளுடைய பேச்சிலும் எழுத்திலும் இனிய தமிழ் மணம் கமழ்கிறது.

# பவள விழா

**இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சி**
**உயர்நீதி மன்ற நடுவர்**
**மாண்பமை பு. ரா. கோகுலகிருட்டிணன்**
**அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**



சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர்
டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள்
வரவேற்புரை ஆற்றுதல்

இவ் விழாவில்

**டாக்டர் ஜி. யு. போப் இயற்றிய**
**'Tamil Heroic Poems'**
**எனும் நூல் வெளியிடப்பெற்றது.**



உயர்நீதிமன்ற நடுவர்
மாண்பமை பு. ரா. கோகுலகிருட்டிணன் அவர்கள்
தலைமையுரை நிகழ்த்துதல்



தமிழக முன்னாள் முதல்வர்
உயர்திரு. எம். பக்தவத்சலம் அவர்கள்
பாராட்டுரை பகர்தல்



சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
தாமரைச்செல்வர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள்
பவள விழாச் செல்வரின் பணி பாராட்டல்



தமிழக அரசு சட்டப் பேரவைச் செயலர்
திரு. மா. சண்முக சுப்பிரமணியம் அவர்கள்
புகழுரை பகர்தல்



மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள்
தாமரைச் செல்வர் அவர்களின்
பாராட்டுரை பகர்தல்



திரு. ஔவை. து. நடராசன் அவர்கள்
பணி பாராட்டுதல்

—தமிழ் படித்தவர்கள்—தமிழ் உணர்ந்தவர்கள் யாராக இருந்தாலும் நம்முடைய பிள்ளை அவர்களைப் போலத்தான் இருக்க வேண்டும்.

"ஒரு காலத்திலே முடியேந்திக் கோலேந்தி அரசவையிலே வீற்றிருந்த தமிழன்னை இன்று தூறும் புற்றும் மூடப்பட்டிருக்கிறாள்" என்று திரு. வி. க. அடிக்கடி கூறுவார்கள். இந்தத் தூறையும் புற்றையும் அகற்றித் தூய்மையாக்கி இலக்கியங்களை நமக்களித்த பெருமை திரு. பிள்ளையவர்களைச் சாரும்.

தமிழகத்திலே தமிழ் பேச முடியுமா? என்ற நிலை ஒரு காலத்தில் இருந்தது. தமிழில் பேசினால் மக்கள் அதை ஏற்பார்களா, பேசினால் நையாண்டி செய்வார்களே என்ற அச்சம் இருந்தது. அப்படிப்பட்ட அச்சங்களையெல்லாம் அகற்றி, இன்று பல்வேறு இடங்களிலே—அலுவலகங்களிலே தமிழ் முழக்கம் கேட்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால் இவற்றுக்கெல்லாம் காரணம், அருந்தமிழை வளர்த்துத் தந்து, இலக்கியக் கருவூலங்களையெல்லாம் நமக்கு எடுத்துத்தந்தவர் திரு. பிள்ளையவர்களே யாவர் என்பதறிந்து அவர்களைப் பாராட்டத் தோன்றுகிறது.

தமிழ்ச் சமுதாயத்தில் சிலர் சிலவிடங்களில் தமிழ் வளர வேண்டுமென்று பேசிவிட்டுப் பிறிதோரிடத்தில் அதன் வளர்ச்சிக்கு ஊறு தேடும் வகையிலே பேசிக்கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்டவர் நம்மிடையே இன்னும் இருக்கின்ற காரணத்தால்தான் எல்லா இடங்களிலும் தமிழ் ஆக்கம் பெறமுடியாமலிருக்கிறது. எனினும், நீதி மன்றங்கள் போன்ற இடங்களிலும் தமிழ் இடம் பெறக்கூடிய காலம் மிக அண்மையிலேயே இருக்கிறது எனக் கருதுகிறேன்.

சட்டம், அறிவியல் ஆகிய துறைகளில் நல்ல தமிழாக்க நூல்களை ஆட்சியாளர் அவர்கள் நமக்கெல்லாம் தந்திருக்கிறார்கள். திருக்கோயில்களில் தமிழில் அருச்சனை நடைபெறுதற்கும், திருக்குறள் பல வடிவங்களில் நாட்டில் பரவுதற்கும் கழக ஆட்சியாளர் பணியாற்றி வருகிறார்கள்.

தமிழ் வளர்ந்த திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்த அவர்கள் தமிழை வளர்க்கிறார்கள். குடத்தினுள் இட்ட விளக்காக இருந்த தமிழைக் குன்றின்மேல் ஏற்றிவைத்து நம்மையெல்லாம் அங்கு அழைத்துச் செல்லுகின்றார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. பாரதிதாசனுடைய மொழி

களிலே சொல்ல வேண்டுமானால், "வீழ்ச்சியுற்ற தமிழகத்தில் எழுச்சி வேண்டும்" என்று தொடங்கும் அவருடைய பாட்டுக்கு இலக்கணமாக நம் பிள்ளையவர்கள் திகழ்கின்றார்கள். அத்தகைய பெரியவர் மேலும் எண்ணற்ற ஆண்டுகள் வாழும்படி என் அன்பு காரணமாக வாழ்த்துகிறேன்.

**மொழிஞாயிறு, ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் உரை:**

எனது பாராட்டு, விழாத் தலைவருக்குத் தேவையே இல்லை. சமயம் கிடைக்கும்போதெல்லாம் என்னுடைய சொற்பொழிவுகளி லும், நூல்களிலும் அவரைப் பாராட்டியே வந்திருக்கிறேன். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் புத்தகம் வெளியிடும் கழகம் மட்டுமன்று. அது தமிழகத்திலேயே—உலகிலேயே—நூல்கள் வெளியிடும் ஒரு மாபெரும் அமைப்பு நிலையம். சிறு விற்பனை நிலையமாகத் தொடங்கப்பட்ட இது ஒரு பெரிய பல்கலைக்கழகம் போல் விரிவடைந்துள்ளது. இவையெல்லாம் திரு வ. சுப்பையா பிள்ளை அவர்களுடைய மூளையின் வேலைதான். வேறு யாராவது அவருடைய இடத்தில் இருந்திருந்தால் கழகம் இவ்வளவு விரிவடைந்திருக்காது. இஃது இறைவனுடைய ஏற்பாடு என்று நான் கருதுகிறேன்.

திரு. சுப்பையா பிள்ளை அவர்கள் ஒரு புத்தக வணிகர் மட்டுமல்லர். அவர் ஒரு செந்தமிழ்க் காவலர், புலவர், புரவலர், பல்துறை அறிவு பரப்புநர், இந்நாட்டு முன்னேற்றத் தொண்டர்களுள் ஒருவர். இப்படிப் பல்துறையில் அவரைப் பார்க்க வேண்டும்.

தேர்வு எழுதுகிறவர்கள் தேர்வுக்கு வேண்டிய எல்லாப் புத்தகங்களையும் ஒரே சமயத்தில் கழகத்தில் வாங்கிவிடலாம். புத்தக அமைப்பை எடுத்துக்கொண்டால் அத்துறையில் அவர்கள் வாகை பெற்றவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஒரு செல்வர் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்குச் சென்று பார்ப்பாரானால் அந்தப் புத்தகத் தொகுதிகள் முழுமை யும் அப்படியே வாங்கிக்கொள்வார். (அப்படிப்பட்டவர்கள் இப்பொழுது இல்லை. வீடும் நிலமும்தான் வாங்குவர்)

மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையவர்கள் அக்கால இயற்கைப்படி "தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நற்றிரு நாடும்" என்று பாடியிருக்கின்றார்கள். இப்பொழுது நாம் அதைத் "தெக்கணமும் அதிற் சிறந்த தென்மொழி நற்றிரு நாடும்" என்று திருத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் தமிழ் உணர்ச்சி கெட்டுப்போகும்.

திரு. சுப்பையா பிள்ளையவர்கள் வணிக நோக்கம் மட்டும் உடையவராயிருந்திருந்தால், மனோன்மணீயம் போன்றதொரு நூல் இல்லை என்பதற்காக அதற்கு ஒரு பரிசுத் தொகை ஏற்படுத்தி அத்தகைய நூல்கள் சில எழுதச் செய்து அவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுக்கச் செய்திருப்பாரா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் வெளியிடும் 'செந் தமிழ்ச் செல்வி' என்னும் திங்கள் இதழில் நல்ல கருத்து வள முடைய கட்டுரைகள் வெளிவருகின்றன. அதனை உலகிலேயே சிறந்த திங்களிதழ் என்று சொல்லலாம். மற்றும் மறைமலை யடிகளார் பெயரால் நூலகம், பல்லாவரத்தில் ஒரு மன்றம் என் றெல்லாம் அமைத்துச் சிறந்த தமிழ்ப் பணியாற்றி வருகி றார்கள்.

திரு. சுப்பையா பிள்ளையவர்களை வெறும் சொற்களால் மட்டும் பாராட்டினால் போதாது. எல்லாரும் செந்தமிழ்ச் செல் வியை வாங்கிப் படிக்க வேண்டும். எல்லா உயர்நிலைப் பள்ளி களிலும் வாங்கும்படி செய்ய வேண்டும்.

நடுவணரசு அவருக்கு ஏதாவதொரு சிறப்பு—அஃதாவது ஒரு வரிக் குறைப்பு—அல்லது சிறந்த அரசாங்க நிகழ்ச்சி களுக்குத் தரும் அழைப்பு-வேறு ஒன்றும் வேண்டா—ஒரு மூன்று இலக்கம் அவர்கள் கையில் கொடுத்துவிட வேண்டும்.

சிலர் கூறுவார்கள்; அந்த ஆட்சி வரவேண்டும்—இந்த ஆட்சி வரவேண்டும் என்று. ஆனால், நம் சுப்பையா பிள்ளை யவர்களுக்கு எந்த ஆட்சி இருந்தாலும் கவலையில்லை. அவருக்கு எந்த ஆட்சியிடத்தும் பகை கிடையாது. எந்த ஆட்சி வந்தாலும் அவர்களைத் தம் வயப்படுத்தி விடுவார்கள். துரை ஆட்சி, நீதிக்கட்சி ஆட்சி, காங்கிரசு ஆட்சி எல்லா ஆட்சியிலும் அவர் சிறந்த விழாக்களை அந்தந்த ஆட்சியினர் ஆதரவிலேயே நடத்தி இருக்கிறார். இஃது இறைவன் அவருக்குக் கொடுத்திருக்கும் நல்ல பண்பு. அவருக்கு யாரும் பகை இல்லை.

இந்தக் கூட்டத்தில் செல்வர்கள் இருந்தால் இவருடைய தொண்டுக்கு நன்கு உதவுங்கள். எப்படியாவது ஒரு மூன்று இலக்கத்தை அவர் கையில் ஒப்புவித்துவிட வேண்டும். நடுவணரசை வற்புறுத்த வேண்டும். சும்மா வாயினால் பாராட் டினால் மட்டும் போதாது. அவர் பணியை நன்கு பயன் படுத்திக் கொள்ள இறைவனை வேண்டி என் உரையினை முடித்துக் கொள்ளுகிறேன்.

**சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தாமரைத்திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் சிறப்புரை :**

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலியில் அறிஞர்கள் பலர் தோன்றி யிருக்கின்றனர். தமிழ்நாட்டில் அறிவுக்குப் பஞ்சம் எப்பொழுதும் வந்ததே கிடையாது. பிறப்பவர்களுள் ஆயிரத்தில் ஒருவர்தாம் அறிஞராகப் பிறக்கின்றார்கள். நல்ல தொண்டாளன் அனைவரையும் இணைத்துத் தன் தொண்டினை ஆற்றிச் செல்லுகிறான். இந்த நுட்பத்தை நான் சொல்ல வேண்டும் என்றிருந்தேன். மூத்தவர்—எல்லா வகைகளிலும் எனக்கு மூத்தவராகிய தேவநேயப் பாவாணர் நான் சொல்வதற்கு முன்னால் சொல்லிவிட்டார்.

திரு. சுப்பையா பிள்ளை அவர்கள் தமிழ்த் தொண்டில் தளராது நிற்கின்றவர்கள். உண்மையிலேயே சைவசித்தாந்தக் கழகம் என்றால் சுப்பையா பிள்ளைதான்; சுப்பையா பிள்ளை என்றால் சைவசித்தாந்தக் கழகம் தான். கிட்டத்தட்ட 1500 நூல்களை அவர்கள் வெளியிட்டிருக்கின்றார். அவரது தொண்டினால் அவர் இப்போது உச்சநிலையில் விளங்குகின்றார். எனக்கு என் துறையில் இரண்டு பெரியவர்களைத்தான் தெரியும். ஒருவர் சுப்பையா பிள்ளை; மற்றொருவர் வாலாசாபாத் இந்து மத பாடசாலை அப்பா மாசிலாமணி முதலியார். யாரிடத்தில் எப்படி எப்படி நடக்கவேண்டும் என்ற முறை தெரிந்தவர் சுப்பையா பிள்ளை அவர்கள். யாரிடத்தில் எவ்வளவு செல்லுமோ அவ்வளவுக்குப் பயனைப் பெற்றுக் கொள்வார். அவ்வளவு திறமையுடையவர். அவர் தன்னடக்கம் மிக்கவர். அது எல்லாருக்கும் வாய்ப்பதன்று. இவர் ஒரு நல்ல இலட்சியத்தை ஏற்றுக் கொண்டவர்.

தமிழ் வல்லமையுள்ள மொழி—தமிழில் எதையும் சொல்ல முடியும். ஆனால், நூல்கள் விற்பனையாவதில்லை என்றால் அதற்குக் காரணம் நம் நாட்டில் கற்றவர்கள் நூற்றுக்கு 40 பேர்தாம். அவர்களும் நூல் வாங்காமைக்குக் காரணம் இல்லாமையன்று; மனம் அதன்பால் செல்லாமையே யாகும். தமிழர்கள் வளர்ந்தார்கள் – தமிழ் முழக்கங்கள் வளர்ந்தன. தமிழ்ச் செயல் கருகிக் கருகிக் குன்றிப் போகின்றது. இந்த ஆபத்தான நிலையை நீங்கள் உணர வேண்டும். இப்படிப்பட்ட சான்றோர்களுக்கு விழா எடுப்பதன் மூலம் தமிழ் நூல்களைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை உண்டுபண்ண வேண்டும்.

வியாசர் விருந்து தமிழ்நாட்டை விடச் சோவியத் நாட்டிலே அதிகமாக விற்றிருக்கிறது. அதுவும் ஒரே வாரத்தில். காரணம் என்ன? அவர்கள் இலக்கியப் பற்ருேடு எதையும் படிக்கிருர்கள். நம்மவர்கள் அப்படிப் படிப்பதில்லை. நாம் நம் இளைஞர்களை மூல நூல்களைப் படிக்கச் செய்ய வேண்டும். நூலக நூல்களைப் படிக்கச் செய்ய வேண்டும். நீங்களும் சுப்பையாப் பிள்ளை அவர்களைப்போல் தமிழ்ப் பற்றுடையவர்களாய்—தொண்டாற்றுபவர்களாய் வாழவேண்டும். அவர்களும் நூருண்டு வாழ வேண்டும் என்று விழைகின்றேன்.

**பாமாலை**

'அனிச்ச அடி' ஆசிரியர் புலவர் திரு. ஆ. பழநி அவர்கள் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வரவர்கட்குக் கீழ்க்காணும் 'பவளவிழா வாழ்த்து மடல்' ஒன்றினை வழங்கினர்.

சங்கத்தார் மூவர் சமயத்தார் நால்வருடன்
இங்கொத்தோர் மேனி எடுத்ததெனத்—துங்கமகன்
தோன்றினன்; தோன்றித் துணிந்து தமிழ்வளர்க்க
ஊன்றினன் என்றும் உளம்.

ஓலைச் சுவடி உறைந்த பொருளெல்லாம்
மேலைப் புலத்தார் வியக்குவணம்—நூலையிவண்
வண்ணவண்ணக் கட்டமைப்பா வைத்தான் திருப்பணியை
எண்ணஎண்ண நெஞ்சமினிக் கும்.

தேர்ந்த உரையென்னும் சீர்த்த அணியின்றிச்
சோர்ந்த தமிழன்னை தோற்றமுற—நேர்ந்தஉரை
பூட்டுவித்தான்; மேன்மை பொருந்தவைத்தான்; அண்ட
ஆட்டுவித்தான் தாள்மறவா தான். [மெலாம்

ஏடும் வழுத்தும்; இனமும் புகழ்ந்துரைக்கும்;
கூடும் அறிஞர் குழாம்போற்றும்;—தோடார்
தவளக் கமலத்துத் தையலுமே வாழ்த்தும்
பவளவிழாக் கண்டான் பணிக்கு.

அருமழையைக் காண அணிதமிழ்ப்பைங் கூழ்க்குப்
பெருமழையைக் கொண்டுநலம் பேணித்—திருவளர்த்த
தாமரைச் செல்வர் தனிப்புகழைப் பாடுமினே
பூமருவு சொல்லாற் புனைந்து.

எண்ணின் வளரும்; எழுதின் முடியாது;
பண்ணில் இசைக்கவாய் பற்ருது—கண்ணுதலன்

அப்புறையும் செஞ்சடையன்—அம்பலவன் தாள்மறவாச்
சுப்பையன் செய்ததமிழ்த் தொண்டு.

செந்தமிழைச் சைவச் செழுநெறியை நாடோறும்
இந்தொளிபோல் வையத்தே ஏற்றிவைக்க—வந்தவனே!
நீருண்ட செந்நெறியோய்! நீணிலத்தோர் போற்றிசெய
நூருண்டுங் காணியரோ நூறு.

தமிழக முன்னுள் முதல்வர் **திரு. மீ. பக்தவத்சலம் அவர்களின் வாழ்த்துரை :**

திரு. சுப்பையா பிள்ளை யவர்கள் பல்லாண்டுகள் வாழ்ந்து மேலும் பல நூல்களை வெளியிட வேண்டும். கடந்த 50 ஆண்டுகளாகத் திரு. பிள்ளையவர்கள் வேறு, சை. சி. நூற்பதிப்புக் கழகம் வேறு என்று சொல்ல முடியாதபடி அவர்கள் வளர்ந்திருக்கிருர்கள். அவர்கள் வெளியிடும் புது நூல்களை நான் விரும்பிப் படிப்பேன். ஆனுல், மற்றவர்கள் படிக்க வேண்டுமே! இதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். புதிய நூல்கள் வெளிவர வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். அவர்களும் பலதுறை நூல்களை வெளியிடுகிருர்கள். பிறர் மெச்சுவதற்காக அல்ல; அவர்கள் தமிழ்த் தொண்டிலே ஊறியவர்கள். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பெயரைப் பார்த்த அளவிலே அது ஏதோ சமயச் சார்புடையது என்று கருதக்கூடாது. சமயத்தை நீக்கிவிட்டால் தமிழ் எங்கே இருக்கும். அது எங்கே இருந்தாலும் அதன் கருத்தை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**நூல் வெளியீடு :**



"Tamil Heroic Poems" என்ற ஆங்கில நூலை வெளியிட்டுப் பேராசிரியர் **டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆற்றிய வுரை :**

"திறமான புலமையெனில் பிற நாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்று கூறினுர் பாரதியார். தமிழ்ப் பெருமையை அறியாதிருந்த தமிழருக்கு **ஜி. யு. போப் அவர்கள்** முதலிலே தமிழ்ப் பெருமையை அறிவுறுத்தினுர்.

அவர் "Tamil Heroic Poems" என்ற நூலைத் தொகுத்து டாக்டர் உ. வே. சா. அவர்கட்கு அனுப்பி வைத்தார் என்று அவர் வரலாற்றிலே பார்க்கிறோம். அந்த நூலைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டிருக் கிறார்கள். அதை உங்கள் முன்னிலையில் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். இதனை மாண்பமை நடுவர் அவர் களுக்கு அளிக்கிறேன்"—என்று கூறி நூலை வழங்கிய டாக்டர் அவர்கள் மேலும் பேசும்போது, டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் தமிழகத்திற்கு வந்து தமிழைக் கற்றுப் புறநானூற்றுப் பாடல் களையும் புறப்பொருள் வெண்பாப் பாடல்களையும் எடுத்து "Tamil Heroic Poems" என்ற நூலைச் செய்திருக்கிறார் என்றும், இதில் தமிழ்க் குடியின் பழமையினையும் வீரச் சிறப் பினையும் பாராட்டுகின்ற முறையில் காணப்படுகின்ற சில பாடல் களையும் அவற்றுக்கு ஜி. யு. போப் அவர்கள் தருகின்ற ஆங்கில விளக்கங்களையும் மேற்கோள்களாக எடுத்துக் காட்டி அழகிய உரையாற்றினார். இறுதியில் "இப்படி அரிய நூல்களெல்லாம் பயன்பட வேண்டும் என்பதற்காக அவற்றை அரும்பாடுபட்டுத் தேடிச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் பதித்துள் ளனர். இப்படிப் பிறருக்குப் பயன்பட வாழும் திரு. பிள்ளை யவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகிறேன்" என்று கூறினார்.

தமிழ்நாடு அரசுப் பொது நூலகத்துறை இயக்குநர் திரு. வே. தில்லைநாயகம் பாராட்டுரை :

சரியாகச் சொன்னால் விழா நாயகர் அவர்களே ஒரு நல்ல நூல். தொல்காப்பியர் நூல் இலக்கணம் சொல்லும்போது,

"நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலும் முடிவும் மாறுகோ ளின்றி
தொகையிலும் வகையிலும் பொருண்மை காட்டி
உள்நின்று அகன்ற உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே".

என்று கூறியுள்ளபடி, விழா நாயகர் ஒரு நல்ல நூல். அந்த நல்ல நூலுக்கு உள்ள பொருள் 'தமிழ்' ஒன்று தான். அவர் எந்தக் காரியம் செய்தாலும் தமிழ் வாழ வேண்டும் —தமிழ் வளர வேண்டும்—தமிழர்கள் உயரவேண்டும் என்ற கருத்தில் அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து வருகிறார். தமிழ் நூல்களைப் பதிப்பித்துத் தரணியெல்லாம் பரப்பியதற்காக இந்திய அரசு அவருக்குப் பத்மஸ்ரீ பட்டம் வழங்கியது. "தமிழைப் பரப்பும்

இவர் பத்மஸ்ரீ பட்டத்தை ஏற்றுக் கொள்ளலாமா?'' என்று ஒருவர் என்னைக் கேட்டார். அதற்கு நான் சொன்னது இதுதான்: ''‘அவர்கள் தமிழைப் போற்றுவதற்காக இந்தப் பட்டம் கொடுத்தார்கள். தமிழைப் போற்றுவதற்காகக் கொடுத்த பட்டம், இந்தத் தமிழ் தரணியெங்கும் பரவுவதற் காக உதவும் என்பதற்காக அதை ஏற்றுக் கொள்ளுகிறேன்' என்றுதான் அதை அவர் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்'' என்றேன். பிறகு அவர்களது வரலாற்றைப் படிக்க நேர்ந்தது. அதிலேயும் இதைத்தான் எழுதியிருக்கிறார்கள்.

இன்று நாடெங்கும் நூலகங்கள் இருக்கின்றன. ஆயிரக் கணக்கான வழங்கு மனைகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட நாலாயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் நூலகப் பணியில் ஈடு பட்டிருக்கின்றார்கள். இருந்தாலும் நூலகப் பணியைப் பற்றிய ஒரு நூல் ஆயிரம் படிகள் வெளியிட்டால் அந்த ஆயிரம் படிகள் விற்பதற்கு இரண்டாண்டுகள் ஆகின்றன. 1973ஆம் ஆண்டிலே இந்த நிலை!

திரு. சுப்பையா பிள்ளையவர்கள் பல ஆண்டுகட்கு முன்பே சில நூல்களை அவற்றின் பயன்பற்றி—அவை விற்குமா விற் காதா என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் வெளியிட்டவர்கள். அதனால் வரும் கட்ட நட்டங்களை ஏற்றுக் கொண்டவர்கள். இவர் சைவசித்தாந்தக் கழகம் என்று ஆரம்பித்தாலும் சமயத் தோடு நின்றுவிடாது—தமிழ் இலக்கண இலக்கியத்தோடு நின்று விடாது—அறிவுத்துறை ஒவ்வொன்றிலும் தவறாது நூல்களை வெளியிட்டு வந்திருக்கிறார்கள்.

நூலகச் சட்டம் வருவதற்கு முன்னாலேயே 1927 இலேயே தாம் தொகுத்த நூல்களையெல்லாம் சிவஞான முனிவர் நூல் நிலையம் என்று திருநெல்வேலியில் ஒரு நூலகம் அமைத்து உதவினார்கள். அவர்கள் எந்தப் பணியையும் எளிதில் தொடுவ தில்லை—தொட்டால் விடுவதில்லை; தொடர்ந்து செய்து கொண்டே யிருப்பார்கள். இவர்களுக்குத் தாம் பதிப்பித்த நூல்களை வாங்குவாரில்லையே என்று ஒரு வருத்தம். வாங்கியும் அவற்றைப் பயன்படுத்துவாரில்லையே என்று மற்றொரு வருத்தம். இந்த இரண்டு வருத்தங்களும் நேர்மையான வருத்தங்கள். இந்த வருத்தங்களை மாற்றுவதற்கு நாமெல்லாம் முயல வேண்டும். தமிழென்னும் உணர்வாலும் தொண்டாலும் அவர்கள் உயிர் வாழுகிறார்கள். அவரை நாம் பாராட்டும் முகமாக நமக்கெல்லாம் நூல் படிக்கும் எண்ணம் வளராதா—வளர முடியாதா என்றுதான் நாம் பாராட்டுகின்றோம்.

**குழந்தைக் கவிஞர் திரு. அழ வள்ளியப்பா அவர்கள் புகழுரை :**

பிள்ளை அவர்களுக்குப் பாராட்டு ; அதிலே பிள்ளைத்தமிழ் எழுதுகின்ற ஒருவனுக்கு வாய்ப்பளித்திருக்கிறார்கள். இவர்கள் இதுகாறும் ஏறத்தாழ 1,500 நூல்களைக் கொணர்ந்திருக் கிறார்கள். இவற்றுள் ஏறத்தாழ 300க்கு அதிகமான நூல்கள் குழந்தை நூல்கள் கடந்த 13 ஆண்டுகளாகக் குழந்தை நூல் காட்சிகளில் எங்கள் வேண்டுகோட்கிணங்கி நல்ல நூல்களைக் கொண்டுவந்து வைத்து எங்களுக்கு ஒத்துழைப்புத் தந்து வருபவர் பெரியார் சுப்பையா பிள்ளை அவர்களாவார்கள். எனவே, குழந்தைகள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அறிவியல் துறையில் 50க்கு மேற்பட்ட குழந்தை இலக்கிய நூல்களைக் கழகம் வெளியிட்டிருக்கிறது என்பதை நாம் பெருமையுடன் பார்க்கிறோம். திரு. என். கே. வேலன், திரு. மா. சண்முகசுப்பிரமணியம் ஆகியவர்களைக் கொண்டு பல அறிவியல் நூல்களையும், வரலாற்று நூல்களையும் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் குழந்தை இலக்கிய நூல்களைச் சிறந்த முறையிலே கொண்டு வந்ததைப் பாராட்டுவதற்காகக் குழந்தை எழுத்தாளர் சங்கம் 1963ஆம் ஆண்டிலே குடியரசுத் தலைவராயிருந்த டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள் திருக்கரத்தால் அவர்களுக்குப் பாராட்டுப் பத்திரம் வழங்கியது என்பதை இந்தச் சமயத்தில் நினைவுபடுத்துகிறேன். அவர்களே குழந்தைகளுக்காகச் சில நூல்களை எழுதியிருக் கிறார்கள் என்பதையும் இங்கு பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

**தமிழ்நாடு அரசு சட்டமன்றத்துறைச் செயலர், சட்டத்தமிழ் அறிஞர் திரு. மா. சண்முகசுப்பிரமணியம் பாராட்டுரை :**

சட்டத்துறையிலே நான் சில நூல்களை எழுதியிருக் கிறேன் என்றால் அதற்கு முழுக் காரணம் தாமரைச் செல்வர் வ. சு. அவர்களே. நான் எழுதிய சட்டவியல் (Juris-prudence) என்ற நூலை—அது விற்பனை ஆகுமா? ஆகாதா? என்பது பற்றிக் கவலைப்படாமல் சட்டத்துறையில் நல்ல நூல் வெளிவரவேண்டும் என்பதற்காக வெளியிட்டார்கள். அந்தத் துணிச்சலை நாம் பாராட்ட வேண்டும். அந்த நூல் வெளி யீட்டினால் என் வாழ்க்கையிலேயே ஒரு புதிய திருப்பம் உண்டாயிற்று. அவர்கள் தூண்டுதலின் பேரில்தான் தீங்கியல் சட்டம், குற்ற இயல், குறள் கூறும் சட்டநெறி, சட்டத் தமிழ் ஆகிய நூல்களை எழுதினேன் என்பது மிகையாகாது. 'நம் ஒவ் வொருவரையும் ஒரு பணிக்காக இறைவன் படைத்திருக்கிறான்'

என்று அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள். அஃது உண்மை. இப்படிப்பட்ட அவர் நீண்டநாள் வாழ்ந்து தமிழுக்குச் சேவை செய்யவேண்டும் என்று கூறி விடை பெறுகிறேன்.

**திரு. ஔவை நடராசன் புகழுரை:**

கடந்த 40 ஆண்டுகளாக என்னுடைய தந்தையாருக்கும் தாமரைச்செல்வருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. என் தந்தையாரே இவ்விழாவில் கலந்துகொண்டு அவர்களைப் பாராட்டியிருக்க வேண்டும். ஆனால், இவ்வளவு தொலைவு அவர்களுக்கு வர இயலாததால் நானே அவர்கள் சார்பில் இன்று பேசுகிறேன். பிறரோடு மாறுபாடு கொள்ளுகின்ற நேரத்தில் எப்படியோ தழுவிக் கொண்டு போகும் இயல்பு தாமரைச் செல்வருக்கு உண்டு. இவர்கள் பேராசிரியர் கா. சு. பிள்ளையவர்கள் கடைசிக் காலத்தில் நோய்வாய்பட்டுக் கிடந்த போது அவர்களைக் கண்ணுங் கருத்துமாகப் பார்த்ததற்கு நிகராக ஒன்றும் சொல்ல முடியாது. அவ்வாறே பெருமழைப் புலவர், செல்லூர்க்கிழார் ஆகியோரை அவர் ஓம்பியதையும் தமிழ் உள்ளங்கள் என்றும் மறக்க முடியாது.

வேடிக்கையாகச் சொல்லுவார்கள் — "நெல்லையிலே யிருந்து சில பிள்ளைகள் வந்தார்கள். வந்த பிள்ளைகளிலே ஒரு பிள்ளை தமிழுக்குப் புறம்பாகப் போன பிள்ளை. அது வையாபுரிப் பிள்ளை—ஒரு பிள்ளை தமிழுக்கே உழைத்த பிள்ளை —அது கா. சு. பிள்ளை. இரண்டு பேருக்கும் இப்படியப்படி இருந்த பிள்ளை சேதுப்பிள்ளை. இந்த மூன்று பிள்ளைகளின் நூல்களுக்கெல்லாம் ஆக்கமாக இருந்த பிள்ளை சுப்பையா பிள்ளை" என்று.

நேற்று இங்கு நம் முதல்வர் அவர்கள் வெளியிட்ட உரைதான் நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகிற பொன்னுரை. இன்று கழகம் ஆட்சியிலிருக்கிறதென்றால் 50 ஆண்டு காலத்திற்கு முன்பு நம்முடைய நூற்பதிப்புக் கழகம் செய்த தொண்டு தான் என்று மிகு நன்றியோடு பாராட்டினார்கள்.

வட வேங்கடம் ஆந்திரப் பகுதிக்குச் சேர்கிறபோது "வடவெல்லை வரலாறு" என்று என் தந்தையார் எழுதிய கட்டுரையை 50 ஆயிரம் படிகள் அச்சிட்டு நாடு முழுதும் பரப்பியவர் நம் பிள்ளையவர்களாவர். இந்தி எதிர்ப்பிலும் சரி இப்படித் தமிழ் உணர்விலே அவர்கள் நிகரற்றவர்களாக விளங்குகிறார்கள். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தை நூல் வெளியீட்டுக் கழகம் என்று சொல்ல முடியாது; தமிழ்க் கழகம் என்றே சொல்ல வேண்டும்.

நம்முடைய நீதிபதி போன்றவர்கள் இப்படிப்பட்ட தமிழ்க் கழகங்களைக் கட்டிக் காப்பது நம்முடைய கடமை என்பதை வாய்ப்பு வருகிறபோது அரசுக்கு அறிவுறுத்த வேண்டும். முன்னாலே இருந்தவர்களுக்குத் தெரியாமலிருந்ததற்குக் காரணம் அறியாமை. இப்போது தெரிந்து செய்யாமலிருந்தால் ஏன் செய்யவில்லை—இது கொடுமை என்று ஊர்மக்கள் கேட்கத் தொடங்கிவிடுவார்கள்.

உள்ளியதை முடிக்கும் உரனுடை உள்ளத்தோடு வாழ்கின்ற ஒரு வள்ளிய செம்மலை நாம் முதலமைச்சராகக் கொண்டிருக்கிறோம் என்ற பெருமிதம் நமக்கிருக்கின்றது.

எனவே, நம்முடைய பவளச் செல்வருக்கு அறப்பணிகளையும் கல்விப் பணிகளையும் ஆற்றுதற்குரிய வாய்ப்புகளைப் பெருக்கித் தருவோமானால் அதுவே அவருக்கு வாழ்த்து.

**நன்றியுரை :** (விழாவுடையவர் திரு. வ. சு. பிள்ளை யவர்கள்)

செட்டிநாட்டரசர் அவர்கள் என்னுடைய இரண்டு மருமக்களைப் பற்றி வருகிறவர்களிடமெல்லாம் சொல்லிச் சொல்லி மகிழ்வார்கள். நேற்றுக்கூட இந்தக் கூட்டத்தில் பேசியபோது சொன்னார்கள். பொதுவாக எனக்கு விழா எடுப்பதை நான் விரும்புவதில்லை. ஆனால், இந்த விழா ஏன் எடுக்கப்பட்டது என்றால், நான் எப்படியெல்லாம் பெரும்புலவர்களோடு தொடர்பு கொண்டேன் என்பது அவர்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவே, நூலாசிரியர்கட்கெல்லாம் எழுதி அவர்கள் கருத்தை அறியச் செய்து அதன்மூலம் அவர்களும் என்னைப்போல் பெருமக்களுடைய அன்பையும் ஆதரவையும் பெறவேண்டும் என்பதற்காகவும் என்னைப்போல் அவர்களும் ஊக்கம் பெறவேண்டும் என்பதற்காகவுமே இவ்விழா எடுக்கப் பட்டதேயன்றி எனது பெருமையைத் தெரிவிப்பதற்காக வன்று.

தமிழுக்கு என்ன செய்யலாம், தமிழர்களுக்கு வருகிற இடையூறுகளை எப்படிப் போக்கலாம்—இவையே எனக்கு எப்போதும் சிந்தனை. இன்று நம் மாண்புமிகு சட்ட அமைச்சர் இக் கூட்டத்திற்கு வர இயலாமல் போயினும் நமது பெருமதிப்புக்குரிய நடுவர் திரு. கோகுலகிருட்டிணன் அவர்கள் இந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்ததோடு என்னை வாழ்த்தியதற்கு நன்றி. மேலும், முன்னாள் முதல்வர் திரு பக்தவத்சலம் அவர்கள் தமது தளர்ந்த நிலையில் இங்கு வந்து என்னை வாழ்த்தியதற்கு நன்றி. மற்றும் இங்கு வந்து

என்னை வாழ்த்திய பேராசிரியர்கட்கெல்லாம் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இதுகாறும் பிறருடைய உதவியில்லாமலே இத்தனை நூல்களையும் நான் வெளியிட்டேன். பாட நூல்களைப் பதிப்பிக்கும் பணியை அரசு எடுத்துக் கொண்டுவிட்ட காரணத்தால் இனி நூல்களை வெளியிட முடியாத நிலைமையில் இருக்கிறேன். எனவே, இந்த அரசு சிந்தித்து—செல்வர்கள் சிந்தித்து—ஐயா அவர்களைப் போன்றவர்களும் சிந்தித்து—'உனக்கு என்ன வேண்டும்?' என்று என்னைக் கேட்பார்களேயானால் அதுவே என்னை வாழ்த்துவதனால் இந்த நாட்டிற்கு ஏற்படும் பயனாகும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, உங்களுக்கெல்லாம் எனது உளமார்ந்த—கனிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

இத்துடன் முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

---

## பிற்பகல் நிகழ்ச்சிகள்

அடுத்து பிற்பகல் நிகழ்ச்சி மாலை 4-30 மணியளவில் இசையரசி சேலம் செயலட்சுமியம்மையாரின் திருமுறை இசையரங்குடன் துவங்கிற்று இசையரங்கு முடிந்த பின் தமிழறிஞர் இராவ்சாகிப் கு. கோதண்டபாணிப் பிள்ளை அவர்கள் இசையரசி அம்மையாரின் திருமுறை இசைத் திறனைப் பாராட்டிப் பேசினார்.

இசையரங்கு முடிவுற்ற பின் மாலை நேர நிகழ்ச்சி டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் வரவேற்புரையுடன் தொடங்கிற்று.

**சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் வரவேற்புரை:**

தமிழ் வரலாற்றிலும் தமிழர் வரலாற்றிலும் தமிழ்க் கலைகளின் வரலாற்றிலும் தமிழ்த் தொழில் வரலாற்றிலும் மிகச் சிறப்பமைந்த விழா இந்த விழாவாகும். இந்தியாவில் மிகப் பெரிய புத்தக வெளியீட்டாளர்களாக 200 பேரும் நடுத்தர வெளியீட்டாளர்களாக 2000 பேரும், சிறுசிறு வெளியீட்டாளர்களாக 8000 பேரும் இருப்பதாக மிக அண்மையிலே வெளிவந்திருக்கும் இந்திய அரசாங்கத்தின் புள்ளி விவரப் புத்தகம் குறிப்

பிடுகிறது. அந்த வகையில் மிகப்பெரிய புத்தக வெளியீட்டாளரும் அந்த 200 பேர்களுள் ஒருவரும் ஆகிய ஒருவருக்கு இங்கு நாம் பவளவிழாக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். நமக்குத் தெரிந்தவரையில் தமிழ் வரலாற்றில் தமிழர் வரலாற்றில் ஒரு புத்தக வெளியீட்டாளருக்கு இதுபோன்ற விழா எடுப்பது இதுவே முதல்முறை யாகும். இந்தமுறை மேலும் வளரவேண்டும் என்பதே நம் விழைவு.

புத்தக வெளியீட்டாளர் ஒருவருக்கு அந்த மாநிலத்தின் ஆளுநர், முதல்வர், கல்வியமைச்சர், முன்னாள் இந்நாள் துணை வேந்தர்கள், உயர்நீதி மன்ற நீதிபதிகள், எழுத்தாளர்கள், துறவிகள், ஆடவர், மகளிர், இயலிசை நாடகக் கலைஞர் இப்படி எல்லாத் துறையினரும் சேர்ந்து தம்முடைய நன்றிக் கடனைச் செலுத்துகிறார்கள் என்றால் இதன் பொருள் என்ன ? அறிவுடையார் எல்லாம் உடையார். அந்த அறிவை வளர்க்கக் கூடிய வலிமை வாய்ந்த பெருமை வாய்ந்த கருவி புத்தகம்தான். ஆகவே, இந்த நாட்டில் மட்டுமன்று; உள்ளுக்குள்ளே இருக்கிற உள்ளங்களுக்கும் வெளியே இருக்கிற உலகங்களுக்கும் எல்லாப் புரட்சிகளுக்கும் அடிப்படையாக இருப்பது புத்தகம் என்ற வலிமை வாய்ந்த கருவி. அந்தக் கருவியை வலிமை வாய்ந்த வகையில் வளர்த்துவந்த ஒருவருக்கு ஆளுநர் முதல் அடியார் வரையில் நாம் அனைவரும் நன்றிக் கடனைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இங்கே நாம் எந்த வெளியீட்டாளருக்குப் பவளவிழாக் கொண்டாடுகிறோமோ அவர் ஒரு சாதாரண புத்தக வெளியீட்டாளர் மட்டும் அல்லர். அவரிடத்தில் இருக்கும் ஒரு பெரும் சிறப்பு என்னவென்றால் அவரே ஒரு சிறந்த எழுத்தாளர். அவரே ஒரு புத்தக விற்பனையாளர். அவரே ஒரு புத்தக வெளியீட்டாளர்; அவரே ஒரு நூலகர்; அவரே ஒரு வாசகர் என்பதையும் இந்த இடத்தில் நாம் பார்க்கிறோம். நம் பவள விழாச் செல்வர் ஒரு இதழாசிரியராகவும் இருக்கின்றார். 'செந்தமிழ்ச் செல்வி' என்ற திங்களிதழ் ஒன்றையும் அவர் ஆசிரியராக நின்று வெளியிட்டு வருகின்றார். அந்த இதழ்தான் என் போன்றவர்களுக்கு டாக்டர் மு. வ. போன்றவர்களின் கட்டுரைகளையும் இன்னும் சிறந்த கட்டுரைகளையும் படிக்கும் வாய்ப்பினை நல்கியது. இந்த இதழைக் கடந்த நாற்பத்தேழு ஆண்டுகளாக மிகச் சிறப்புற நடத்தி வருகின்றார்.

இந்தியாவின் தலைசிறந்த எழுத்தாளராகிய மஞ்சேரி ஈஸ்வரன் "மக்கள் வழியிலே நடப்பதுபோல் நடித்து அவர்

களைத் தம் வழியில் நடக்கச் செய்கின்றவர்கள் எவரோ அவரே எடுத்துக்காட்டத்தக்க சிறந்த வெளியீட்டாளர்'' என்று கூறு கிறார். எனக்குத் தெரிந்தவரையில் தமிழகத்தில் இந்த எடுத்துக்காட்டுக்குச் சிறந்த இலக்கியமாகத் திகழ்பவர் நம் சுப்பையா பிள்ளை அவர்கள் ஒருவரேயாவர்.

அவர் இந்த அரை நூற்றாண்டாகத் தமிழ் வளர்ச்சி ஒன்றையே தம் குறிக்கோளாகக் கொண்டு இடைவிடாது தொண்டு ஆற்றி வருகின்றார். அத்தகைய பெருந்தொண்டைப் பாராட்டுவது நம் கடமையாகும். அத்தகைய நல்ல ஒருவரைப் பாராட்ட வந்திருக்கும் அனைவரையும் நான் வரவேற்கிறேன். அவரை நாம் பாராட்டுவது அவரைப் பாராட்டுவது மட்டு மன்று. அவருடைய கண் போன்ற இரு மருமக்களையும் பாராட்டு வதற்கு ஒப்பாகும்.

திரு. சுப்பையா பிள்ளை அவர்கள் வெளியிட்டவைகளுள் சொற்பொழிவு நூல்கள் என்பவை ஒருவகை. அறிஞர்கள் பலர் கட்டுரை எழுதிக் கேட்டால் விரைவில் கொடுக்க மாட்டார்கள். ஆனால், சொற்பொழிவுக்கு அழைத்தால் வருவார்கள், பேசுவார்கள். அப்படி அவர்கள் ஆற்றும் சொற் பொழிவைக் கட்டுரையாக முதலிலேயே எழுதி வாங்கி அவற்றையும் நூல்களாக அச்சிட்டு வெளிப்படுத்திய வித்தகம் திரு சுப்பையா பிள்ளை அவர்களுக்கே உரிய தனித்திறமை யாகும். இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஒருவரின் பவளவிழா வினைப் பாராட்ட வந்திருக்கும் உங்கள் அனைவரையும் உளமார வரவேற்கிறேன்.

**மதுரைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தொடக்கவுரை :**

தமிழாலே வாழ்கின்ற சிலருள்ளே நானும் ஒருவன். திரு. சுப்பையா பிள்ளை அவர்களின் தொண்டு இல்லாமல் போனால் என் போன்றவர்களது நிலை என்ன என்று எண்ணிப் பார்க் கின்றேன். இன்று தமிழ் கற்று வருகின்ற மாணாக்கர்கள் பழந் தலைமுறையினர்போல இடர்ப்படுவதில்லை. கல்லாடனார் தொல்காப்பியனார் உரை என்றால் நான் அந்தக் காலத்தில் எழுதித்தான் படித்தேன். இப்படிப் பல உரைகள். மணக் குடவர் உரையா ? எழுதித்தான் படித்தேன். இப்படிப் பல நூல்களை எழுதி எழுதிக் கை ஓய்ந்து, கண் ஓய்ந்து, உள்ளம் ஓய்ந்து, உடலும் ஓய்கிற நிலைக்கு வந்திருக்கிறோம். ஆனால், இன்றைய மாணவர்களுக்கு அத்தகைய அவலநிலை நேராமல்

காத்த பெருமை திருவாளர் சுப்பையா பிள்ளை அவர்களுக்கு உண்டு.

நான் பல நிலையங்களுக்குத் தலைமை பூண்டிருக்கின்ற வாய்ப்பினைப் பெற்றவன். புத்தகங்களை வாங்குவதற்குப் பணம் கை நிறைய இருந்தது. ஆனால், எங்கே போய் வாங்குவது, இலட்ச ரூபாய் பொருளாதாரப் பேராசிரியரிடம் கொடுத்தால் பற்றாது என்கிறார். விஞ்ஞானப் புலவரிடத்தோ சொல்லவே வேண்டா. தமிழாசிரியராக நானும் இருந்தேன். எங்கே கொண்டு போய் நான் செலவிடுவது? அவர்கள் 1,500 நூல்கள் வெளியிட்டிருக்கின்றார்களே, அவை ஒன்றும் விலை அதிகம் இல்லை. முப்பதினாயிரம் ரூபாய்க்குக்கூடத் தாளாது இன்றிருக்கின்ற தமிழ் நூல்களை எல்லாம் வாங்குவதென்றால். இந்த அவல நிலையை எண்ணி நம்முடைய சுப்பையா பிள்ளை தொண்டாற்றுவதோடு அவருடைய அடிச்சுவட்டிலே இன்னும் பலர் வருதல் வேண்டும்.

தாமோதரம் பிள்ளை பதிப்பு, ஆறுமுக நாவலர் பதிப்பு, சாமிநாதையர் பதிப்பு இப்படிப் பல பதிப்பகங்கள் இருந்தன. ஆனால், எத்தனை நூல்கள் வெளிவந்தன? விரல் விட்டு எண்ணி விடலாம். 1,500 எண்ணிக்கையை அவர்கள் எட்டவில்லை. 'ரிப்பன் பிரஸ்' என்று ஒன்று இருந்தது. அது பல நூல்களை வெளியிட்டது. அதுகூட 1,500 எண்ணிக்கையைத் தாண்டவில்லை. 1,500 தானா இன்றைக்கு? அதற்கு மேலும் தாண்டி வருகின்றன. தாண்டத்தான் வேண்டும். பிற முன்னேற்ற நாடுகளில் பார்த்தால் பத்து லட்சத்துக்குக் குறைவாக அவர்கள் நூல்கள் அச்சிடுவதில்லை. நாம் அந்த நிலைபெறுவது எப்போது?

கழகம் தனி ஒருவர்க்கு உரிய நிறுவனம் அன்று. அது பலர் உரிமை கொண்ட பொதுநிலையம். அதைப் பொறுப்பெடுத்துத் திறம்பட நடத்துகின்றார் நண்பர் சுப்பையா பிள்ளை அவர்கள். அவர் தமையனார் திருவரங்கனார் அவரை வளர்த்து விட்டார். அவர் வளர்ந்து கழகத்தையும் வளர்த்து வருகின்றார்.

தமிழால் பிழைக்கின்ற—பிழைத்த நான், இந்தப் பிழைப்புக்கெல்லாம் துணையாக வழிகாட்டியாக, எங்கள் பரம்பரை மேலும்மேலும் வளருவதற்குச் சிறந்த ஊன்றுகோலாய் இருந்த பவள விழாச் செல்வர் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

**திரு. கிருஷ்ணராஜ் வாணவராயர் (வள்ளல் பொள்ளாச்சி மகாலிங்கமவர்களின் மருகர்) :**

அருமையான நூல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை அழகான முறையில் அச்சிட்டு வெளியிடுவது ஒரு சிறந்த கலையாகும். 1,500 நூல்களை அதுவும் தரமான பழம்பெரும் இலக்கியங்களை வெளியிட்ட பெருமை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினையே சாரும். இலக்கியம் என்ற பெயரால் ஈசலினையும் காளான்களையும் வெளியிடும் இந்தக் காலத்தில் கழகம் தரமான நிலையான நூல்களை வெளியிடுவதையே தனது கடமையாகக் கொண்டுள்ளது. இங்கிலாந்து நாட்டின் பிரதமராக இருந்த மாக்மில்லன் குடும்பத்தோடு தொடர்பு கொண்டது மாக்மில்லன் புத்தகக் கம்பெனி. அதைப்போலவே தமிழ்மலையாக விளங்கிய மறைமலையடிகளாரோடு தொடர்புள்ள பெருமை கழகத்துக்கும் திரு. சுப்பையா பிள்ளை அவர்களுக்கும் உண்டு. கடந்த ஐம்பது ஆண்டுகளாக நாளும்பொழுதும் தமிழ் வளர்ச்சி முயற்சியிலேயே திரு. பிள்ளை அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றூர்கள். அவருடைய நோக்கம் உயர்ந்த நோக்கம். அவருடைய செயல்கள் சிறந்த செயல்கள். அவருடைய கனவுகள் நனவாக வேண்டிய தமிழ்நாட்டு இலட்சியங்கள். அவர் பல்லாண்டு வாழ்ந்து நாட்டுக்கும் மொழிக்கும் நலம் சேர்க்க வேண்டுமென்று இறைவன் திருவருளை வேண்டுகின்றேன்.

**பொருளாதாரப் பேரறிஞர் டாக்டர் பா. நடராஜன் அவர்கள் ஆற்றிய தலைமையுரை :**

எனக்குத் தெரிந்த வரையில் ஒருவகையில் திரு. சுப்பையா பிள்ளை அவர்களைக் கொலம்பசுக்கு ஒப்பிடலாம். கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததுபோல் இவர் மனிதனைக் கண்டுபிடித்தார். தமிழ்நாட்டில் யார் யார் மனிதராக இருக்கின்றூர்கள், எழுத்தாளராக இருக்கின்றூர்கள், அறிஞராக இருக்கின்றூர்கள் ; ஊர் ஊராகச் சென்று, வெளியிட வேண்டிய நூல்கள் இருக்கின்றன ; எவரெல்லாம் நூலாசிரியராக இருக்கத் தகுதியுள்ளவர்களாக இருக்கின்றூர்கள் என்று கண்டு பிடித்தார்கள். ஆசிரியர்களாக இல்லாதவர்களை ஆசிரியர்களாக்கினுர்கள். நூலாசிரியராக்கினுர்கள். என்னைப் போன்றவர்களை அடிக்கடி வந்து கண்டு "ஏதாவது எழுதுங்கள் ; ஏதாவது எழுதுங்கள்" என்று நூலாசிரியர்களாக ஆக்கிவிட்டார்கள். இப்படிப்பட்ட இவர்கள் ஐம்பது ஆண்டுகளில் 1,500 நூல்களை வெளியிட்டிருப்பது தமிழ்நாட்டுக்கு ஒரு

# பவள விழா

## 5—8—'73

### இரண்டாம் நாள் பிற்பகல் நிகழ்ச்சி

தமிழகத் திட்டக்குழு உறுப்பினர்
டாக்டர். பா. நடராசன்
அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



இசைப்பேரரசி
சேலம் சி. செயலட்சுமி அம்மையாரின்
திருமுறை இசையரங்கு

அறிஞர் பெருமக்கள் பாராட்டிப் பேசியதுடன், தில்லித் தமிழ்ச் சங்கம், நக்கீரர் கழகம், மாணவர் மன்றம், ஓ. ப. சீ. நண்பர்கள் கழகம், கழக ஆட்சிக் குழு உறுப்பினர்கள், கழகப் பணியாளர்கள் முதலியோர் பரிசு வழங்கி மாலையணிவித்து நிகழ்ச்சியினை அழகுபடுத்தினர்.



சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத்தலைவர்
டாக்டர். ந. சஞ்சீவி அவர்கள்
வரவேற்புரை யாற்றுதல்



மதுரைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர்
டாக்டர். தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்
தொடக்கவுரை நிகழ்த்துதல்



தமிழகத் திட்டக்குழு உறுப்பினர்
டாக்டர். பா. நடராசன் அவர்கள்
தலைமையுரை யாற்றுதல்



சென்னை, பொறியியல் கல்லூரிப் பட்டமேற்படிப்பு முதல்வர் (டீன்)
டாக்டர் வ. செ. குழந்தைசாமி அவர்கள்
சிறப்புரை யாற்றுதல்



தமிழகச் சட்டமன்ற மேலவைத் துணைத்தலைவர்
சிலம்புச் செல்வர். ம. பொ. சிவஞானம் அவர்கள்
கழக நூலாசிரியர்
இராவ்சாகிப் கு. கோதண்டபாணி பிள்ளை அவர்கட்குச்
சால்வை போர்த்துதல்



கழக நூலாசிரியர்
புலவர் இரா. இளங்குமரன் அவர்கட்குச்
சிலம்புச் செல்வர் சால்வை போர்த்துதல்



திருமிகு சௌந்தரம் கைலாசம் அம்மையார்
தீந்தமிழ்க் கவிதையால் பாராட்டுதல்



தில்லித் தமிழ்ச் சங்கத் தலைவர்
திரு. சி. வி. நரசிம்மன் அவர்கள்
சங்கத்தின் சார்பில் மாலையணிவித்தல்



வள்ளல் நா. மகாலிங்கம் அவர்கள் வழங்கிய
பவளவிழாப் பரிசுடன்
பவளவிழாத் தலைவரும் துணைவியாரும்



'அனிச்ச அடி' ஆசிரியர் புலவர் ஆ. பழநி அவர்கள்
பாராட்டிதழ் படித்தளித்தல்



கழகச் செயற்குழு உறுப்பினர்கள் சார்பில்
திரு. இ. க. சேதுராமலிங்கம் பிள்ளை அவர்களும்
திரு. கா. வ. முத்தையா பிள்ளை அவர்களும்
'வெள்ளிப் பிள்ளையார்' பரிசளித்தல்



கழகப் பணித்துணைவர் சார்பில்
கழகப் புலவர் சாந்த சுந்தரனார் அவர்கள்
கலைமகளின் செப்புத் திருவுருவைப் பரிசளிக்கிறார்



பவள விழாக் காண வந்திருந்த
பைந்தமிழ்ச் செல்வர்களில்
ஒரு பகுதியினர்



பவளவிழாச் செல்வருடன்
கழகச் செயற்குழு உறுப்பினர்கள்

பெருமை, என்று நான் கருதவில்லை. வளர்ச்சி வேகம் என்று பொருளாதாரத்தில் நாங்கள் சொல்லுகிறோம். அது ஐம்ப தாண்டில் வந்ததில் ஒரு பெருமை இல்லை. நல்ல நாடாக இருந்தால் பத்து ஆண்டில் வரவேண்டியது. தமிழகத்தில் போதிய கல்வியறிவு இல்லை. புத்தகங்களை வாங்க ஆட்கள் இல்லை. அச்சிட வசதி இல்லை. நாட்டில் பொருளாதார வசதி இல்லை. இந்த நிலையில் ஐம்பது ஆண்டுகள் ஆகித்தான் இப்பொழுது ஒருவகையில் இன்று சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் தன்னிறைவு பெற்ற ஒரு நிலையில் இருக் கின்றது. இனிமேல் எவருடைய தயவும் இல்லாமல் அது தானாக வளரக்கூடிய ஒரு நிலையில் இருக்கின்றது. ஆனாலும், வளர்ச்சிக்கு வேண்டிய பலவித ஆதரவுகளை அரசாங்கமும் பொதுமக்களும் அவர்களுக்குக் கொடுப்பார்களானால் இன்னும் பற்பல துறைகளில் அவர்கள் மேலும் தொண்டு செய்ய ஏது வாகும். ஏனென்றால் தமிழர்கள் ஆட்சி என்றால் பெரிய மாட கோபுரங்களைக் கட்டுவது என்பது மட்டுமன்று; பெரிய தொழில்களை நிறுவுவது மட்டுமன்று; பூங்காக்களை வைப்பது மட்டுமன்று. தமிழர்களைப் படைக்க வேண்டும்; மனிதர்களை உண்டாக்க வேண்டும்; எல்லாத் துறையிலும் விஞ்ஞானத் துறையில் — தத்துவத் துறையில் — கணிதத் துறையில் இப்படி என்னென்ன அறிவுத் துறைகள் இருக்கின் றனவோ அந்தந்த அறிவுத் துறையிலெல்லாம் மனிதர்களைப் படைக்க வேண்டும்.

இந்த முறையில் தமிழ் வேகம், தமிழ்த் தேசியம், தமிழுணர்வு, தமிழ் நாட்டுணர்வு, தமிழன், தமிழனைப் படைத்தல், தமிழ் மனிதனை உண்டாக்குதல் என்ற தொண்டில் ஓரளவு கொஞ்சம் ஆர்வத்தோடு ஈடுபட்டுத் தமிழர் வெற்றி பெற்றார்கள் என்றுதான் நான் சொல்வேன். தமிழும் சைவமும் வேறு என்று அவர்கள் கருதவில்லை. ஒருவன் எந்தச் சமயத்தில் இருந்தாலும் அவன் தமிழுக்கு அன்புடையவனாக இருந்தால் அவனைச் சைவன் என்று கருதுவார்கள். இப்படிப்பட்ட இவர்களை உங்கள் சார்பாகவும் தமிழ்ப் பெருங்குலத்தின் சார்பாகவும் வாழ்த்துகிறேன்.

**தமிழக சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் பாராட்டுரை :**

என்னை விடப் பெரியவராகிய திரு. சுப்பையா பிள்ளை அவர்களை வாழ்த்தும் பேறு கிடைத்தமைக்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அவரை வாழ்த்தும்போது என்னுடைய

பிரார்த்தனை எல்லாம் அவருக்கு நூறாண்டு நிறைவு விழாவும் நடைபெற வேண்டும். அந்த விழாவில் நான் வந்து வாழ்த்த வேண்டும் என்பதுதான். ஐம்பத்து மூன்று ஆண்டுகள் கடந்து விட்ட ஒரு நூற்பதிப்புக் கழகத்துக்கு எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவுபெற்ற ஒரு பணியாளர்க்கு விழாக் கொண்டாடுகின்ற நேரத்தில் அவரோடு ஒப்பிட இரண்டாவது நபர் இல்லை. இஃது ஒன்றே அவருடைய பணிக்கு அவருடைய சிறப்புக்குப் பெரும்பேறு. கழகம் தோன்றாமலிருந்து அதற்குச் சுப்பையா பிள்ளை தலைவராகவும் ஆகாமல் இருந்திருந்தால் இவ்வளவு நூல்களும் தோன்றியிரா; இத்தனை எழுத்தாளர்களும் தோன்றியிருக்கமாட்டார்கள். அந்தப் பெருமை நம் சுப்பையா பிள்ளை அவர்களைத்தான் சாரும். இப்படி எழுத்தாளர் பலரை வளர்த்துத் தாமும் வளர்ந்தார்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இந்த நிலையம் துவங்கும் பொழுது எந்த அளவுக்குத் தனித்தமிழ்ப் பற்றாளராக இருந்தாரோ அந்தத் தனித்தமிழ்ப் பற்றில் இருந்து கொஞ்சங்கூடப் பிறழ்ந்து கலப்புத் தமிழுக்கு அவர் மாறவில்லை. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நிலையத்தின் பொறுப்பை இவர் ஏற்கும்போது எப்படித் தம்மை அர்ப்பணித்தாரோ அதற்குப் பின்பு எந்தக் கவர்ச்சியும் எந்த அதிர்ச்சியும் தம்மை மாற்ற விடாமல் இதற்கே தம்மை அர்ப்பணித்து விட்டார். இப்படி ஒருவர் இருப்பது இந்த இருபதாம் நூற்றாண்டின் நாகரிகத்தை மீறிய ஒரு செயல். அவர் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக என்னிடம் வந்திருக்கின்றாரே தவிர, வேறு ஒரு தனிப்பட்ட செயலுக்கும் என்னிடம் வந்ததே கிடையாது. பதிப்பாளர்கள் பிறர் இருக்கிறார்கள். சில நூல்களையும் கூட வெளியிடுகிறார்கள். இருந்தாலும்கூட சுப்பையா பிள்ளை அவர்களிடம் ஒரு தனிப்பட்ட தன்மை இருக்கிறது. அஃதாவது பிற பதிப்பாளர்கள் தம் பதிப்பு வெளியீட்டு விழாக்களோ அல்லது நிகழ்ச்சிகளோ இருந்தால்தான் கலந்து கொள்வார்கள். நம் சுப்பையா பிள்ளையவர்கள் அப்படியல்லர். தம் நிறுவனத்தின் விழாவாகவோ அல்லது பிற எந்த நிறுவனத்தின் விழாவாகவோ இருந்தாலும் சரி, அவ்விழா தமிழ் சார்ந்ததாக—தமிழ் மொழிக்கு ஆக்கம் பயப்பதாக—தமிழ் வளர்ச்சிக்கு ஏதாவது ஒரு வகையில் பயன்படுவதாக இருந்தால்கூட அவர் அவ்விழாவில் கையில் ஒரு புத்தகம் அல்லது ஒரு மாலை காணிக்கையுடன் அங்கே வந்து வீற்றிருப்பார். ஆண்டுதோறும் என் பிறந்த தின விழாவில் ஒவ்வொரு நூல் தவறாமல் கொண்டு வந்து கொடுப்பார். அந்தத் தொண்டு

மனப்பான்மை மட்டும் அன்று, தன்னைக் கௌரவிப்பது மட்டு மன்று; பிறரைக் கௌரவிப்பதும் கூடத்தான் தமிழ் வழக்கு. தமிழ் வாழ்க என்கிறோம். நாம் தமிழை இரசிக்கிறோமா, மதிக்கிறோமா என்று எனக்கு ஓர் ஐயம் வந்து விடுகிறது பல நேரங்களில்.

பிற மாநிலத்தாரெல்லாரும் தம் மொழியை மதிக் கின்றார்கள்; நாம் நம் மொழியை இரசிக்கின்றோம். நாம் முதலில் மொழியை மதிக்க வேண்டும். மதிப்பது வேறு; இரசிப்பது வேறு. நம் சுப்பையா பிள்ளை ஐம்பத்து மூன்று ஆண்டுகள் பாடுபடவில்லையானால் இவ்வளவு இலக்கியங்கள் வெளிவந்திருக்குமா என்பது ஐயப்பாடுதான். அவர் வெளியிட்ட பாடநூல்களைக் கல்லூரிகளுக்கும் பள்ளிகளுக்கும் பாடமாக வைப் பதனால் அவர்களுக்குப் பக்கபலமாக இருந்தது. வைப்பவர் களுக்கும் பக்கபலமாக இருந்து நூல் கொடுப்பதற்கு அவர் துணைபுரிந்து வந்திருக்கின்றார். ஆகமொத்தத்தில் அவர்கள் என்னிடம் அடிக்கடி வந்து குறைப்பட்டுக் கொண்டதிலிருந்து இந்த நிறுவனம் ஒரு இலாபகரமான நிறுவனமாக இன்னும் ஆகவில்லை. அச்சடித்த நூல்களை அவர் பல நூல்நிலையங் களுக்கும் பிற இடங்களுக்கும் அனுப்புவதில் அச்சடித்த புத்த கங்களில் உள்ள தாள்களைப் பார்த்தாலே அஃது அச்சடித்து நீண்ட நாள்கள் ஆகியிருப்பதும் இந்த நிறுவனம் இலாபகர மானதாக இல்லை என்றும் நாம் தெரிந்துகொள்ள வழி செய்கிறது. அதில் அவர்கள் சளைக்காமல் உறுதியாக நின்று பணியாற்றுகின்றார். அவர் எவரிடமும் சென்று எனக்கு அதைக்கொடு, இதைக்கொடு என்று இதுவரைக்கும் கேட்டது கிடையாது. ‘தாமரைத்திரு’ என்ற பட்டமே இந்த எழுபத் தைந்து வயதில்தான் அவரை வந்து எட்டியது.

நாம் வடக்கே கொஞ்சம் கவனிக்க வேண்டும். அங்கெல் லாம் மொழிகளை எப்படி எப்படி வளர்க்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள வேண்டும். அங்கே பல்கலைக் கழகங்களில் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள அந்தந்தப் பிரதேசப் பண்டிதர்களையும் அழைக்கிறார்கள். இங்கே நம்முடைய பல்கலைக் கழகங்களில் ஆங்கிலம் தெரியாத ஆங்கிலத்தில் பயிற்சி குறைந்து அவரவர்கள் தாய்மொழிகளில் நிறைபுலமை யுடையவர்களை அழைப்பது கிடையாது.

நாம் நம் மொழியில் வளர்ச்சியடைந்துதான் வருகின்றோம். அதில் சந்தேகமே கிடையாது. ஆனால், பிற மொழிகளின் வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது நம் மொழி வளரவில்லை என்று

நாம் உணர வேண்டும். இலாபம் கருதாமல் பணி ஒன்றே கருதிப் பணியாற்றி வருபவர்கள் சாமிநாதையரும் சுப்பையா பிள்ளை அவர்களுமே நம் கவனத்தில் இருக்கின்றார்கள். இத் தகைய தொண்டினை உறுதியுடன் ஆற்றிவரும் நம் சுப்பையா பிள்ளை நூறாண்டு வாழ்வதுடன் நான் முன் குறிப்பிட்டபடி அவரது நூற்றாண்டு விழாவிற்கும் நான் வருவேன் என்று சொல்லி விடைபெறுகின்றேன்.

**சென்னை, பொறியியல் கல்லூரி மேல் பட்டப்படிப்பு முதல்வர் (டீன்) டாக்டர் வ. செ. குழந்தைசாமி அவர்கள் :**

தமிழ் மொழிக்கு வந்த இடர்கள், இன்னல்கள், கொஞ்ச நஞ்சமல்ல. இருந்தும், நம் தாய்மொழி இன்று உயிர்ப்பும், ஓட்டமும் குன்றாது விளங்குகிறது என்றால், அது அவ்வப் பொழுது, அந்தந்தக் காலத்துக்கேற்பத், தனக்கென வாழாது, தமிழுக்கென வாழும் பெரியவர்களைப் பெற்றிருந்ததும், பெற் றிருப்பதும் தான் காரணம். எனவே, பாண்டியன் மொழியில், "உண்டாலம்ம தமிழ் ; திரு. பிள்ளையவர்களைப் போன்ற தமக்கென வாழாது தமிழுக்கென வாழுநர் உண்மையானே" என்று கூறலாம்.

பிள்ளையவர்கள், தமிழுக்குச் செய்த தொண்டின் சிறப்புப் பகுதி என்ன என்று ஆய்வது, பொருத்தமுடையதாகும். வால்ட் விட்மன் என்ற அமெரிக்கக் கவிஞனைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் ; அவன் புத்தக நிலையங்களைப் பார்த்துக் கூறினான் :

மதிப்புக்குரிய நூல் நிலையங்களே ! நிறைந்திருக்கும் உங்களது அலமாரிகளில் இல்லாத, ஆனால், உங்களுக்கு மிகமிகத் தேவையானவற்றை நான் கொண்டு வருகிறேன் என்றான் வால்ட் விட்மன். அந்தக் கவிஞனைப் பொறுத்தவரை, அது உண்மையோ, பொய்யோ நானறியேன். ஆனால், தமிழன்னையின் எளிய நூல்நிலையத்தில் இல்லாத, ஆனால் இன்றியமையாது தேவைப்பட்ட எண்ணற்ற நூல்களைத் திரு. பிள்ளையவர்கள் கொண்டு தந்தார்கள்.

தமிழுக்கு அவர்கள் படைத்துள்ள விலைமதிப்பற்ற நூல் மாலையில், வரலாற்று நூல்கள் உள்ளன ; மொழியாராய்ச்சி நூல்கள் உள்ளன ; அறிவியல் நூல்கள் உள்ளன. மொழி பெயர்ப்புகள் உள்ளன. அகராதி, ஆட்சித்துறை நூல்கள் ஆகியனவும் உள்ளன.

காடெனில் நடந்து, நதியெனில் நீந்தி, மலையெனில் கடந்து, குறிக்கோளையடையும் வரை குன்றாத ஆர்வத்துடனும், குறையாத நம்பிக்கையுடனும் மேற்செல்லும் செயல்வீரர் திரு. பிள்ளையவர்கள்.

சங்ககாலத்திலிருந்து, இன்றுவரை வெளிவந்த தமிழ்ப் புத்தகங்களின் தொகை என்ன? நான் எனக்குத் தெரிந்த நண்பர்கள் பலரையும் கேட்டேன். எனக்கு இதற்குப் பதில் கிடைக்கவில்லை. சற்று அதிகமாகவே மதிப்பிட்டால் கூட, 40,000 அல்லது 50,000 நூல்கட்கு மேல் இருக்காது. இன்றைய அறிவு வளர்ச்சியின் வேகம் என்ன? இன்றைய உலகில் நூல்கள் எந்த அளவில் வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பதை எண்ணுவது சற்றுப் பொருந்தும்.

மேற்கு ஜெர்மனியும், ஜப்பானும், பரப்பிலும், மக்கள் தொகையிலும் சிறு நாடுகள். அவற்றின் மக்கள்தொகை, தமிழகத்தைப்போல் $1\frac{1}{2}$ அல்லது 2 மடங்குக்கு உட்பட்டது. மேற்கு ஜெர்மனி மட்டும் ஓர் ஆண்டுக்கு 45,000 நூல்களை வெளியிடுகிறது. ஜப்பான் 31,000 நூல்களை வெளியிடுகிறது. அமெரிக்கா வெளியிடுவது 80,000 நூல்கள். இரஷியா வெளியிடுவது 79,000 நூல்கள். கல்வி வளர்ச்சியில் முன்னேறிய நாடுகள், அங்கு பேசப்படும் மொழிகள் எங்கிருக்கின்றன? நாம் எங்கிருக்கிறோம்? என்பதை நினைத்தாலே நமக்கு மலைப்பு ஏற்படுகிறது. இந்தப் பெரும் பணியில் முன்னோடியாக நின்றவர்கள் திரு. பிள்ளையவர்கள். திருநெல்வேலிச் சீமை முதன் முதலாகக் கப்பலோட்டிய தமிழனை மட்டும் தரவில்லை. அறிவுத் துறை, ஆய்வுத் துறைகளில் பேரளவில் நூல்களை வெளிக்கொணர்ந்ததன் மூலம், முன்னேறிய சமுதாயத்திற்கும், தமிழகத்திற்கும், அறிவுத்துறையில் பாலம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டிய முதல் தமிழராகிய பிள்ளையவர்களையும் தந்திருக்கிறது.

பண்டைய காலத்தில், கடல் கொண்டதால் அழிந்த நூல்களைப் பற்றி நினைத்து நாம் கண்ணீர் வடிக்கிறோம். பின்னர் கறையானுக்கும், பூச்சிக்கும், காவிரிப் பெருக்குக்கும் இரையான நூல்களை எண்ணிக் கலங்குகிறோம். இது இயற்கை. ஆனால், அதே சமயத்தில், இன்று, நாள்தோறும், வழக்கொழிந்து, தமிழர் வாழ்விலிருந்து மறையும், பல நூறு சொற்களைப் பற்றி நாம் கவலைப்படுவதில்லை, சான்றாக, இரண்டொன்று கூற விரும்புகிறேன்.

எங்கள் ஊர்ப்பக்கத்தில் குடிசைவாழ் பெண்கள், பக்கத்துக் குடிசையிலிருந்து உப்போ, மிளகாயோ, தானியமோ, கடன் வாங்கினால், பக்கத்துக் குடிசையில் போய் 'குறியாப்பை' வாங்கி வருகிறேன் என்பார்கள். இந்தச் சொல் அந்தப் பகுதியில் வழங்கப் பார்த்திருக்கிறேன். ஆனால், அதே பகுதியில் இருக்கும் சிற்றூர்களிலுள்ள மக்கள் பயன்படுத்த நான் கண்டதில்லை. இந்தச் சொல்லின் அடிப்படையும் எனக்கு அப்பொழுது விளங்கவில்லை. இப்படி, வேறான ஏதோ ஒரு கொச்சைச் சொல்லைப் பயன்படுத்துகிறார்கள் என்பது மட்டும் புரிந்தது. பின்னர் நான்,

*வறியார்க் கொன்றீவதே ஈகை ; மற்றெல்லாம்*
*குறியெதிர்ப்பை நீர துடைத்து.*

என்ற குறளைப் படிக்கும்பொழுதுதான், இந்தக் 'குறியெதிர்ப்பை'த்தான் அங்கு 'குறியாப்பை'யாகி வழங்கப்படுகிறது என்பதை உணர்ந்தேன். (குறியெதிர்ப்பையாவது அளவு குறித்து வாங்கி, அவ்வாங்கியவாறே எதிர் கொடுப்பது). எவ்வளவு அழகான தமிழ்ச்சொல். அது எங்கே எவ்வளவு எளிமையான, படிப்புவாசனை யில்லாத இடத்தில் பழக்கத்திலிருக்கிறது என்பதை எண்ணி வியந்தேன்.

இதுபோன்று எவ்வளவோ சொற்கள் தமிழகத்தின் நாட்டுப்புறங்களில், பல்வேறு நிலைகளில், பல்வேறு மக்கள் குழுவில் பயன்படுத்தப்படுகின்றன. அவை யனைத்தும் நமது அகராதியில் இடம் பெற்றிருக்கின்றனவா? அவற்றைத் தொகுத்து, வரிசைப்படுத்தி வைக்க நாம் ஒரு திட்டமிட்ட முயற்சியை மேற்கொண்டிருக்கிறோமா என்றால், இல்லை என்று நான் அஞ்சுகிறேன்.

விழா நாயகரான பிள்ளையவர்களே !

தமிழ் வாழ வாழ்ந்த உமது தவத்தை இன்றைய தமிழகம் உணர்ந்து போற்றுகிறது. எதிர்காலத் தமிழகம் நினைந்து நன்றி சொல்லும். தமிழ் வரலாறு உமது தொண்டிற்குத் தலை வணங்கும்.

இந்த நூற்றாண்டில், தனித்தமிழ் வளர்க்கப் பெருந்தொண்டாற்றிய மறைமலையடிகளோடு, புது உரைநடைத் தமிழையே படைத்தவரான திரு. வி. க. வோடு, கறையானும், காலமும், அழித்த ஏடுகளைத் துருவித்தேடிக் காலமெல்லாம் அரும்பாடுபட்டுத் தமிழிலக்கியங்களைத் தேடித் தந்த தமிழ்த்

தாத்தா உ. வே. சாமிநாத அய்யர் அவர்களோடு, இணையாக வைத்துத் தமிழ் நூல் படைப்புத் துறையில் அருந்தொண்டாற்றிய உங்களைத் தமிழகம் போற்றும்; வணங்கும். உங்கள் தொண்டு இன்னும் தொடர்வதாகுக. அது இன்றைய நாள் வரை கண்ட சாதனைகளையும் வெல்வதாகுக; பாரதியார் அவர்கள், தமிழ்த்தாத்தா சாமிநாத ஐயர் அவர்களைப்பற்றிப் பாடிய பாட்டு ஒன்று இன்றைய விழா நாயகருக்கும் முற்றும் பொருந்தும் என்ற காரணத்தால், அப்பாடலில் சிறு மாற்றத்தோடு பாரதி பாடல் வாயிலாகவே, விழா நாயகர் திரு. பிள்ளையவர்களை

*"நிதியறியோம்; இவ்வுலகத்தொருகோடி இன்பவகை நிதமும் துய்க்கும்*
*கதியறியோம் என்று மனம் வருந்தற்க;* **நற்பதிப்புக் கழக வேந்தே!**
*பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும் காலமெலாம் புலவோர்வாயில்*
*துதியறிவாய்! அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்; இறப்பின்றித் துலங்குவாயே".*

என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

**திருவாட்டி சௌந்தரா கைலாசம் அவர்கள் கவிதையாகச் சாற்றிய புகழுரை :**

### "பலநலமும் பெற்றிங்கு பல்லாண்டு வாழ்க!"

தகுதி மிகவுடைய தலைவர்க்கும்—அன்பு
மிகுதியினால் கூடியுள்ள மெய்யன்பர் உங்கட்கும்
வணக்கம் தெரிவித்து மகிழுகிறேன்; புகழே
மணக்கும் பவளவிழா மன்றில்—எனக்குமொரு
வாய்ப்பை மனமுவந்து வழங்கியதற் கென்நன்றி!
வியன்தமிழர் நாடுஇதுபோல் விழாக்கோலம் பூணுவதால்
நெஞ்சில் பெருமகிழ்ச்சி நிரம்பி வழிகிறது!
பாராட்டும் நன்றியும்தான் பண்பிற்கு உரமாகும்!
மதித்துப் புகழ்வதுதான் வளர்ச்சிக்கு வழியாகும்!
வள்ளலுக்குப் பொன்கண்டு வாரமிரண் டாகவில்லை!
பொன்பூத்துச் சிலநாளில் புதுப்பவளம் காய்க்கிறது!
காய்த்த புதுப்பவளம் கனியட்டும்; நூருண்டு
போய்த்தொட்டுப் பிள்ளையிவர் பொலியட்டும் மேன்மேலும்!
எதற்காகப் பவளவிழா? இவர்செய்த தொண்டுகளை
உலகறியப் பரப்புவதா உண்மையிலே நம்நோக்கம்?
யாரறியார் பிள்ளையிவர் ஆற்றிய நற்றொண்டுகளை
பாரறிய நாமொன்று பரப்பிடமுற் படுவதற்கு?

யாரறியார் பிள்ளையிவர் ஆற்றிய நற்றொண்டுகளை ?
கதிரொளியை விளக்கேற்றிக் காட்டுவதோ உலகிற்கு ?
பொன்னுக்கு வெள்ளிமுலாம் பூசுவதா ? என்னஇது
பூக்கடைக்கு விளம்பரமா ? பொருந்தாது. தேவையில்லை !
பிள்ளைக்கு வாய்த்த பெருமையினை உலகறிந்து
கொள்ளட்டும் என்பதற்குஇக் கூட்டம் திரளவில்லை !
(பின்எதற்காக இந்தவிழா ?)
தொய்யாது நீர்செய்த தொண்டால் பயனுற்றோம்
ஐயா !சுப் பையா!வென் றன்புருகி நன்றிசொல்ல ;
புலமைக்கும் தமிழுக்கும் பொழுதெல்லாம் தொண்டாற்றும்
நிலைமை அதுவாழி ! நீடூழி ! என்றுசொல்ல
வாய்ப்பைப் பவளவிழா வழங்குவதால் வரவேற்போம் !
மனிதவிழா எனினுமிது மாசில்லாத் தமிழ்மொழிக்குப்
புனிதவிழா, கழகவிழா, புகழ்மிக்க பவளவிழா !
உரிமைமிகும் பிள்ளையையும் உயர்வான கழகத்துப்
பெருமையையும் யாராலும் பிரித்துணர முடியாது !
இவரின்றிக் கழகம் இலையென்று சொன்னாலும்
தவறன்று ; அதுமிகவும் தகுமென்றே கருதுகிறேன்.
பெற்றுவிடல் பெரிதன்று !
பேணி வளர்ப்பதுதான் பெரிதென்று தெரியாதா ?
வேளைக் கொருகழகம் விதவிதமாய் நிறுவிடலாம் !
நாளைக்கது தொடர்ந்து நடந்திடுமா ? சந்தேகம் !
தோன்றியது இடைநடுவே துவளாமல் ஆழத்தில்
ஊன்றியவேர் கொண்டதுவாய் உயர்த்துவது மிகஅருமை !
அருமையினை எளிமையென ஆக்கியநம் சுப்பையா
பெருமையினை யார்மனம்தான் பேசத் துடிக்காது ?
பண்டைத் தமிழ்வளர்க்க வாய்த்த ஒருகழகம் !
உண்ண அமுதூட்டும் ஒருகழகம் இவர்கழகம் !
செந்தமிழ்மா மருந்ததனைச் செலுத்துவதால் மானுடத்தின்
நோவகற்றிக் காப்பாற்றும் நூற்பதிப்புக் கழகமது !
கூனுமொரு நெஞ்சத்தின் கோணல் நிமிர்த்தியதை
வானுறவே ஓங்குவிக்க வந்ததிருக் கழகமது !
(யார்) கெட்டழிந்தால் என்ன ? என்று கீழ்த்தனத்தை
பெட்டி நிரப்புவது பிள்ளைக்குப் பிடிக்காது ! [அச்சடித்து
தரமான நூல்களைத்தான் தரும்சித் தாந்தத்திற்கு
உரமான இவர்கழகம் ! ஒருநாளும் பிறழாது !
ஒன்றிரண்டு பத்தா ? ஒருநூறு ! ஆயிரமும்
சென்றதனின் மேலேறிச் செல்கிறது நூல்கள்தொகை !
அத்தனையும் தித்திக்கும் அமுதக் கலசங்கள் !
பவளஎழில் மாளிகையில் பளபளக்கும் வயிரங்கள் !

**கண்டால் விலகிவரக் கண்மறுக்கும் கோலங்கள் !**
**எழுந்தவர்க்கும் கிடந்தவர்க்கும் இடையிலிட்ட பாலங்கள் !**
**(எழுத்தாளர்கள்—படிப்பவர்கள்)**
**கரைசேர்க்க எப்பொழுதும் காத்துநிற்கும் ஓடங்கள் !**
ஒன்று இரண்டா ? ஒருநூறு ? ஆயிரமும்
சென்றுஅதன் மேலேறிச் செல்கிறது நூல்கள்தொகை !
எல்லாம் இவரருளால் என்றால் அதுமிகையா ?
பிள்ளையிவர் நறுந்தொண்டால் பெருகிவரும் நூல்கள்தொகை !
நூல்கள் தொகைதானு ? நுண்ணறிவுப் புலவர்தொகை
அதுவும் வளரும்; நம் அறிவும் மிகவளரும் !
எனவே,
சுயநலத்தால் வாழ்த்துகிறேன் சுப்பையா பிள்ளையிவர்
பலநலமும் பெற்றிங்கு பல்லாண்டு வாழ்கவென !
ஓயக்கருதா துழைப் பவனே! தமிழ் ஒன்றினுள்ளே
தோயக் கிடந்து சுவைப்பவ னே! பிற சொல்லதனுள்
பாயக் கண்டுள்ளம் பதைப்பவ னே! பற் பலரின்நெஞ்ச
நேயத் திருந்து நிலைப்பவ னே! வாழி நீணிலத்தே !
தன்பெயர் கொண்டான் தளர்வின்றி இன்பத்தமிழ்வளத்தான்
பொன்பெயர் கேட்டுப் பொருந்தாத செய்யப் புறப்படாதான்
மன்னுயிர் தாம்தொழ வாழ்பவன் இன்னும் வளர்கவென
உன்பெயர் கொண்டான் உதவுவன் மேலும் உதவுவனே !

**தவத்திரு. கவியோகி சுத்தானந்த பாரதியார் வாழ்த்துரை :**

பவளக் கொடிகளை நான் பார்த்திருக்கின்றேன். பவளக் கொடி படர ஆரம்பித்தால் படர்ந்துகொண்டே செல்லும்; காய்த்துக் கொண்டே செல்லும். அதுபோல் இந்தச் சைவ சித்தாந்தக் கழகமும் நூற்கொடிகளைச் சேர்த்து வளர்ந்து கொண்டே இருக்கின்றது. பவளம் வெண்மையும் செம்மையும் சேர்ந்தது. வெண்மை கலைமகளின் நிறம். செம்மை மகாலட்சுமி —திருமகள். அதனுல் சைவசித்தாந்தக் கழகத்திற்குக் கலைமகள் அருளும் திருமகள் அருளும் சேர்ந்து கல்வியையும் செல்வத்தையும் வளர்க்கின்றது என்ற கருத்தினுல் 'பவளவிழா' என்ற பெயர் வந்திருக்கிறது. ஆகையினுல் இந்தப் பவள விழாவினை நான் உளமார வாழ்த்துகின்றேன்.

இவர் மேல் நாட்டில் பிறந்திருந்தால் இவருடைய நிலையே வேருக இருந்திருக்கும். அவர் பல அறிஞர்களைத் தூண்டித் தூண்டி அவர்களை எல்லாம் நூலாசிரியர்களாக ஆக்கியிருக்கின்றுர். பெரியபுராண ஆராய்ச்சி ஆங்கில நூலுக்காக அவர்

எடுத்துக்கொண்ட முயற்சி கொஞ்சநஞ்சமன்று. அவர்கள் பேழை ஒன்று செய்திருக்கின்றார்கள். அந்தப் பேழையில் சங்க நூல்களெல்லாம் வைத்திருக்கின்றார்கள். ஆளுக்கொரு பேழை வாங்கிக் கொண்டால் அவருடைய நூல்களெல்லாம் விற்றுப் போகும். அதன் பிறகு இடம் காலியாகும். புது நூல்களை அவர்கள் வெளியிட ஆரம்பிப்பார்கள்.

**பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துணைப் பேராசிரியர் திரு. க. ப. அறவாணன் அவர்கள் புகழுரை :**

'செந்தமிழ்ச் செல்வி' என்ற இதழ் 1923-ல் தொடங்கி ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளைக் கடந்திருக்கிறது. இந்த ஐம்பது ஆண்டுகளில் அந்த இதழினுடைய ஆழ்ந்த கருத்துக் களையும் அதனுடைய போக்கையும் முற்ற விவரிக்க எனக்கு நேரம் இல்லை. செல்விமீது எனக்குக் காதல் வந்ததற்குக் காரணம் செல்வியில் வந்திருந்த ஓர் அழகான கட்டுரை. அந்தக் கட்டுரையின் தலைப்பைச் சொன்னால் சிரிப்பீர்கள்! 'காதல் சிறப்பு' என்று அக்கட்டுரையின் பெயர்.

> "செல்லாமை உண்டேல் எனக்கு உரை மற்றுநின்
> வல்வரவு வாழ்வார்க்கு உரை"

என்ற அழகான திருக்குறளைப் பற்றி 1927ஆம் ஆண்டு சூன் திங்களில் இந்தத் திருக்குறளை மையமாக வைத்துக் கருத்தும் பதப்பொருளும் எழுதிய ஒரு கட்டுரை. அந்தக் கட்டுரையை நான் படித்தபொழுது அந்தக் கட்டுரையை எழுதியவர் யார் என்று பின்னே பார்த்தேன். ஏன் என்றால் அந்தக் கட்டுரைக்கு முன்னும் பின்னும் பெயர் இல்லை. ஆனால் கட்டுரைக்குள் இருக்கின்ற பொதிபொருள் இருக்கின்றதே அந்தப் பொதிபொருள் என்னைக் கவர்ந்தது. "காதல் சிறப்பு" என்ற தலைப்பு மட்டுமன்று ; தலைப்புக்கு உள்ளே அடங்கியிருக் கின்ற விளக்கத்தைப் பார்த்து யார் என்று பார்த்தேன். இன்று எழுபத்தைந்து ஆண்டுகள் நிரம்பிப் பவள விழாக் கொண்டாடுகின்ற பெருமதிப்பிற்குரிய வ. சுப்பையா பிள்ளை அவர்கள் தம்முடைய இருபத்தொன்பதாவது ஆண்டிலே எழுதிய ஓர் அழகான கட்டுரை இது.

செந்தமிழ்ச் செல்வியின் தொடக்க ஆசிரியராகவிருந்த மணி திருநாவுக்கரசு முதலியாரவர்கள் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகட்கு முன்பு பத்துக் கோட்பாடுகளை அந்த இதழுக்காக வழங்கி யிருக்கிறார்கள். அந்தப் பத்துக் கோட்பாடுகளி னுடைய வரி, இந்தச் செந்தமிழ்ச் செல்வியின் இலக்கு—

இந்தச் செந்தமிழ்ச் செல்வியினுடைய குறிக்கோள் இரண்டா யிருக்கும்; ஒரு கண்ணகச் சைவமும் மற்றொரு கண்ணகத் தமிழும் இருக்கும் என்று கூறி, அதற்கடுத்தாற்போல் தம்முடைய இலட்சிய வரிசைகளை எடுத்துக் காட்டுகிறார்கள். ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகும் தமிழ் நாட்டில் ஓர் இதழ், அன்று ஐம்பது ஆண்டுகட்கு முன்பு எடுத்துக்கொண்ட இலட்சியத்தினின்று சற்றும் பிறழாமல் இருந்திருக்கின்றது என்று சொன்னால் அது செந்தமிழ்ச் செல்வியைத் தவிர வேறு எந்த இதழாகவும் இருந்திருக்க முடியாது.

கால வெள்ளத்திற்கெல்லாம் ஆட்படாமல், இந்தக் கால வெள்ளத்திற்கெல்லாம் அகப்படாமல், மக்களின தனித்த போக்கிற்கெல்லாம் அகப்படாமல், மக்களின் ரசனை எண்ணத் திற்கெல்லாம் அகப்படாமல், எந்தவிதக் கவர்ச்சியும் இல்லாமல், கருத்துக் கவர்ச்சி மட்டுமே வைத்து இதழ்கள் நடத்த முடியும் என்பதற்கு இந்த இதழ் சான்றாக நிற்கின்றது. ஐநூற்று ஐம்பத்திரண்டு இதழ்கள் நடத்தி யிருக்கின்றார்கள் என்று சொன்னால், அந்த இதழ்களில் இடம் பெற்றிருக்கின்ற கட்டுரைகள் எத்தனை தெரியுமா? ஏறத்தாழ நாலாயிரத்து ஐநூறு கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன. அந்தக் கட்டுரைகள் எல்லாம் மிகக் கோரப் போக்கிலே, நினைக்கின்ற போக்கிலே, எண்ணங்களை எடுத்துச் சொல்லாக வடிக்கின்ற கட்டுரைகள் அல்ல. எல்லாம் ஆராய்ச்சி உண்மைகள். இந்தக் கட்டுரைகளின் வழியாக வந்து அறிவுபடுத்திய ஆசிரியர்கள் கிட்டத்தட்ட ஆயிரத்து ஐநூறு பேர்கள். எத்தனையோ ஆசிரி யர்கள் இந்த இதழ் இல்லையென்று சொன்னால் நூலாசிரியர்க ளாக வந்திருக்கமாட்டார்கள் என்று திட்டமாக நான் சொல்லு வேன். பெரும் பேராசிரியர்களை—பெரும் பேராளர்களை—பெரிய நிபுணர்களின் திருவுருவத்தைப் பார்க்க வேண்டும் என்று சொன்னால், செந்தமிழ்ச் செல்வியினுடைய இதழ்களை நீங்கள் புரட்டினால் போதும். ஏறத்தாழ எழுநூற்று ஐம்பது நிழற் படங்களிலே இடம் பெற்றிருக்கின்றனர். அந்தந்தக் காலத்தினுடைய எதிரொலியை அந்தப் படங் களிலே பார்க்கலாம். இதற்கும் அப்பாலே சொல்லப்போனால் அந்த இதழினுடைய—அடக்கப் பொருள் இதழ் வழியாக அறிவுறுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான செய்திகள் இருக் கின்றன. அவற்றிலிருந்து ஒரு சில செய்திகளை மட்டும் இங்கு நான் குறிப்பிடுகிறேன்.

"தென்புலத்தார்" என்பதுபற்றிப் பலவேறு வாதங்கள் நடந்ததுண்டு. இந்த வாதங்களின் மூலம் யார்? என்பது

பற்றி நான்கூடத் தெரியாமல்நான் இருந்தேன். புலவர் குழந்தைதான் இந்தத் தென்புலத்தார் யார் ? என்பதைத் தெளிவுபடுத்தினர் தம்முடைய "புலவர் குழந்தை" உரையிலே என்று நான் கருதிக் கொண்டிருந்ததுண்டு, செந்தமிழ்ச் செல்வியை ஆராய்வதற்கு முன்னலே. ஆனல், தென்புலத்தார் யார் என்பதைத் திருவள்ளுவத்திலே "தென்புலத்தார்" என்று வருகின்ற தொடர் யாரைக் குறிக்கிறது என்பதை 1941ஆம் ஆண்டிலே மறைமலையடிகள் செந்தமிழ்ச் செல்வியிலே ஓர் அழகான கட்டுரையில் எழுதியிருக்கிருர்கள், "தென்புலத்தார்" யார் என்ற வினவை எழுப்பி, அந்த வினவிற்கு விடையிறுக்கும்பொழுது அந்த ஆராய்ச்சியின் முடிவு, "தென் புலத்தார் என்பது பிதிரர்கள் அல்லர்" என்பதற்கு இலக்கியச் சான்றுகளையும், அவைமட்டுமில்லாமல் தம்முடைய சமக்கிருதப் புலமையை வைத்துக் கொண்டு, "இது பிதிரர்களைக் குறிக்கவே முடியாது" என்பதைச் சான்றுகளோடு மனுஸ்மிருதியைக் காட்டி, வேதத்தைக் காட்டி நிறுவி யிருக்கிருர்கள்.

இந்தி எதிர்ப்பைப் பொறுத்த அளவிற்குத் தமிழ்நாட்டில் முப்பத்தாறு ஆண்டுகளாக ஓர் இதழ் விட்டு ஓர் இதழ்—அல்லது எல்லா இதழ்களிலும் இந்தி எதிர்ப்புச் செய்திகள் வெளியிட்டது செந்தமிழ்ச் செல்வியே. எப்பொழுது தமிழனுடைய மொழி நிலை பாதிக்கப்படுகிறதோ அவ்வாறு பாதிக்கின்ற கட்டத்திலெல்லாம் கூறுகின்ற நிகழ்ச்சிகளைச் "செய்திகளும் குறிப்புகளும்" என்ற தலைப்பிலே பார்க்கலாம். அம்மட்டுமில்லை—தமிழ் இசை இயக்கம். அந்த இயக்கம் வந்தபொழுது எவ்வளவு எதிர்ப்புகள் வந்தன ? அந்த எதிர்ப்புக்கான எதிர்ப்புக் கட்டுரைகளை அங்கே பார்க்கலாம். அது மட்டுமில்லை; தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று வருவதற்காகப் பெருமுயற்சி செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே 1923, 1924-லே என்று நினைவு. அந்த ஆண்டுகளில் தமிழ் நாட்டிலே ஒரு புதிய பல்கலைக்கழகம் வரக்கூடாதென்று தமிழ் நாட்டிலேயே ஓர் இனம் தடுத்துக் கொண்டிருந்திருக்கின்றது. அந்த இனத்துக்கு எதிர்ப்புக்கு எதிர்ப்பாக வைத்து எதிர் அறைகூவலாக விடுகின்ற கட்டுரைகள் எல்லாம் செந்தமிழ்ச் செல்வியில் பார்க்கும்பொழுது பெருமகிழ்ச்சியும் பீடும் கொண்டேன். அது மட்டுமா ? தமிழில் அர்ச்சனை வேண்டும். கோயில்களிலே பழைய தமிழர்கள் பாராட்டிய அதே மொழியிலேயே பாட வேண்டும், வழிபட வேண்டும், வழுத்த வேண்டும் என்ற வேண்டுகோள் எத்தனை முறை ? அதனலே தமிழ் இசை இயக்கமாக இருந்தாலும் சரி, தமிழ் அர்ச்சனையாக இருந்-

தாலும் சரி, தமிழர்க்கு எது வந்தாலும் சரி; தனித் தமிழை—தமிழ் நாகரிகத்தை—தமிழ்ப் பண்பாட்டைப் பேசிய தலையாய இதழ் 'செந்தமிழ்ச் செல்வி'. அந்த இதழில் இவ்வளவு காலக்கடல் தாண்டி—இவ்வளவு அல்லலும் துன்பமும் தாண்டி—தமிழ் நாட்டிலுள்ள பொருமைப் பூச்சுக்கு எல்லாம் அப்பாலே நின்று ஐம்பது ஆண்டுகள் கொண்டுவந்து நிறுத்தி னீர்களே அஃது ஒன்றே போதும் உங்களுடைய சாதனைகளுக் கெல்லாம் பெரும் சாதனை என்று சொல்லி விடைபெறு கின்றேன்.

**சிவமணி திரு. ச. சிவகுமார் M.A. அவர்கள் பாராட்டுரை :**

திரு. சுப்பையா பிள்ளை அவர்கள் வெளியிட்ட நூல்களைக் கணக்குப் பார்த்தேன். ஆண்டுக்கு முப்பது நூல்கள் வெளி யிட்டிருக்கின்ருர்கள் என்று—சராசரிக் கணக்கில் சொல்கிறேன். 'கையேட்டி'ல் விழாவைப் பற்றிய குறிப்புகளைக் கொடுக்க வேண்டும் என்று நினைத்த ஒரு கருத்து இருக்கிறது பாருங்கள், அதை நான் மிகவும் பாராட்டுகின்றேன். நேற்று இந்தப் பவள விழாவிலே கனகாம்பரத்தில் பவள நிறத்திலே 'பவள விழா' என்று எழுதி வைத்திருந்தது. இந்தப் பவள விழா என்ற சொல்லிலே "பவள விழா" என்ற சொல் சரியான முறையில் யாருக்கு வாயில் நுழைகின்றதோ அவன்தான் உண்மையான தமிழன் என்று உங்களுக்கு நான் சொல்லித் தெரிய வேண்டியது இல்லை. இந்த விழாவிலே எல்லோருக்கும் ஒரு சந்தனமாலை போட்டார்கள். அது நல்ல மணமாக இருந்தது. கார் வசதி இல்லாதவர்கள் அம் மாலையைச் சுமந்து செல்வது கொஞ்சம் சிரமமாக இருக்கும். அதற்கு இவர்கள் அம் மாலையைப் போட்டு எடுத்துச் செல்வதற்குப் பை ஒன்று கொடுக்கின்ருர்கள். அஃது ஒரு நல்ல கருத்து. அந்தப் பையும் பவள நிறமாக இருக்க வேண்டும் என்று எண்ணியிருக் கின்ருர்கள். இப்படிச் சிறு சிறு செய்திகளில்கூட மிக நுட்ப மாகக் கவனித்திருக்கின்றனர். தமிழனுக்கு நுட்பமான செய்திகளில் கருத்துச் செலுத்தும் அறிவும் இருக்கின்றது என்பதை நாம் இதனல் உணர்கின்ருேம். ஏனென்ருல் தமிழ னுக்கு இரண்டு இல்லை என்பார்கள். ஒன்று நன்றியுணர்வு, மற்ருென்று நேரப்படி செயலாற்ருமை. எட்டு மணிக்கு விழாத் தொடக்கம் என்ருல் பத்து மணிக்குத்தான் வருவார்கள். அப்படி எல்லாம் இல்லாமல் ஓர் ஒழுங்குக் கட்டுப்பாட்டோடு நடத்துகிற அமைதி, அதுமட்டுமல்லாமல் எப்போதும் அமைதி யாகவே இருப்பார். மக்களிடத்துப் பழகும்போது மக்க

ளிடத்துக் குறைகள் கண்டால்கூட அக் குறையை நிறைவு படுத்திக் கொண்டு அவருடைய பணியில் ஆர்வம் குன்ருமல் இருப்பாரே தவிரச் சோர்வு என்பதே அவரிடம் கிடையாது. இந்தப் பாராட்டில் மொத்தம் நூறு மதிப்பெண்கள் என்று கணக்கு வைத்துக் கொண்டால் இவருக்கு மதிப்பெண் ஒன்று தான். இவருடைய இல்லத்தரசிக்குத்தான் மற்றத் தொண்ணூற்ருென்பது மதிப்பெண்களும். ஏனென்ருல் அந்த அம்மையார், வீட்டுத் தொல்லைகளை இவர்க்குக் கொடுக்காமல் இருந்தபடியால்தான் இவர் இத்தனை பணிகளையும் சிறப்பாகச் செய்ய முடிந்திருக்கின்றது. இந்த ஒரு சிறப்பான துணையை ஆண்டவன் அவருக்கு அளித்திருக்கின்ருர். இந்த ஒரு பாராட்டே அவருக்குப் போதும். அப்புறம் சைவசித்தாந்த சாத்திரத்தை அஞ்சல்வழி கற்றுக் கொடுப்பது என்ற ஒரு முறையைத் தொடங்கினுர். அவருடைய இரண்டு கண்களிலே ஒன்று திருக்குறள், மற்ருென்று பெரியபுராணம். கழகத்தின் பொன் விழாவிலே பெரியபுராணத்தை மையமாக வைத்துச் சிறப்பித்ததை நீங்கள் மறந்திருக்க முடியாது. இவருடைய அருமை பெருமைகளைப் பலர் எடுத்துச் சொன்னுர்கள். இவருடைய பெருமையைப் பேசுவதற்கு இங்கே நேரம் போதாது. திருமூலர் திருமந்திரத்தில் பாடிய பாடல் இவர்க்கு நாடிஜோசியத்தில் அமைந்திருக்குமென நினைக்கின்றேன். முன்பு நல்ல தவம் செய்யாத ஒருவன் தவம் செய்யாத நிலையில் கூட நல்ல பிறவி பெற வேண்டும் என்று ஆசைப்படுகின்ருன்.

> "முன்னை நன்ருக முயல்தவம் செய்கிலர்
> பின்னை நின்று என்னே பிறவி பெறுவது
> என்னை நன்ருக இறைவன் படைத்தனன்
> தன்னை நன்ருகத் தமிழ்செய்யு மாறே"

இறைவன் நன்ருகத் தமிழ் செய்யுமாறு இவரைப் படைத்தனன் என்று அந்தத் திருமந்திரம் கூறுகிறது என்று சொல்லி, அந்தத் தம்பதிகள் இருவரும் நீடூழி வாழ்ந்து நூற்ருண்டு விழாவும் காண வேண்டும் என்று வேண்டி உங்களிடத்திலே விடை பெறுகிறேன்.

**கழக நூலாசிரியர் புலவர் திரு இரா. இளங்குமரன் அவர்கள் :**

இந்தப் பவள விழா—எழுபத்தைந்து ஆண்டு நிறைவு விழா—பவள விழாவாக இருக்குமாலுல் இனிமேல் வெள்ளி விழா நூறிலே வரும். நூற்று இருபத்தைந்திலே பொன் விழா வரும்; வைரவிழா வரும். ஆனல் அந்த விழாக்கள் எங்கே

நிகழ வேண்டும் என்று யான் கருதிக் கொண்டிருக்கிறேன் என்றால் பிற நாட்டவர்கள் வந்து எடுக்கக்கூடிய நிலையிலே ஐயா அவர்களைப் பிற நாட்டுக்கு அழைத்து எடுக்கக்கூடிய நிலையிலே நடைபெற வேண்டுமெனக் கருதிக் கொண்டிருக்கிறேன். காந்திமதியின் அருளால், அந்த நெல்லையின் நெல்லையப்பர் அருளால் அந்தக் காந்திமதி அருள்வாளாக என்று வேண்டிக் கொள்கிறேன்.

கோலார் தங்க வயலைக் கருவி கொண்டு ஆராய்ந்து தங்கத்தை வெளிக்கொணர்ந்ததுபோல சட்டத்துறை, ஆட்சித் துறை இன்னபிற துறைகளிலே இருந்தவர்களை யெல்லாம் தேடிக் கொணர்ந்து அவர்களைத் தமிழுக்குக் காவலர்களாக ஆக்கியுள்ள பெருமை ஐயா அவர்களுக்கு உண்டு. இவர்கள் செய்கின்ற நல்ல காரியங்களில் எங்களுக்குப் பங்கு தருகிறார்கள். அவர்கள் பல அறப்பணிகளை உருவாக்கி, பல நல்லவர்கட்கு வழிகாட்டி, அவர்கள் செய்திருக்கும் பணியின் ஒரே நோக்கம் தமிழ் வாழ வேண்டும்—தமிழ் இனம் வாழ வேண்டும்—தமிழ்ச் சமயம் வாழ வேண்டும் என்பதுதான். இந்த விழா அவர்களிட மிருந்து நாம் எடுத்துக் கொள்ள வேண்டுவது என்னவென் பதைக் காட்டுவதற்காக எடுக்கப்பெறும் விழா.

நான் அவர்களை வாழ்த்துவதற்கு உரியவன் அல்லேனா யினும் அவர்களுக்கு வழிபாடு செய்தற்குரியவன் என்று கூறி, அவர்களுடைய வாழ்வும் அவர்களுடைய வளமும் எங்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் பல்லாண்டு பல்லாண்டு தரும். ஆகவே, அவர்கள் நெடிது வாழ வேண்டும். எனது வாழ்நாளை இந்தத் தமிழ் நிலம் வாழ்வதற்காக அவர்களிடம் ஒப்படைக்க முடியும் என்று கூறி, 'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய' என்று அந்த மன்னன் கூறியது போல், யான் வாழும் நாளும் இவர் வாழ்வாராக என்று வாழ்த்தி விடைபெற்றுக் கொள்கிறேன்.

**தாமரைச் செல்வர்—பவளவிழா நாயகர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்களின் நன்றியுரை :**

எனக்கு விழா எடுப்பதை எப்போதும் நான் விரும்புவ தில்லை. உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ, முயற்சி திருவினையாக்கும்—இந்த முதுமொழித் தொடர்கள் இருக்கின் றனவே இவை என்றும் என்மனத்தில் இருந்து என்னைப் பணி செய்யத் தூண்டிக் கொண்டேயிருக்கும். 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் திருவாக்கும் எப்பொழுதும் என்னுள் ளத்தில் இருந்துகொண்டே யிருக்கும். ஓய்வு ஒழிச்சல்

என்பவை எனக்குப் பிடிக்காதவை. பணிமனைகளில் இரண்டு நாள்கள் சேர்ந்தாற்போல் விடுமுறைகள் விடப்படுவது கண்டால் நான் வருந்துவதுண்டு. விடுமுறை நாள்களிலும் நான் கழகப் பணியே செய்து கொண்டிருப்பேன். வேறு வழியில் செலவழிப்பதில்லை. இஃது எனக்கு இயல்பு.

என்னை இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டவர் என் தமையனார் அவர்களே. அவர்கள் பழைய இதழ்களைத் தொகுத்துக்கொண்டே யிருப்பார்கள். கடிதங்களையும் படங்களையும் தொகுத்துக் கொண்டேயிருப்பார்கள் பழைய நூல்களைத் தேடித் தொகுத்துக்கொண்டே யிருப்பார்கள். அப்படியெல்லாம் அவர்கள் எனக்கு வழிகாட்டியதைப் பின்பற்றித்தான் நான் அப்படியே செய்து வருகிறேன். மறைமலையடிகள் தொடர்பினாலே இந்தத் தனித்தமிழ்த் தொண்டு செய்யும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

ஆதலால் எனக்குக் கிடைக்கப்பெறும் புகழுக்கும் பெருமைக்குமுரியவர்கள் என் அருமைத் தமையனார் திருவரங்கனாரவர்களும், தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளாருமாவர்.

மறைத்திரு மறைமலையடிகள் என்மீது நம்பிக்கை வைத்துத் தாம் எழுதிய நூல்களையெல்லாம் கழகவழி வெளியிடுவதற்கும், தாம் ஆய்ந்த நூல்களையெல்லாம் கழகவழி 'மறைமலையடிகள் நூல் நிலையம்' நிறுவி நடத்துவதற்கும் தமது இறுதி முறியில் எழுதியமைக்கு என்னோடு தமிழ் மக்களும், உலகில் தமிழ் கற்க விரும்பும் அறிஞர்களும் அடிகளார்க்கு நன்றி செலுத்துங் கடப்பாடுடையவர்களாவர்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் தம்முடைய தமிழ் வாழ்த்தில் தமிழ்மொழி—தமிழ்இனம்—தமிழ்நாடு என்ற குறிப்புகளை அமைத்திருக்கிறார்கள். மறைமலையடிகள் துவக்க காலத்தில் வடமொழி கலந்த நடையிலேதான் எழுதிவந்தார்கள். அதுவும் சிறந்த முறையில் அமைந்திருந்தமையால் அந்த நடையினைத்தான் என் தமையனார் அவர்கள் பின்பற்றி அதில் ஈடுபட்டார்கள். 1920ஆம் ஆண்டிலேதான் மறைமலையடிகள் தனித்தமிழின் சிறப்பை உணர்ந்தார்கள். அதுமுதல் தம் நூல்களைத் தனித்தமிழில் பதிப்பித்தார்கள்; தனித்தமிழில் பேசினார்கள்.

இந்தியாவிலேயே கூட்டுப் பங்கு நிறுவனமாக நூற்பதிப்புக்கென முதன் முதல் அமைந்தது இந்தக் கழகமேயாகும். இதற்குப் பின்னர்த் தோன்றிய பதிப்பகங்கள் பல நடைபெறுமற் போயின.

இந்தக் கழகத்தின் செயற்குழு உறுப்பினர்கள் என்னோடு ஒத்துழைப்பது மட்டுமன்றி எனக்கு முழு உரிமையும் கொடுத்து விட்டார்கள். என் செயல்களில் அவர்கள் பெருமை கொள் கின்றூர்கள்.



காந்தீயச் செல்வர் நா. மகாலிங்கம் அவர்கள்
விழாவுக்குப் பின் கழக நிலையம் போந்து
பவளவிழாச் செல்வருக்கு மாலையணிவித்து மகிழ்வுற்றூர்.

இந்த விழாவில் நீங்கள் என்னைப் பாராட்டியது இந்தத் தொண்டிற்காக என்னை மேலும் வாழவைப்பதற்காகவே என்று நான் கருதுகிறேன். அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கி றேன். எனக்கும் மேலும் மேலும் தொண்டு செய்வதிலேதான் விருப்பம். அதற்கு ஆண்டவன் அருள் செய்ய வேண்டும். எனக்கு எத்தனையோ எண்ணங்கள் இருக்கின்றன. அதற்குச் செல்வர்களோ—அரசுகளோ — சைவ மடங்களோ — உதவி செய்யவேண்டும். உதவி இல்லையென்றூல் எந்தப் பணியும் சிறப் பாகச் செய்ய இயலாது என்றுகூறி இங்கு வந்திருந்து இந்த விழாவினைச் சிறப்பித்து என்னை வாழ்த்தியருளிய உங்கள் அனை வருக்கும் எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

---

# வாழ்த்துப் பாக்கள்

சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழக ஆட்சிக் குழுவினர் சார்பில் வழங்கப்பெற்ற

## வாழ்த்துப் பா

பொன்னும் மணியும் கொழிக்கின்ற
பொருநை நாட்டு நெல்லையிலே
மின்னும் காந்தி மதியம்மை
மேவும் நெல்லை யப்பரருள்
துன்னும் வேளாண் திருக்குடியில்
துலங்கும் வயிர முத்தவர்கள்
மன்னும் தவத்துப் பேறுடையீர்!
மல்கும் நலத்தால் வாழ்ந்திடுவீர்!

அண்ணல் அரங்கர் பேருழைப்பால்
அமைந்த நெல்லைத் திருக்கழகம்
எண்ணஞ் சிறக்க வளர்ந்தோங்கி
ஏற்றம் மிக்குத் திகழ்வதுடன்
நண்ணும் மதுரை கோவைநகர்
நலமார் குடந்தைக் கிளையமைத்த
வண்ணம் அண்ணல் நும்மாட்சி
வண்ணங் காட்டும் சான்றன்றோ!

கூட்டுப் பங்கு நிறுவனத்தைக்
கொள்கை சிறப்ப அமைத்ததனால்
நாட்டுக் கேற்ற நல்லறங்கள்
நாட்டும் பேறும் வாய்த்துளதாம்!
ஈட்டும் பொருளில் பங்கன்றி
எய்தும் அறத்தும் பங்களித்தீர்!
பாட்டுப் பொருளே! பைந்தமிழே!
பண்ணோ டிசையாய் வாழ்ந்திடுவீர்!

உழைப்பின் உருவப் பெருந்தகையீர்!
உண்மை உணர்ந்தே உமக்கேற்ப
உழைப்ப தெந்தம் கடமையென
உணர்ந்தே பணிகள் யாம்செய்தல்

தழைக்க அறிவீர், தகவுடையீர்!
தாழா தெந்தப் பணிக்கேனும்
அழைக்க வருவேம்; அரவணைப்பேம்;
அரிய பணிகள் செய்திடுவீர்!

வள்ளற் பெருமான் அருள்தொண்டே
வாழ்வுத் தொண்டாய்ச் செய்திடுவீர்
வள்ளற் பெருமான் திருப்பெயரால்
வளமார் மன்றம் கண்டுள்ளீர்!
உள்ளும் போழ்தில் உயர்வளித்தே
ஊற்றம் பிறக்கச் செய்கின்ற
பிள்ளை யாரின் திருவருளால்
பிள்ளைப் பெரியீர், உயர்ந்திடுவீர்!

## எப்பொழுதும் வாழ்க!

**கி. வா. ஜகந்நாதன்**

கவளக் கரிபோற் கழகம் வளர்த்துப்
பவளவிழாக் காணுகின்ற பண்பன்—துவளவிலாச்
சுப்பையா பிள்ளை சுடர்வேல் முருகருளால்
எப்பொழுதும் வாழ்க இனிது.

## வகை வகையாய் இலக்கியத்தை வாழ வைத்தார்

**'கவிஞர் கோ' புத்தனேரி சுப்பிரமணியம், சென்னை.**

கழகமெனும் சொல்லதிலே தமிழ்உ ணர்ச்சிக்
கனல்கனிய நூற்பதிப்புக் கழகக் காவில்
அழகுதமிழ் மணம்பரப்பும் அறிவு நூல்கள்
ஆயிரத்தி ஐநூறு மலர வைத்தார்;
பழகுவதால் தூண்டுவதால் அறிஞர் பல்லோர்
பயன்குவிக்கும் நூல்எழுதப் பணித்து வென்றார்,
எழுபதுடன் ஐந்தாண்டுப் பவள நன்னாள்
ஏற்கின்ற சுப்பையா பிள்ளை வாழ்க.

வண்ணவண்ணப் பதிப்புகளில் இலக்கி யத்தை
வகைவகையாய்ச் சுப்பையா வாழ வைத்தார்
எண்ணஎண்ண இனிக்கின்ற திருவி ழாக்கள்
எத்தனையோ மாநாடு நடத்து கின்றார்;

மண்ணுலகில் தனிமனிதர் உழைப்பின் வெற்றி
மாண்புக்கோர் சான்றாக வாழும் அண்ணல்
கண்ணிமைபோல் சங்கமொழிக் காவல் வீரர்
கலைவளரப் பல்லாண்டுக் காலம் வாழ்க !

## பவள விழாக் கண்டவரே! பன்னாள் வாழ்க! வாழ்க!!

திரு. நெல்லை. ந. சொக்கலிங்கம், எம்.ஏ.

புவிபுகழப் பைந்தமிழின் நூல்கள் தம்மைப்
பதிப்பித்த பெருமையிலே திளைத்து நிற்கும்
பவளவிழாச் செல்வரேறே! பாரில் நல்ல
பாங்குடைய தொண்டாகும் நூற்ப திப்பை
நவையறவே நாளும்செய் ததனால் நீவிர்
நற்றமிழ்க்குப் புத்துயிர்தான் ஈந்துசி றந்தீர்!
தவழ்கின்ற ஏடெல்லாம் கழகம் தந்த
தகுதிமிக்க பதிப்பென்றே பேச வைத்தீர்.

நாடெல்லாம் போற்றுமாறு துறைகள் தோறும்
நற்றமிழின் புலவர்களைத் தூண்டி விட்டே
ஏடெல்லாம் எழுதுதற்கே முனைந்து நின்றீர்!
ஏற்றமெலாம் எழிற்றமிழ்க்கே இனிதாய்ச் செய்தீர்!
வீடெல்லாம் புகழ்மணக்கும் விருந்தாம் தங்கள்
விந்தைமிகு எண்ணங்கள்! பணிபா ராட்டி
நாடெங்கும் விழவெடுக்கும் நாளும்! தாங்கள்
நலன்பெற்றுப் பன்னாள்தான் வாழ்க! வாழ்க!!

## சுப்பையவேள் குறள் வாழ்த்து

கருப்பக்கிளர், சு. அ. இராமசாமிப் புலவர்

(குறள் வெண்பா)

அன்னைதமிழ்த் தாயின் அருங்கலன்கள் எஞ்ஞான்றும்
துன்னவைததான் சுப்பையவேள் சொல்.

சுப்பையவேள் தோன்றிலனேல் சொல்லுதமிழ் நூல்பலவும்
தப்புமிக வந்திருக்குந் தான்.

தண்டமிழின் தொண்டன் தமிழைவளர் சுப்பையவேள்
அண்டமதில் வாழ்க அமைந்து.

## செந்தமிழ்தேர் பண்பார் வாழ்க !

தவத்திரு. தி. செ. முருகதாச சுவாமிகள், திருவாமாத்தூர்

(வெண்பா)

முக்கால்நூற் ருண்டின் முதியர் தமிழ்வளர
எக்கா லமும்நா டிளைஞர் நலம்—மிக்கார்நம்
தாமரைச் செல்வன் தகைசால்சுப் பையஅண்ணல்
சேமமிக வாழ்கதிடம் சேர்ந்து.

பவளக்கா ரத்தெருவிற் பாங்குபெற வாழ்வார்
பவளநிகர் செந்தமிழ்தேர் பண்பார்—பவளவிழா
இன்றுபெறும் சுப்பையப்பேர் ஏந்தலின்பாய்ப் பல்லாண்டு
நன்றுமிக வாழ்க ! நயந்து.

## ஆயிரத்தெட்டூழி வாழி !

பேராசிரியர் ந. சேதுரகுநாதன், விருதுநகர்.

எப்பையா தமிழ்வளரும் எங்கையா
தமிழ்நூல்கள் என்றுகேட்டுச்
செப்பையா விடையென்றே இடக்காகச்
சிரிக்கின்ற சிறுமைமிக்க
தொப்பையா வயிற்றினிலோ ராயிரத்தெட்
டடியடித்த தூயனை
சுப்பையா வேளோரா யிரத்தெட்டு
நல்லூழி தொடர்ந்துவாழி !

## மேலும் நூறுண்டு வாழ்க !

கவிஞர் இரா. வீரன், பி.ஓ.எல்.

நெய்விழும் பொங்கல்போல்
நேர்த்தியாய்த் தமிழ் நூல்கள்
நித்தமும் நமக்களிப் போர் ;

தைவரும் பொங்கல்போல்
தமிழுக்குப் பல்விழா
தளரா(து) எடுத்து மகிழ்வோர் ;

சைவமும் தமிழுமே
தம்மிரு கண்ணெனத்
தாங்கியே காத்து வருவோர் ;

மெய்விழா என்னும் "ப
வள விழா" ஓங்கியே
மேலும் நூறாண்டு வாழ்க !

## பவள வாழ்த்து

**டாக்டர் நா. வே. வீராசாமி, எம்.ஏ., பிஎச்.டி.**

தமிழுக்கு உழைத்தவர் பலருண்டு தமிழ்வளரப்
பல்லாண்டு கவிஎழுதிப் பார்த்தவர்கள் பலருண்டு
நூலுண்டு கவியுண்டு நுண்மைதெரி வோருண்டு
ஏடெல்லாம் செல்லரிக்க எழுத்துமலை மறைந்தொழியத்
தமிழ்காக்கத் திருவரங்கம் எழுந்திடவே தமிழ்க்கடலில்
மறைமலையோர் பரிதியெனப் பூத்திடவே ஒளிகண்டோம் !

'கழகம்' கனிந்தது கலைத்தமிழ் விளைந்தது
அப்பருழ வாரம்போல் சுப்பையா அச்சகத்தில்
வித்தின்றி விளைகின்ற சங்கநூல் எத்தனை !
முத்துப்போல் முன்னேறும் இளைஞர் படைபாரீர் !
இலக்கியப் பேழைகள் எழுந்தன அலைபோல்
ஆயிரத்தை விஞ்சின அழகுப் பதிப்புக்கள்

இவைஎழ உழைத்தது எவருடைய கைவண்ணம் ?
'பவளம்' பதித்த பலமுத்து மாலைகள்
கவர்கின்ற கதிர்வீசும் தமிழ்நூல்கள் தளிர்விட்டு
உவக்கின்ற உள்ளம்போல் உயர்ந்தனவே உலகினிலே
அவ்வுள்ளம் வள்ளுவம் போன்று
செவ்வை நெறியினிலே செழித்திடுக பல்லாண்டு.

## தழைத்திடுக மேலும் !

**திரு. நா. இராசகோபாலன்**

**சிறுவை மோகனசுந்தரம்**

தாமரைச் செல்வர் ; தனித்தமிழ் நல்லவர் ;
தோமற அச்சேற்றும் செம்மலார் ; சுப்பையா
பிள்ளை பனித்தமிழின் பார்போற்றும் சீரெல்லாம்
அள்ளி நலமோங்க ஆர்ந்து.

உழைப்பின் மறுபதிப்பு ; ஊக்கத்தின் கட்டு ;
அழைத்து அறிஞரை ஆக்கம்செய் ஆர்வம் ;
மழைத்துளி போல்நூல் பெருக்கிட்ட பாங்கு ;
தழைத்திடுக மேலும் இனி.

## வைர விழாவுங் காண்க!

**பேராசிரியர் க. வ. முத்தையா, எம்.ஏ., நெல்லை.**

பார்முழுதும் போற்றிப் பவளவிழாக் கொண்டாட
ஏர்திகழும் சுப்பையா என்போர் தாம்—ஆர்வமிக
செந்தமிழும் சைவத் திருச்சமயமும் தழைக்க
எந்நா ளுந்தொண் டியற்றியே—நந்தம்
தமிழகத்தின் நல்லறிவு தாரணியெ லாம்பரவ
இமியளவும் சோர்வென்ப தின்றிச்—சுமைசுமையாய்ப்
பல்லாயிரக் கணக்கில் பைந்தமிழ்நூல் சேகரித்து
நல்லார் பலர்க்குதவி நல்கியுமே—மல்லாரும்
ஒண்டமிழ்நூ லாக்கி ஒருபிழையு மில்லாமல்
கண்டவர்கள் கண்கவரும் கட்டுடைத்தாய்ப்—பண்புடனே
செய்து தமிழ்த்தொண் டியற்றி மகிழுமிவர்
வைரவிழா வுங்காண்க மன்.

## இனிய தமிழ்ச் சுப்பையா பிள்ளை வாழி!

**திரு. கிருபானந்தசிவம், பி.எசுசி., எம்.ஈ.டி.**
**திருமதி கோமதி கிருபானந்தசிவம், எம்.எசுசி.**

எந்தவொரு நூல்வேண்டும் என்றபோதும்
ஏற்றமுடன் வழங்குவதும் கழகந்தானே
செந்தமிழின் உயிர்போன்ற முப்பாலுக்குச்
செழுமுரைகள் வெளியிட்டுச் சங்ககாலம்
தந்ததெனும் நூற்கள்தமைப் பேழையோடு
தந்துதவும் சுப்பையா பிள்ளைதானே
இந்தவிதம் உயர்பணிகள் பலவும்ஆற்றும்
இனியதமிழ்ச் சுப்பையா பிள்ளைவாழி.

# வாழ்த்துரைகள்

## தனித் தமிழ்க் காவலர் வாழ்க!

தமிழ் மக்களின் உள்ளங்களிலெல்லாம் என்றும் நிலைத்து நிற்கத்தக்க அளவுக்குத் தூய தமிழ் வளர்ச்சிக்கும் தமிழரின் நல்வாழ்வுக்கும், அயராது உழைக்கும் பண்பாளர் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் காவலர், தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளையவர்கள் ஆவார். குறிப்பாகப் பண்டைத் தமிழ் மரபினைப் பேணிக் காத்தலிலும், தமிழ் மொழியின் தனித் தன்மையை வளர்ப்பதிலும் தம் வாழ்நாளைக் கழிக்கும் அத்தகை உரனுடையார் பவள விழா மட்டுமன்றி மேலும் பல விழாக்கள் கண்டு நீடுவாழ இறைவன் அருள் புரிவானாக.

—தவத்திரு குன்றக்குடி அடிகளார்
(தங்கல்) நெல்லை.

## பீடும் புகழும் பெருஞ் செல்வமும் பெற்று வாழ்க!

அன்னாருக்குச் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவ ஞானமும், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமும், உவமையிலாக் கலைஞானமும் உணர்வரிய மெய்ஞ் ஞானமும், சிந்தித மனோரத சித்தியும், அரோகதிடகாத்திரமும், தீர்க்காயுளும், அஷ்டஐஸ்வரிய ஆதிக்கமும், நித்திய மங்கள குருகடாக்ஷமும், மென்மேலும் பெருக உண்டாகத் திருவருள் பாலிக்குமாறு, எல்லாம் வல்ல எம் அங்கயற்கண்ணி பங்கனும் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தனை செய்த விபூதிப் பிரசாதமும், குங்குமப் பிரசாதமும் இத்துடன் எழுந்தருளச் செய்திருக் கிறோம். எல்லோரும், திருவருட்கவசமாக அணிந்து மேன்மை யுறுவீர்களாக, எல்லோருக்கும் ஆசீர்வாதம்.

—ஸ்ரீ-லஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்
மதுரை ஆதீனம்.

## தமிழ் போல என்றும் வாழ்க!

தாங்கள் பாராட்டுப் பெறுவது நெல்லைக்குப் பெருமை. நெல்லைவாழ் அன்பர்களுக்குப் பெருமை. தாங்கள் அடையும் பெருமையில் யானும் பெருமை அடைகிறேன்.

தமிழை வளர்த்தீர்கள். தமிழ் உங்களை வளர்க்கிறது. வாழ்விக்கிறது. "தமிழ்போல என்றும் வாழ்க" என்று வேண்டு கிறேன்.

—திரு. டி. என். சுகி சுப்பிரமணியன்
அகில இந்திய வானொலி, சென்னை.

## ஆழ்கடல் செம்பவளம் போன்றவர்

வெள்ளி விழா, பொன் விழா, மணி விழா போன்று, 75 ஆண்டு நிறைவைக் குறிக்கும் பவள விழா நிகழ்த்துவது ஒரு புதிய நல்ல முயற்சி. இப் புதிய மரபைக் கழகம் துவக்கி வைப்பது பாராட்டிற் குரியது. மேலும் முதன் முதலில் இதனைத் துவக்கும் கழகம் அதன் ஆட்சியாளரின் சிறப்புடன் இதனை இணைத்து, விழாவினைக் கொண்டாடுவது மிகவும் பொருத்த முடையது. குடத்திலிட்ட விளக்குப் போல, அமைதியுடன் தம் தமிழ்ப் பணியை ஆடம்பரமின்றிச் செய்துவரும் பிள்ளை, ஆழ் கடலில் மறைந்திருக்கும் செம்பவளம் போன்றவர். அவருக்கு என் உளம் நிறைந்த வாழ்த்துகள்.

**—டாக்டர் சுப. சண்முகநாதன்**

*முதல்வர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.*

## வரலாற்றில் இடம்பெறும் உயர்தொண்டு

தாங்களும் தங்களுடைய அருமைத் தமையனாரும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமும் தமிழுக்கும், தமிழர் நல்வாழ் வுக்கும் செய்துள்ள தொண்டு மிகப் பெரிது. தமிழ் வரலாற்றில், இருபதாம் நூற்றாண்டில் தமிழ் வளர்ந்த வளர்ச்சியைக் குறிப் பிடுகின்ற பொழுது, அத் தொண்டு ஓர் உயரிய இடம்பெறும் என்பதில் ஐயமில்லை.

**—திரு. தே. பெ. சு. பழநிசாமி**, *பி.ஏ., பி.எல்.,*

*துணை நீதிபதி, குடந்தை.*

## செய்வன திருந்தச் செய்யும் செம்மல்

ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாக அருந்தமிழ் மொழியின் வலிவையும் பொலிவையும் பெருக்கி, எழிலையும் ஏற்றத்தையும் கூட்டுவதற்காகப் பல்வேறு துறைகளாலும் முறைகளாலும் அச் செந்தமிழ்ச் செம்மல் ஆற்றிவரும் தொண்டுகள் நாடும் மக்களும் நன்கு அறிந்தவை; எண்ணி எண்ணி மகிழ்வதற்கு உரியவை; இளையோரும் முதியோரும் ஒருங்கே பின்பற்றி நடப்பதற்கு ஏற்றவை. செய்வன திருந்தச் செய்யும் இயல்பும், தொடுத்த வற்றை முடித்துக் காட்டும் ஆற்றலும் எப்போதும் புதிய எண்ணங்கள் அலைமோதும் உள்ளமும் படைத்தவர் அருங்குண அண்ணல் திரு சுப்பையா பிள்ளை அவர்கள். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இந்நாளில் பெற்றுள்ள சிறப்பும் செம்மை

யும், பிள்ளை அவர்களின் பெருந் தொண்டுகளால் தமிழகம் பெற்ற செல்வங்களாகும்.

— **பேராசிரியர் மணிமொழியார் இளஞ்செழியன்**, எம்.ஏ
காஞ்சிபுரம்.

## ஈடு இணையற்ற தொண்டு!

தாங்கள் ஆற்றிவரும் தமிழ்த் தொண்டு ஈடு இணையற்றது, தனிவழி யுடையது, பலதுறை யுடையது. வழிவழிச் செல்வது. தங்கள் திருவுரு தமிழ்த் திருவுரு. இவ்வுரு மேலும் பொலி வோடு வாழ்க. தமிழ் நாகரிகத்துக்காக வாழ்க.

உலகிற்குத் தமிழின் சிறப்பைப் பரப்பிய போப்பையரின் நூல் வெளியீடு தங்கள் பவள விழாவில் நடைபெறுவது தங்கள் தொண்டின் வெளியீடாகும்.

—**டாக்டர் வ. சுப. மாணிக்கம்**
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

## முப் பண்புகளின் முதல்வர்

கடந்த 53 ஆண்டுகளாய்க் கழகம் விடா முயற்சியுடன் ஆற்றிய பணியைக் கல்வி யறிவுடையவர் பலரும் அறிவர். இத்தகைய சிறப்பான தொண்டினைச் செய்திட்ட திருவரங்கனார், அவர்தம் இளவல் வ. சு. பிள்ளை ஆகிய இருவரில் முன்னவர் தொடங்கிவிட்ட அடிப்படையை ஒரு கோபுரமாக உயர்த்திட்ட பெருமை தாமரைச் செல்வர் (பத்மஸ்ரீ) வ. சு. பிள்ளையவர்களின் உள்ளத்தின் உயர்வை, ஊக்கத்துடன் கூடிய உழைப்பைத்தான் தெள்ளெனக் காட்டும்.

—**திரு. இரா. க. சுந்தரராசன்**, B.SC., M.Ed.
தூத்துக்குடி.

## அளவிட முடியா அரிய பணிகள்

பதிப்புப் பணியை மையமாகக் கொண்டு தமிழிற்கும், சைவத்திற்கும் எவ்வெவ்வாற்றான் எல்லாம் பணி செய்ய இயலுமோ அவ்வாறெல்லாம் பணி செய்து வருகின்றவர்கள் தாங்கள். படிப்பாரின்றியும், பண்பையும் அறிவையும் அறிவா ரின்றியும் கிடந்த நூல்களையும்; புலவர் பெருமக்களையும் தமிழகம் மட்டுமல்ல; உலகனைத்தும் உணரவும் போற்றவும் செய்த பெரும்பண்பு எத்துணை? அத்துணையும் அளவிடப் போமோ?

—**திரு. கு. சுந்தரமூர்த்தி**, எம்.ஏ.
திருப்பனந்தாள்

## சாலப் பொருத்த முடைய விழா !

பவளம் செந்நிறங் கொண்டது. தாங்களோ செந்தமிழ்க் கொண்டல்; செந்நெறியாளர்; செம்மேனியன் அன்பர். விழாவில் பங்கேற்கும் செட்டி நாட்டரசரோ, கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கன்னன் போன்ற செம்மையுற்ற செங்கரங் களையுடைய வள்ளல் பெருந்தகை. தமிழக முதல்வரோ காலை நேர சூரியன் மக்கள் உளங்களைக் கவர்வது போன்று, அவ்வுதய சூரியனையே சின்னமாகக் கொண்டு, அச் சூரியனே தாமாக விளங்கி, மக்கள் உள்ளங்களால் கவரப்பட்டுச் செங்கோல் செலுத்துகின்றார். அவர் வழிநின்று செம்மை யுற்றனர் நாவலர், பேராசிரியர் முதலியோர். தவத்திரு அடிகளாரோ செம்மேனியன்மீது பற்றுண்ட செந்நிறை உடை யுடை செந்நெறியாளர். நம் ஆளுநரோ செந்நெறி எந் நெறியோ அந்நெறி தந்நெறி யாகத் தமிழகத்தை நடத்திச் செல்லும் தகையுடை அன்பர். அவர் மேனியும் சிவப்பு. கொவ்வைச் செவ்வாயில் எப்பொழுதும் புன் சிரிப்பு.. டாக்டர் வ. சுப. மாணிக்கனாரோ தமிழின் ஆக்கமே தமது ஊக்கம்—உயிர் எனக் கொண்ட செம்மையாளர். சிலம்புச் செல்வரோ, தண்டமிழ்க் காப்பியமாம் சிலம்பில் கரைகண்ட செந்நெறி யுடைய செந்தமிழ்ச் செல்வர். இங்ஙனம் கலந்து கொள்ளும் உள்ளங்கள் செம்மைக்கு ஒளி விளக்காம் செல்வர் உள்ளங்கள். இத்தகையுடைச் செல்வர்கள் பலர் வாழ்த்த நடைபெறும் தங்களது 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்குச் செந்நிறப் பவளத்தின் பெயரினை யிட்டுப் ''பவள விழா'' என அழைத்தது சாலப் பொருத்தமே.

**—திரு. கோ. வெ. சு. திருநாவுக்கரசுப் பிள்ளை**
கோற்கை.

மற்றும் கீழ்க்காணும் பெருமக்களிடமிருந்தும் கடிதங்களா கவும், கம்பிவழிச் செய்திகளாகவும் வாழ்த்துக்கள் வந்துள்ளன :

மேதகு, பி. டி. ஜட்டி, ஆளுநர், ஒரிசா; தலைவர் காமராஜ், சென்னை; டாக்டர் வ. ஆ. தேவசேனபதி, சென்னை; பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், சென்னை; நீதிபதி பூ. ரா. பக்கிரிசங்கர், மதுரை; தி. மு. நாராயணசாமிப் பிள்ளை, திருச்சி; ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, மதுரை; டாக்டர் ராதா தியாகராசன், மதுரை; டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி,

கோவை ; E. வெண்ணிமாலை, பி.ஏ., பி.எல்., தூத்துக்குடி ; குருகுலம் அழகரடிகள், மதுராந்தகம் ; கே. இராஜா, பி.ஏ., பி.எல்., சென்னை ; டாக்டர் எம். வி. விசுவநாதன், ராயபுரம் ; க. வச்சிரவேல் முதலியார், காஞ்சிபுரம் ; பேராசிரியர் நயினார் முகம்மது, திருச்சி ; அ. திருமலைமுத்துசாமி, சென்னை ; டாக்டர் வ. சுப. அண்ணாமலை, மதுரை ; டாக்டர் பி. கோதண்டராமன், அண்ணாமலை நகர் ; டாக்டர் ச. அகத்தியலிங்கம், அண்ணாமலை நகர் ; திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம், திருச்சி ; டாக்டர் கி. கருணாகரன், அண்ணாமலை நகர் ; முத்தரசு, திரு. வைகுண்டம் ; டாக்டர் சொ. சிங்காரவேலன், மாயூரம் ; பேராசிரியர் ஆ சிவலிங்கனார், மயிலம் ; சைவப் புலவர் கு. சுந்தரமூர்த்தி, எம்.ஏ , திருப்பனந்தாள் ; பொ. மாணிக்க வாசகம், வரகனேரி, திருச்சி ; பெருஞ்சித்திரனார், கடலூர் ; அனந்தபத்மநாபப் பிள்ளை, திருவைகுண்டம்; ஜி. வரதராஜன், திருச்சி ; சீர்காழி கோவிந்தராஜன், சென்னை ; புலவர் சுந்தர சண்முகனார், புதுவை ; டாக்டர் வி. மி. ஞானப்பிரகாசம், பாளையங்கோட்டை ; டாக்டர் சோ. ந. கந்தசாமி, அண்ணாமலை நகர் ; சி இராமலிங்கம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ; டாக்டர் கா. சி. விநாயகம், மதுரை ; இராம. சண்முகம், மதுரை ; டாக்டர் 'ஆர். சண்முகம், திருநெல்வேலி ; அழகு சுந்தரம் செட்டியார், மதுரை ; தி. கி. சுந்தரமூர்த்தி, மதுரை ; மு. சதாசிவம், எம்.ஏ., ஈரோடு ; பண்டித சாம்பசிவன், மதுரை ; சி. சுப்பிரமணியன், வல்லநாடு ; நுண்கலைச்செல்வர் அ. இராகவன், பாளையங்கோட்டை ; கோ. வே. பெருமாள், எம்.ஏ., பி.டி., திருநெல்வேலி ; ஆபிரகாம் அருளப்பன், பி.ஏ., பாளையங்கோட்டை ; கவிஞர் பு. ஆ. முத்துக்கிருஷ்ணன், புதுப்பாளையம் ; உமாமகேசுவரி, பாளையங்கோட்டை ; உ. சுப்பிரமணியன், பாகனேரி ; இரத்தின சபாபதி செட்டியார், கும்பகோணம் ; குற்றாலலிங்கம் பிள்ளை, எல்.ஐ.சி., நெய்வேலி ; நா. ப. தணிகையரசு, காஞ்சிபுரம் ; கிருஷ்ணமராஜா, கும்பகோணம் ; இளமுருகு பொற்செல்வி, குளித்தலை ; திருச்சி தமிழ்ச் சங்கத்தார் ; ந. ம. ரா. சுப்பராமன், மதுரை ; எஸ். வெள்ளைச்சாமி நாடார், விருதுநகர் ; டாக்டர் பாபு, திருநெல்வேலி ; ஐயா சுப்பிரமணிய முதலியார், சென்னை ; வெற்றிவேல், மதுரை ; இ. க. சே. வள்ளிநாயகி, தூத்துக்குடி திலகவதியார் மாதர் கழகம் ; செ. இலக்குமி நாராயணன், மதுரை ; அருணகிரி இசைக் கழகம், திருநெல்வேலி.

# புகழ்ப் பூந்துணர்

*தாமரைச் செல்வர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மூலம் தமிழ் நெறிக்கும், சிவநெறிக்கும் அரும்பெரும் தொண்டாற்றி வருகிறார்கள்.*

மாண்பமை சி. சுப்பிரமணியம் அவர்கள், புதுதில்லி

*தமிழ்கூறும் நல்லுலகம் அனைத்திலும் சிறப்புமிக்க இடத்தைப் பெற்ற தமிழ் அறிஞரான திரு. சுப்பையா பிள்ளை அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் நலமுற வாழ்ந்து வளம்பெற என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

மாண்புமிகு அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள், சென்னை

*இதுகாறும் சீரிய முறையில் செய்து வந்திருக்கும் சமயத்தொண்டு, இலக்கியத் தொண்டு, அறநிலையத் தொண்டு முதலிய பல சிறப்புமிக்க தொண்டுகளைத் தொடர்ந்து செய்துவர மனமார வாழ்த்துகிறேன்.*

உயர்திரு கு. காமராஜ் அவர்கள், சென்னை

*''அரசியல் 'கழகம்' என்றால்<br>ஆம். அது 'தி. மு. க.'தான்<br>வரிசை நூல் 'கழகம்' என்றால்<br>வ. சு. வின் கழகம்' தானே !''*

கவிஞர் திரு. கா. வேழவேந்தன், எம்.எல்.ஏ. அவர்கள் சென்னை

*தரமான, பயனுள்ள நூல்களை இலக்கிய மணம் கமழக் கழகம் வெளியிடுகின்றதென்றால், இன்று கழகம் தமிழகத்தில் தன்னேர் இல்லாத் தனிப் பெருமையைக் கொண்டு திகழ்கின்றதென்றால், அவற்றிற்கெல்லாம் திரு. சுப்பையா பிள்ளை அவர்களின் திறமையும், சலியா உழைப்புமே காரணமாகும்.*

கம்பன் அடிப்பொடி சா. கணேசன், எம். எல். சி. காரைக்குடி

*தாமரைச் செல்வர் திரு. பிள்ளை அவர்கள் தமிழ்மொழிக்குச் செய்துள்ள சேவை—செய்துவரும் சேவை—எம்மனோர் போற்றப் பெருகும் சிறுமை உடைத்தன்று! அப்பெரியவரின் அரிய சேவையை அறியாத் தமிழர், தமிழே அறியாதார் என்றே கூறுவேன்.*

நீதிபதி எம். எம். இசுமாயில் அவர்கள், சென்னை

*எந்நாளும் வாழுகின்ற இலக்கியக் களஞ்சியங்களையெல்லாம் பொன்னேட்டில் புதுப்பித்து, பொங்குதமிழ் அன்புக்கும் பண்புக்கும் புகழ் பரப்பி மணம் வீசும் தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை.*

நீதிபதி பி. எஸ். சோமசுந்தரம் அவர்கள், சென்னை

*திரு. பிள்ளையவர்களுடைய அயராத முயற்சியும் தளராத உற்சாகமும் ஆயிரத்திற்கு மேற்பட்ட பழம்பெரும் தமிழ் நூல்களை அச்சிடக் காரணமாக அமைந்திருக்கின்றன,*

உயர்திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி அவர்கள், சென்னை

*தமிழுக்கு இடையூறு நேரும்போதெல்லாம் உள்ளம் கலங்கி உணர்ச்சிவயப்பட்டுத் தமிழ் அன்னைக்குச் சிறப்புத் தேடும் வகையில் என்ன செய்யலாம் என்று ஆர்வம் காட்டுவதோடு நிற்காமல் தம்மால் இயன்ற பணிகள் எல்லாம் செய்வார். தமிழ் நூல்களை அழகாக அச்சிட்டுத் தரமுடியும் என்பதை முதன்முதலாகச் செய்து காட்டியவர் அவர்.*

டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், மதுரை

*தமிழுக்கு ஒப்பும் இணையும் இல்லாத பணிவிடைகளைச் செய்த—செய்துவருகின்றது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.*

உயர்திரு. செம்பியன் அவர்கள், மாசுகோ, ருசியா

*கழகம் வளர்த்துக் கவினுறவே நாடிப்*
*பழகுதமிழ், சைவம் இரண்டும்—அழகாய்க்*
*குழைத்துக் குறித்துக் கொடுத்திட்ட கோமான்*
*உழைப்பின் உயர்வே உயர்வு !*

வித்துவான் பேராசிரியர் சி. வெங்கடாசலம், எம்.ஏ. பெங்களூர்

*புலவர்களாலும், புரவலர்களாலும் வளர்த்த தமிழ், புதுமை யுகத்தில், திரு. வ. சு. பிள்ளை போன்ற புத்தக வெளியீட்டாளர்களால் தான் வளர்கிறது என்று சொன்னால் மிகையாகாது.*

கேப்டன் என். ஏ. அமீர்அலி, எம்.ஏ. இளையான்குடி, இராமநாதபுரம்

*காலம் கடந்த நூல்களையும், காண்டற்கரியவாய் மறைந்தொழிந்த மாண்புடைய இலக்கியங்களையும் வெளியிடுவதில், இக்கழகம் மிக்க துணிச்சலுடன் செயலாற்றுவது நாமெல்லாம் போற்றிப் பாராட்டும் பெற்றி வாய்ந்தது.*

டாக்டர் இராதா தியாகராசன், எம்.ஏ, பி.எஸ்ஸி., பிஎச்.டி. மதுரை

*தமிழ் மரபினைப் போற்றிக் காப்பதில் கண்ணுங் கருத்துமாக இருப்பவர் திரு. சுப்பையா பிள்ளை யவர்களாவர்.*

திருமதி காந்திமதி அம்மையார், எம்.ஏ., எல்.டி. சென்னை

*செந்தமிழ் நலனைக் காப்பதற்கு அவர் பல வழிகளிலும் இடையறாத முயற்சி செய்து வருகிறார். ஏறத்தாழ கடந்த அரை நூற்றாண்டாக இவர் ஆற்றியுள்ள தமிழ்ப்பணி மலையினும் காணப் பெரிது.*

உயர்திரு ஜி. ஆர். தாமோதரன் அவர்கள், கோவை

*தாமரைத்திரு. சுப்பையா அவர்களின் பெயர் தமிழுள்ளளவும் விளங்கும்.*

உயர்திரு இராம. அரங்கண்ணல், எம்.எல்.ஏ. சென்னை

*செந்தமிழ் நூல்களை வனப்புற அச்சிட்டு வழங்குவதில் கழகத்தின் பெரும் பங்கை நாம் எவ்வளவு பாராட்டினாலும் தகும். அப் பணிகளை எல்லாம் ஊக்கி உருவாக்கும் பெரியாராக நம் பிள்ளை அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.*

வள்ளல் நா. மகாலிங்கம் அவர்கள், பொள்ளாச்சி

*சைவ உலகுக்கும் தமிழ் உலகுக்கும் பெருந் தொண்டாற்றி வரும் திரு. வ. சு. அவர்களைப் பாராட்டுவதைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன்.*

திரு. ஒ. வி. அளகேசன், எம்.பி. புதுதில்லி

*உயர்வான இலக்கணமும் இலக்கியமும், சால்பும் சமயமும் மக்கள் கைக்கு நூல் வடிவில் விளக்க உரைகளுடன் எளிதில் எட்ட வேண்டுமென்று பெருமுயற்சி செய்துள்ள திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.*

தவத்திரு இரா. அருளப்பா, சென்னை

*அவர் நூல் பதிப்பிற்குச் செய்த பணி மிகப் போற்றத்தக்கது. தமிழன் அருமையை எடுத்துக்காட்ட, சைவசித்தாந்தத்தின் பெரு*

மையை உணர்த்த, பல பொதுக்கூட்டங்கள், விழாக்கள் அவர் ஏற்பாடு செய்து சேவை புரிந்துள்ளார்.

**உயர்திரு டி. செங்கல்வராயன் அவர்கள், எம்.ஏ., எல்.எல்.பி. சென்னை**

*தமிழுக்கு ஊறு நேரும்போலிருந்தகாலை, தமிழ்த்தாயின் தொண்டர்களுக்குத் தொண்டராய்த் தொண்டாற்றியவர்கள்; ஆட்சித் தமிழுக்கு வித்திட்டவர்கள்.*

**உயர்திரு தலைமைப் பொறியர் சே. பா. நமசிவாயம், பி.இ. சென்னை**

*சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நமது தமிழ்மொழிக்குச் செய்துள்ள அரும்பெரும் பணிகள் அளப்பில.*

**உயர்திரு கே. எஸ். நரசிம்மன், ஐ.ஏ.எஸ். அவர்கள் சென்னை**

*கழக வெளியீடுகள் மிகுந்த வனப்புடன் அச்சுப்பிழையின்றி, நல்ல கட்டுக்கோப்புடன் அயல்நாட்டு வெளியீட்டுக்கு ஒப்ப இருக்கின்றன.*

**உயர்திரு தி. கா. சங்கரவடிவேல், ஐ.ஏ.எஸ். (ஓய்வு), சென்னை**

*அன்னாரின் ஆழ்ந்த தெய்வ பக்தியும், அனைவரிடமும் இனிமையாகவும், அன்புடனும் பழகும் பாங்கும், அயரா ஊக்கமும் உழைப்பும் விடாமுயற்சியும், செய்வன திருந்தச் செய்யும் திறனும், அரிய சாதனைகளும் அனைவரும் புகழ்ந்து போற்றிப் பாராட்டுதற்குரியவை.*

**உயர்திரு தி. கா. பழனியப்பன், ஐ.ஏ.எஸ். (ஓய்வு), சென்னை**

*எங்கெல்லாம் அரிய சுவடிகள் உள்ளனவோ அங்கெல்லாம் நாடிச் சென்று அவற்றைச் சேகரித்துச் செம்மைப்படுத்தி அறிஞர்கள் உதவி கொண்டு அவற்றை அச்சிட்டு இக்காலத்தவர்களுக்கன்றி வருங்காலப் பரம்பரையினர்களுக்கும் தந்துள்ளார்கள்.*

**உயர்திரு கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ.ஏ.எஸ். (ஓய்வு), சென்னை**

*சைவசித்தாந்தம் தற்காலத்தில் அநேக பெரியோர்களால் மனத்தைத் திருப்தி செய்யக்கூடிய சித்தாந்தம் என்று போற்றப்படின் அதற்கு திரு. சுப்பையா பிள்ளையின் இடைவிடா முயற்சியும் பிரசாரமுமே ஒரு முக்கிய காரணமாகும்.*

**உயர்திரு ஆர். வி. கிருஷ்ணையர், பி.ஏ., பி.எல்., சென்னை**

*இந்தக் கழகம் தமிழ்நாட்டில் ஈடு இணையற்ற ஒரு தனிப்பெரும் சிறுவனமாகவே வளர்ந்துவிட்டது. இது தோன்றிய நாள் முதல் இதனுடன் பல பெரியார்கள் இணைந்து செயல்பட்டுள்ளனர். ஆட்சியாளர் தொகுதியில் தாமரைச் செல்வர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் தலைசிறந்த ஒருவராய்த் திகழ்கின்றார்.*

**திரு. மா. சே. சாரங்கபாணி முதலியார், பி.ஏ., பி.எல். சென்னை**

*கழகத்தின் ஆட்சியாளர் என்னும் பொறுப்புமிக்க பதவியில் தாம் இருந்தும் அச்சிட்டு வருவனவற்றைத் தாமே மணிக்கணக்காக ஊன்றிக் கவனித்துப் பிழை நீக்குவதை நான் பார்த்திருக்கிறேன்.*

**உயர்திரு மா. காசிவிசுவநாத பிள்ளை, எம்.ஏ., திருச்சி**

*சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இளமையில் வெளியிட்டுள்ள தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் திரு. சுப்பையா பிள்ளை அவர்களின் அயராத உழைப்பிற்கும், ஆர்வத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.*

**உயர்திரு இரா. சண்முகம், எம்.ஏ., எல்.டி., ஐ.ஏ.எஸ்.**

It is a matter of satisfaction for me to see that the Tamil Society highly appreciate and respect the services of this outstanding veteran of Tamil Culture.

*—Dr. M. Andronov, U. S. S. R.*

Shri Subbiah Pillai has happily lived to see the fruition of his aims and ideals and needless to say has played no small part in the literary and spiritual resurgence in Tamil Nadu.

*—Dr. K. Kailasapathy, M. A., Ph.D., (Birm) Ceylon.*

If we are now moving into a period in which the Tamil literary heritage is properly appreciated both by foreigners and by those who enjoy the inestimable privilege of having Tamil as their mother tongue, much of the credit goes to Thiru Subbiah Pillai.

*—Dr. R. E. Asher, U. K.*

For quite a number of years when it was not only difficult for me to go to India to study Tamil and its enormous cultural heritage in the field, but also to obtain the necessary texts, Thiru Subbiah and the South India Saiva Siddhantha Works Publishing Society were most helpful in getting me the necessary books indispensable for serious scholarly work in the field.

*—Dr. Kamil Zvelebil, Netherlands.*

I am happy to have in my library here in the United States many volumes of his publications and to refer to them frequently as my knowledge of Tamil literature progresses.

*—Dr. Albert Franklin, U. S. A.*

To Thiru Subbiah Pillai's industry, initiative and enterprise is due the availability today to the standard classics of every period of Tamil, and the reprints of many valuable works on Tamilology in English

*—Rev. Dr. X. S. Thani Nayagam, Ceylon.*

Thiru V. Subbiah Pillai's life work for Tamil literature is naturally of the highest value for the Tamils in building their national culture further on grounds laid thousands of years ago.

*—Mr. Pentti Aalto, Finland*

It was due to the untiring efforts of Padma Shri Subbiah Pillai and others that the Tamil literary flag spread to the English speaking countries.

*—Mr. G. A. De. Silva, Malaysia.*

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : வ. சுப்பையா.